வருடாந்த அறிக்கை 2022



கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

இல.117, சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொடை

உள்ளடக்கம்

கௌரவ தலைவர் அவர்களின் செய்தி 163

நிறுவனத்தின் பார்வை மற்றும் பணி அறிக்கை 165

பணிப்பாளர் சபை 166

தாபனக் கட்டமைப்பு 167

முன்னுரை 168

செயற்பாட்டுப் பிரிவு 171

காப்புறுதிப் பிரிவு 175

ஓய்வூதியப் பிரிவு 181

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 188

நிர்வாகம் மற்றும் மனித வளங்கள் பிரிவு 192

திட்டமிடல் பிரிவு 200

நிதிப் பிரிவு 207

கடந்த ஐந்து வருடங்களின் நிதிசார் தகவல்கள் 209

2022 மொத்தத் திட்டங்கள் மற்றும் விவசாயக் காப்பீட்டுத் திட்டத்திற்கான கணக்குகளின் ஒருங்கிணைந்த அறிக்கை 213

2022 திசம்பர் 31 ஆந் திகதிக்கு நிதிக் கூற்று கமக்காரர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டம் 239

2022 திசம்பர் 31 ஆந் திகதிக்கு நிதிக் கூற்று கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டம் 259

ஆடிட்டர் ஜெனரல் அறிக்கைகள் 278

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகளின் பொருட்டு பதில்கள் .312

கௌரவ தலைவர் அவர்களின் செய்தி

2022 ஆம் ஆண்டில், கமத்தொழில் காப்புறுதிச் சபை,1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைசட்டத்தின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, உள்ளூர் விவசாயிகளின் அவதானமான நிலையை முகாமைப்படுத்தும் பொருட்டும் மற்றும் 1987 ஆம் ஆண்டின்12இலக்கமுடைய விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் சட்டம் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கமுடைய கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி, விவசாயிகள் மற்றும் கடற்றொழிலாளர் சமூகத்தின் வாழ்வில் சமூகப் பாதுகாப்பு வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளை சபையின் தொலைநோக்கு, பணி மற்றும் நோக்கங்களுக்கமையபரந்த அளவில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாகஅவதானம் செலுத்தப்பட்டது.

அதற்கமைய, சபையினால் விவசாயக் காப்புறுதி, கால்நடைக் காப்புறுதி, திடீர்விபத்து மற்றும் மூன்றாம் தரப்புக் காப்புறுதித் திட்டங்களை, மக்கள் மயப்படுத்துவதன் தேவைபாடுகள் தொடர்பாக அடையாளம் கண்டு, பல்வேறு நடமாடும் வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு கமக்காரர்களுக்கு மிகவும் நெருக்கமான மற்றும் பயனுள்ள சேவையை வழங்கும் நிறுவனமாக உருவாக்கும் பொருட்டு நடவடிக்கைகள்2022ஆம் ஆண்டு மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் தொலைநோக்கு, பணி மற்றும் குறிக்கோள்கள் நோக்கியபயணத்தை வழிநடத்துவது பிரதான காரியாலயத்தின் சகல பிரிவுகளினதும் பொறுப்பாகும் என்பதுடன்,அந் நோக்கங்களை அடையும் பொருட்டு, 25 மாவட்டங்களிலும் உள்ள 30 மாவட்ட அலுவலகங்கள் மூலம் செயல்பாடுகளுடனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் பொருளாதாரச் சிரமமின்றி வாழ்வைக் கழிக்கும் வகையில், தற்போதைய பொருளாதாரச் சூழலுக்கு ஏற்ப விவசாயிகளின் உழைப்புக்கு ஏற்ப பங்களிக்கக் கூடிய புதிய விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் ஆரம்ப விழா,விவசாய அமைச்சர் மாண்புமிகு மஹிந்த அமரவீரஅவர்கள் தலைமையில் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் 31.12.2022 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 31.12.2022 ஆந் திகதி இம்முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் 494 விவசாயிகள் பங்களித்துள்ளனர் என்பதுடன், அவர்கள் தவணைப் பணமாகச் செலுத்தியுள்ள பணம் ரூபா6,741,309.56 /- ஆகும்.

கமத்தொழில் காப்புறுதித் திட்டங்களை ஊக்குவிப்பதற்கான முன்னுரிமையைக் கருத்தில் கொண்டு , தற்போதுள்ள பயிர்க் காப்புறுதித் திட்டங்களை தற்போதைய விற்பனைச் சந்தைக்கு ஏற்றவாறு இற்றைப்படுத்தும் பொருட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.
1987 இல் செயல்படுத்தப்பட்ட விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டத்தின் கீழ், 2022 இறுதியில்,169,741 ஓய்வூதியதாரர்கள் ரூபா4,053,350,019/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. மேலும், சபையினால் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டத்தின் கீழ், 5556 கடற்றொழிலாளர்களின் பொருட்டு ரூபா 80,034,415/-, 2022

திசம்பர் 31 ஆம் திகதியாகும் போதுவழங்கப்பட்டு,அவர்களுக்கு ஆரோக்கியமாக ஓய்வினைக் கழிக்கும் பொருட்டு பங்களிப்புச் செய்துள்ளமையை தொடர்பாக் குறிப்பிடப்படுவதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.
இது தவிர, சபையினால்நடைமுறைப்படுத்தப்படும் மூன்றாம் தரப்புக் காப்புறுதித் திட்டம் உட்பட ஏனையகாப்புறுதித்திட்டங்கள் மூலம், முன்னைய வருடத்தைவிட 10% வளர்ச்சி காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய, சபையானதுசம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், நிர்வாகச் செலவுகள் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொண்டு,சுயநிதி அடிப்படையின்கீழ் இயங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினால் 2022 ஆம் ஆண்டில், கமத்தொழில் காப்புறுதி திட்டத்தினால்,2,319மி.ரூபா நிகர இலாபம் ஈட்டப்பட்டியுள்ளதுடன்,இவ்வாண்டு உழைந்துள்ளசெயற்பாட்டு இலாபமானது2,663.1 மி.ரூபாயாகும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத் துரிதமாக இழப்பீட்டுப் பணம் வழங்குவது சபையின் முதன்மைப் பணியாகும் என்பதுடன்,2022ஆம் ஆண்டில் நாட்டின் பல கமத்தொழில் மாவட்டங்களில் கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பொருட்டு சபையின் கட்டாயப் பயிர் காப்புறுதிப் இழப்பீட்டுப் பொறுப்பு698.6 மி.ரூபா அளவில் உள்ளது. 2022ஆம் ஆண்டில் கட்டாயப் பயிர்க் காப்பிறுதித் திட்டத்தின் மூலம்55.6மி.ரூபா வருமானமும், மூன்றாம் தரப்புக் காப்புறுதித் திட்டங்களின் மூலம் 311மி.ரூபா வருமானமும், ஏனையகாப்புறதித் திட்டங்களின் மூலம் 23.7%மி.ரூபா வருமானத்தையும் உழைத்துக் கொள்வதற்கு சபைக்கு இயலுமாகிவிருந்தது.

நிலவும் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றைச் சீர் செய்து கமத்தொழிலாளர்கள் மற்றும் கடற்றொழிலாளர் சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தை மேலோங்கச் செய்யும் வகையில், தற்போதைய பொருளாதார பணவீக்கத்திற்குப் பொருத்தமானவாறு அவர்களின் தேவைப்பாடுகள் தொடர்பாக மேலும் அக்கறையுடன் செயற்பட்டதன் ஊடாகச் சபையின் நோக்கங்களை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சாதித்த ஆண்டாக2022ஆம் ஆண்டைக் குறிப்பிடலாம்.

தலைவர்,
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

நிறுவனத்தின் பார்வை மற்றும் பணி அறிக்கை

- **தொலை நோக்கு...**

உள்ளூர் கமத்தொழிலாளர்களின்முதன்மைப் பாதுகாப்பாளராகவிருத்தல் மூலம் தெற்காசியாவில் மிகச் சிறந்த முன்னுதாரணமாகத் திகழும் காப்புறுதிநிறுவனமாகவிருத்தல்

- **பணிகள் ...**


கமத்தொழில்காப்புறுதிமற்றும் சமூகப் பாதுகாப்பினை ஏற்படுத்தும்பொருட்டு கூட்டு முயற்சிகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் ஒருங்கிணைப்பதன் மூலம் சர்வதேச ரீதியாகவும்ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறப்பான சேவையை வழங்குதல்

பணிப்பாளர் சபை- 2022

	பெயர்	பதவி
01	சட்டத்தரணி திருபிரேமச்சந்திர எப்பா திருஹசான் திஸாநாயக்க கலாநிதி டப்ளீயூ.எம்.எம்.பீ, வீரசேகர தலைவர் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை	தலைவர்
02	கலாநிதி அஜந்த டீ சில்வா பணிப்பாளர் நாயகம் விவசாயத் திணைக்களம்	உறுப்பினர்
03	ஆர்.எம்.டீ.கே.ஜீ.என்.டீ. ரணதுங்க மேலதிகப் பணிப்பாளர்(ப.க.) திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம்	உறுப்பினர்
04	டாக்டர்சீ.என்.எஸ். கமகே பணிப்பாளர்(கால்நடை வளங்கள் திட்டமிடல்) கால்நடை வளங்கள் விவசாயப் பண்ணை ஊக்குவிப்பு மற்றும் பால் மற்றும் முட்டை தொடர்பான தொழில்துறை இராஜங்க அமைச்சு	உறுப்பினர்
05	திரு ஏ.எச்.எம்.எல். அபேரத்ன ஆணையாளர் நாயகம் கமநல அபிவிருத்தித் திணைக்களம்	உறுப்பினர்
06	திருஆர்.ஏ.டீ.எஸ்.ரணதுங்க பணிப்பாளர் நாயகம்(தொழில்நுட்பம்) கடற்றொழில் அமைச்சு புதிய செயலகம் மாளிகாவத்தை, கொழும்பு 10	உறுப்பினர்
07	திரு ஜீ.ஜீ தனஞ்சய நந்தசிறி உதவி உப தலைவர் / கிளை முகாமையாளர் DFCC வங்கி மாத்தறை	உறுப்பினர்
08	திருமதி நிலாக்ஷி என். குணசேகர மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்) விவசாய அமைச்சு	உறுப்பினர்
09	திரு எஸ்.எம்.ஜீ' சமரகோன் 120, ஹுருல்மீகஹபிட்டிய, மீகொடவெவ, அனுராதபுரம்	உறுப்பினர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

தாபனக் கட்டமைப்பு



முன்னுரை

கமத்தொழிலின் நிலைபேறானஅபிவிருத்தியின் பொருட்டு செயற்படுத்தப்படும் தேசியவேலைதிட்டங்களின் போது, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை பாரிய கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றது. விவசாய அமைச்சுக்கு சொந்தமான ஒரு கட்டுப்பாட்டு நிறுவனமாக, நிதி ஸ்திரத்தன்மை மற்றும் இடர் முகாமைத்துவத்திற்கு நேரடியாகத் தொடர்புடைய கமத்தொழில் துறையில் காப்புறுதி சேவைகளை வழங்கும் பொருட்டு நாட்டின் அர்ப்பணிக்கப்பட்டஒரேயொரு அரசாங்கம் நிறுவனமாக,அவசரகால இடர் சூழ்நிலைகளின் போது, கமத்தொழில் மற்றும் கமத்தொழிலாளரைப் பாதுகாப்பதற்காக அரசிற்குக் கையளிக்கப்பட்டுள்ளபொறுப்புக்களை நிறைவேற்றுவது இச்சபையின் தலையாய கடமையும் பொறுப்புமாகும்.

அதற்மைய, உள்ளூர் கமத்தொழிலை மேம்படுத்தல் மற்றும் கமத்தொழிலாளர்களின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் பொருட்டு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்குவழங்கப்பட்டுள்ள பொறுப்பை அதிகபட்சமாக நிறைவேற்றும் நோக்காகக் கொண்டு, பின்வரும் பிரதான பிரிவுகளின் கீழ் காப்புறுதி மற்றும் பலசமூகப் பாதுகாப்புதிட்டங்களை இச்சபையானதுநாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

- சமூக பாதுகாப்பு த் திட்டங்கள்
- பயிர்க் காப்புறுதித் திட்டங்கள்
- கால்நடைக்காப்புறுதித் திட்டங்கள்
- சாதாரண காப்புறுதித் திட்டங்கள்
- மோட்டார் வாகனம், உபகரணங்கள் மற்றும் களஞ்சியக் காப்புறுதித் திட்டங்கள்

மேற்படி பிரிவுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்கு மேலதிகமாக இலங்கை விவசாயிகளின் தேவைகளுக்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு ஏற்ப விவசாயத் துறையுடன் தொடர்பான கமத்தொழில் நடவடிக்கைகளை உள்ளடக்கிய வகையில்காப்புறுதித் திட்டங்களைத் திட்டமிட்டுநடைமுறைப்படுத்துவதற்கு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

வருடாந்தத் தவணைப்பண வருமானம் 2018 தொடக்கம் 2022 வரையில்

காப்பீட்டுத் திட்டம்	2018 (மி.ரூபா)	2019 (மி.ரூபா)	20 20 (மி.ரூபா)	20 21 (மி.ரூபா)	20 2 2 (மி.ரூபா)
பயிர்க் காப்பீட்டுத் திட்டங்கள்	128.01	61.11	45.89	74.24	**5 5 . 69**
கால்நடை காப்பீட்டுத் திட்டம்	10.59	7.87	5.78	11.07	**5.2 5**
சேமிப்பு/ விவசாய உபகரணங்கள் மற்றும் மூன்றாம் நபர் காப்பீட்டுத் திட்டங்கள்	137.85	220.15	278.94	296.50	**311.0 4**
சுவசெத மற்றும் திடீர் விபத்து காப்புறுத் திட்டங்கள்	6.34	9.42	13.78	9.04	**18.6**
மொத்தம்	282.79	298.55	344.39	390.85	**390.5**

ஆண்டு நிகர லாபம் 2018 முதல் 2022 வரை

(கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை- குழு)

	2018 (மி.ரூபா)	**2019 (மி.ரூபா)**	**20 20 (மி.ரூபா)**	**20 21 (மி.ரூபா)**	**20 2 2 (மி.ரூபா)**
மொத்த வருமானம்	4,614.3	3,603.9	3,724.6	3655.2	3,719.8
செயற்பாட்டுச் செலவு	(6.434.5)	(5,825.4)	(6,800.2)	(5,550.4)	(4,819.2)
செயல்பாட்டு மேலதிகம்	(1,820.1)	(2,221.4)	(3,075.6)	(1,895.2)	(1099.3)
அரச அன்பளிப்புக்கள் மற்றும் ஏனையவருமானங்கள்	2,238	2,842.5	4,661	4,011.1	4,167.8
மொத்தச் செலவுகள் (ஒதுக்கீடுகள் உட்பட)	(3,991.4)	(4,499.3)	(4,669.1)	(4,816.7)	(5,187.9)
வருடாந்த நிகர இலாபம்/நட்டம்	(2969)	(3,505.3)	(3,083.7)	(2,700.8)	(2,119.4)

வருடாந்த நிகர லாபம் 2018 இலிருந்து 2022வரையில் (கமத்தொழில் காப்புறுத்தி திட்டம்)

	2018 (மி.ரூபா)	**2019 (மி.ரூபா)**	**20 20 (மி.ரூபா)**	**20 21 (மி.ரூபா)**	**20 2 2 (மி.ரூபா)**
மொத்த வருமானம்	4,398.5	3,365.1	3,530.40	3,456.90	**3,432.32**
இயக்கச் செலவு	(3,253.8)	(2,487.0)	(2,129.10)	(1,704.90)	(**769.1**)
செயற்பாட்டுமேலதிகம்	1,144.7	878.1	1,401.30	1,752.00	**2,663.1**
அரச அன்பளிப்புக்கள் மற்றும் ஏனைய வருமானங்கள்	4.0	9.1	8.30	8.16	**6.74**
மொத்தச் செலவுகள் (ஒதுக்கீடுகள் உட்பட)	(227.7)	(234.9)	(255.90)	(265.80)	**350.9**
வருடாந்த நிகர இலாபம்/நட்டம்	921.0	652.3	1,153.70	1,494.36	**2,319.01**

விவசாயிகளினதும் மற்றும் கமத்தொழினினதும்நிலைபேறான மேம்பாட்டிற்காக, நாட்டின் உணவு உற்பத்தி செயல்முறையை மிகவும் நிலையானதாகவும் வேகமாகவும் மாற்றும்நோக்கத்துடன், விவசாய அமைச்சை அடிப்படையாகக் கொண்டுஅரசினால் கமத்தொழிலாளர்களின் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட மானியப் பசளை போன்று விவசாயிகளின் பொருட்டு ஊக்குவிப்புத் தொகை மற்றும் வசதிகளை வழங்கும் வேலைத்திட்டங்களின் கீழ் நாடு முழுவதும் பரவலாக

பயிரிடப்படும்06பிரதானபயிர்களின் பொருட்டு2018 ஆம் ஆண்டு சிறு போகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலவசமாக வழங்கப்பட்ட கட்டாயக் காப்புறுதித் திட்டம்2022ஆம் ஆண்டும் பிரயோக ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு ஆண்டாகக் கருதலாம்

2022 ஆம் ஆண்டினுள், சபையின் வருமானத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு மூன்றாம் தரப்பு போக்குவரத்துக் காப்புறுதிமுறை வெற்றியளித்துள்ளது.. 2021 ஆம் ஆண்டில் 296.50 மில்லியன் ரூபா வருமானம் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 311.04 மில்லியன் ரூபாவாக அதிகரித்தமை இவ்வருடத்தின சிறப்புதன்மையாகும். மூன்றாம் தரப்பு மோட்டார் வாசனக் காப்புறுதி முறையின் சட்டரீதியான தடைகளைத் தீர்த்தல் மற்றும் மாவட்ட மட்டத்தில் விரிவான விற்பனை மற்றும் மேம்பாட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தியதன மூலம் இவ் முன்மொழிவு முறைகள் தொடர்பாக நம்பிக்கையவிவசாயிகளுக்கு ஏற்படுத்தியதன் விளைவாக இந்த முன்னேற்றம் ஈட்டிக்கொள்வதற்கு இயலுமாகவிருந்தது. இதன் மூலம் உழைத்துக் கொண்ட வருமானம் சபையின் நிதி ஸ்திரத்தன்மையை மேம்படுத்தும் பொருட்டு மிகவும் உதவியாக இருந்தது. மேலும், மூன்றாம் தரப்பு வாகனக் காப்புறுதித் திட்டம் நவீனமயமாக்கப்பட்டு,ஆயுள் காப்புறுதி முறையை இத்திட்டத்தினுள் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் மூலம் வழங்கப்படும் காப்பீடு மட்டத்தை அதிகரிக்கும் பொருட்டு தேவையான அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இவ்வருடத்தில் இயலுமாகவிருந்தது.

2022 ஆம் ஆண்டில் காப்புறுதிப் பிரிவின் மூலம் 2020/2021பெரும் போகம், 2021சிறு போகம், 2021/2022 பெரும் போகத்தின் பொருட்டு பயிர்ச்செய்கைஇழப்பாக சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆவணங்களின் பொருட்டு இழப்பீட்டுத் தொகை 1,578மில்லியன் ரூபா 67,559விவசாயிகளுக்குவிடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் மூலம் நடைமுறைப்படும் பிரதானமான சமூகப் பாதுகாப்பு நலன் திட்டத்தின் கீழ், 2022ஆம் ஆண்டின் இறுதியில்169,300ஓய்வுறுதியாளர்களின் பொருட்டு பயனுறுதிகள் வழங்கப்பட்டது.. அத்துடன், 2022 ஆம் ஆண்டில் புதிய விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் கமக்காரர்கள் சமுகத்திற்கு பாரிய நிவாரணத்தை வழங்குவதற்கும் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக கடற்றொழிலாளர் சமூகத்தின் நலனுக்காக செயற்படுத்தப்படும் கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 2022ஆம் ஆண்டு இறுதியில்5,354கடற்றொழிலாளர்களின் பொருட்டுமாதாந்த ஓய்வூதியம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய கமத்தொழில்மற்றும் கால்நடை உற்பத்திச் செயற்பாட்டின் போது, பரந்தளவில் பங்களிப்பினை வழங்கி இடர்களைக் குறைக்கும் பொருட்டானவலிமையை கமத்தொழிலை முதன்மையாகக் கொண்டு தேசிய கமத்தொழில் உற்பத்திச் செயற்பாட்டிற்கு வழங்குவதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார உற்பத்தி செயற்பாட்டின் முதன்மையான பெரும் பங்கு வகிக்கும் ஒரு நிறுவனமாக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தனது பொறுப்பினை 2022 ஆம் ஆண்டின் போதும் நிறைவேற்றியது.

செயற்பாட்டுப் பிரிவு

செயற்பாட்டுப் பிரிவு – 2022

இடர் முகாமைத்துவ மற்றும் முறையாக உள்ளூர்கமத்தொழில்துறைக்குக் கமத்தொழில் காப்புறுதியை அறிமுகப்படுத்தி, உள்ளூர் விவசாய உற்பத்திகளைஅதிகரித்தல் மற்றும் கமத்தொழிலைப் பாதுகாப்பதைமுதன்மைப் பணியாகக் கொண்டு கமத்தொழில்மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை செயற்படுகின்றது.வறட்சி ,வெள்ளம் ,காட்டு யானை சேதம் போன்ற இயற்கை இடர்களின் போது விவசாயிகள் எதிர்கொள்ளும்பொருளாதாரப் பிரச்சினைகளுக்குச் சிறந்த தீர்வாகக்கமத்தொழில் காப்புறுதித் திட்டம் முக்கியமானதாகும்.மேலும் , விவசாயப் பொருளாதார வாழ்க்கைமுறையின் மூலம் உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் போதுஇடர் முகாமைத்துவத்தை மிகவும் பிரயோக ரீதியாக பயன்படுத்தல், உள்ளூர் விவசாயப் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கை முறையை ஒரு நிலையான மட்டத்தில் பேணிச் செல்வதற்கு பெரும் உதவியாக உள்ளது. விசேடமாகக் கமக்காரர்களுக்கு மிகவும் நெருக்கமான பயிர்க் காப்புறுதித் திட்டம் , கால்நடைக் காப்புறுதித் திட்டம் ,சுவசெத மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதி ,விவசாய உபகரணக் காப்புறுதி ,களஞ்சியக் காப்புறுதி மற்றும் மூன்றாம் தரப்புப்போக்குவரத்துக் காப்புறுதி போன்ற பல நன்மைகளைக் கொண்ட பல காப்புறுதித் திட்டங்கள்விவசாய சமூகத்தின் பொருட்டு சபையின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.

கமத்தொழில்மற்றும் கமநலக்காப்புறுதிச் சபையின் சேவைகளைக்கமக்காரர்களிடையே விரிவுபடுத்தும் போது, மிகவும்முக்கியத்துவம் வாய்ந்த கடமைப் பொறுப்பை நிறைவேற்றுவதற்குச்செயற்பாட்டுப் பிரிவுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.சபையினால் நடைமுறைப்படுத்துவதற்கு என எதிர்பார்க்கப்படும் தொடர் வேலைத்திட்டங்களை உள்ளடக்கிய மூலோபாயத் திட்டத்திற்கு ஏற்ப சகல நிறுவனத் திட்டங்களைத் தயாரித்தல், அத் திட்டங்களைச் செயற்படுத்தும் பொருட்டுநாடளாவிய ரீதியில் பரந்துள்ள மாவட்ட அலுவலகங்களை நிர்வகித்தல் மற்றும் மனித மற்றும் பௌதீகத் தேவைகளை நிறைவேற்றல் உட்பட விசேடக் கடமைப் பொறுப்புக்கள் செயற்பாட்டுப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

- கமத்தொழில் துறையில் காப்புறுதிச் சேவைகளை வழங்கும் பிரதான அரச நிறுவனம் என்ற வகையில், உள்ளூர் கமத்தொழிலை மேம்படுத்துவதிலும், மற்றும் கமத்தொழிலாளரின் பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதிலும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பினை அதிகபட்சமாக நிறைவேற்றும் நோக்குடன்2022 ஆம் ஆண்டிலும் பல காப்புறுதித் திட்டங்களைநாடளாவிய ரீதியில் விரிவாக்கம் செய்யும் பொருட்டுசெயற்பாட்டுப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

1. பயிர்க் காப்புறுதித் திட்டங்கள்
    - நெல் பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்
    - சோளப்பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்
    - பெரிய வெங்காயப்பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்
    - உருளைக்கிழங்குப்பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்
    - மிளகாய் பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்
    - சோயாப்பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்
    - உப உணவுப் பயிர்ச் பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்(எள், குரக்கன், கொள்ளு, பயறு, கவ்பீ , உழுந்து)
    - கரும்புப்பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்
    - ஏற்றுமதிபயிர்கள் பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்(மிளகு,கறுவா)
    - பெருந்தோட்டப்பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்(தேயிலை)
    - தென்னை பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்
    - மலர் வளர்ப்பு பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்
    - இஞ்சி பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்

- மரக்கறிப்பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்
- வாழை பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்
- பழ பயிர்கள் பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம்

2. களஞ்சியக்காப்புறுதித் திட்டம்
3. விவசாய உபகரணங்கள் காப்புறுதித் திட்டம்
4. கால்நடைக்காப்புறுதித் திட்டம்

    - மாடு
    - ஆடு

5. திடீர் விபத்துக் காப்புறுதித் திட்டம்
6. சுவசெத சுகாதாரக்காப்புறுதித் திட்டம்
7. மூன்றாம் தரப்பு மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டம்
8. சமூகப் பாதுகாப்புக் காப்புறுதித் திட்டங்கள்
    - கமத்தொழில் ஓய்வூதியத் திட்டம்
    - கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்

வறட்சி ,வெள்ளம் ,காட்டு யானைகளால் ஏற்படும் அனர்த்தங்களினால் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு ஏற்படக் கூடியஅழிவுகளினால் விவசாய சமூகம் எதிர்நோக்கும் சிரமங்களை நிவர்த்தி செய்யும் வகையில் விவசாயிகள் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்புடன் நெல், சோளம் ,உருளைக்கிழங்கு ,பெரிய வெங்காயம் ,சோயா மற்றும் மிளகாய் பயிர்களின் பொருட்டு கட்டாயக் காப்புறுதித் திட்டத்திற்கு விவசாயிகள் செய்துள்ளதுடன், 2018 சிறுபோகம் தொடக்கம் விவசாயிகளிடமிருந்து தவணைப் பணம் அறவிடாது, அரசின் கொள்கைத் தீர்மானத்திற்கமைய ஒரு ஏக்கரின் பொருட்டு ஆகக் கூடியதாக ரூபா 40,000/-க்கு உட்பட்டு காப்புறுதிக் காப்பீடு வழங்குவதற்கு ,அரசினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. விவசாய திணைக்களம் ,கமநல அபிவிருத்தித் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ,அரச மற்றும் அரச சார்பற்ற வங்கிகள் உட்பட ஏனைய தொடர்புடைய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் இக் காப்புறுதி திட்டம் 2018 சிறு போகம் தொடக்கம் சபையினால் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

செயல்பாட்டுப் பிரிவால் செயற்படுத்தப்படும் திட்டங்கள்:

- கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் சகல அலுவலகங்களையும் ஒரே மாதிரியின் கீழ் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டு கம்பஹ மற்றும் கேகாலை மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் மற்றும்வெளிக்கள மேற்பார்வை.
- கம்பஹ மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்துடன் நடாத்தப்பட்ட உள்ளூர் கமத்தொழிலை மேம்படுத்தும் பொருட்டு விவசாயிகளை விழிப்புணர்வு நிகழ்ச்சி 10.04.2022 மற்றும்11.04.2022 ஆந் திகதிகளில் நடைபெற்ற கண்காட்சியின் பொருட்டு சபையின் சகலகாப்புறுதித் திட்டங்களும் உள்ளடக்கி கண்காட்சி அரங்கைஏற்பாடு செய்து, அதன் பொருட்டு அனுசரணை அளித்து, அலுவலர்களின் பங்கேற்புடன் விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்
- 2022 ஆண்டு புத்தரிசி விழா அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 02.04.03 மற்றும் 03.04.2022 ஆகிய நாட்களில் அனுராதபுரம் ஜயசிறிமஹா போதியில் நடைபெற்ற மஹோத்ஸவத்திற்கான அனுசரணை வழங்கல் மற்றும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- மாஹோ, கேகாலை, இரத்தினபுரி, பொலன்னறவைகாலி, பதுள, நுவரெலியா, முல்லைத்தீவு, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கைகளை இற்றைப்படுத்தும் பொருட்டு பதாகைகள் மற்றும் பிரசுரங்களை மாவட்டங்களின் தேவைக்கேற்ப அச்சிடுவதற்குத் தேவையான ஒதுக்கீடுகள் மற்றும் அச்சிடுதல் படிவங்களை வழங்குதல் மற்றும் அறிவுரைகளை வழங்குதல்.
- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக தற்போதைய காப்புறுதித் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் பொருட்டு நிறுவனத்தின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் ஒரு தொனிப்பொருள் பாடலை உருவாக்குதல். - 18.10.2022 அன்று வெளியிடல்.
- விவசாயிகளுக்கான புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டதால், இத்திட்டம் தொடர்பான ஆரம்ப விழா 30.10.2022 அன்று நடாத்தப்பட்டு, இத்திட்டத்தில் விவசாயிகள் பங்களிப்புச் செய்து, அவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்.
- 2022.11.23 மற்றும் 2022.12.16 ஆகிய திகதிகளில் பிரதேச செயலகங்களுடன் இணைந்து கம்பஹ மாவட்டத்திலுள்ள விவசாயப் பிரதிநிதிகள்,அரச அதிகாரிகள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களைவிழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்.

காப்புறுதிப் பிரிவு

கமத்தொழில் காப்புறுதி முன்மொழிவு முறை
மற்றும்
கால்நடை வளங்கள் காப்புறுதி முன்மொழிவு முறை

காப்புறுதிப் பிரிவு

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் காப்புறுதிப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் முக்கியப் பணிகான,காப்புறுதி முன்மொழிவுத் திட்டங்களைத் தயாரித்தல், அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் நடைமுறையில் உள்ளகாப்புறுதித் திட்டங்களின் கீழ் எழும் உரிமைகள் தொடர்பான இழப்பீட்டுத் தொகையை விடுவிப்பது தொடர்பான பணிகளைச் செய்வதாகும். அதற்கமைய, பிரிவின் பணிகள் பின்வருமாறுமேற்கொள்ளப்பட்டன.அதாவது,கடந்த ஆண்டுகளைப் போலவே, பயிர் சேதத்திற்கான இழப்பீட்டுத் தொகையை விடுவிக்கும் பணிக்கு முதலிடம் கொடுத்து, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.
மேலும், 2022 ஆம் ஆண்டில்06 கட்டாயப் பயிர்ச் செய்கையின் பொருட்டு, நடைமுறையில் இருந்த காப்புறுதித் திட்டம் இற்றைப்படுத்தப்பட்டது.மேலும், கச்சான் பயிர்ச் செய்கை, தும்பைப் பயிர்ச் செய்கை, விதை போஞ்சிச் செய்கை மஞ்சள் போன்ற காப்புறுதித் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. பயிர்ச்செய்கைக் கடனின் கீழ் கரும்புப் பயிர்ச்செய்கையின் பொருட்டு காப்புறுதித் திட்டம் தயாரிக்கப்பட்டது.

அதுமட்டுமின்றி, ஏனைய பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகளின் பொருட்டு உரிய பதில்களை வழங்கி கிடைக்கப் பெறும் அறிவுறுத்தல்களின்படி விதிமுறைகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் என்பனவும் மேற்கொள்ளப்பட்டது.
அத்துடன், நிறுவனத்தில் உள்ள ஏனைய பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்கி காப்புறுதி நடவடிக்கைகளைநிர்வகித்தலும் காப்புறுதிப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் , காப்புறுதிப் பிரிவின் மூலம்2018/19 பெரும் போகம்,2019 சிறு போகம், 2019/20 பெரும் போகம் , 2020 சிறு போகம் போன்று 2021 பெரும் போகப் பயிர்ச் சேதங்களாக மாவட்டங்களால் பரிந்துரைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டஆவணங்களின் பொருட்டு இழப்பீட்டுத் தொகை விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய, கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள போகங்களின் பொருட்டு கூடிய அவதானத்துடனான இழப்பீட்டுத் தொகையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் 2018/19 பெரும் போகத்தின் பொருட்டுச் செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை			
மாவட்டம்	**விவசாயிகளின் எண்ணிக்கை**	**ஏக்கர்அளவு**	**இழப்பீட்டுத் தொகை (ரூ.)**
மட்டக்களப்பு	12	48.75	504,000
மொனராகலை	141	441.47	7,132,492
	1	1.25	25,000
மொத்தம்	**154**	**491.47**	**7,661,492**

2022 ஆம் ஆண்டில் 2019 சிறு போகத்தின் பொருட்டு செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை			
மாவட்டம்	**விவசாயிகளின் எண்ணிக்கை**	**ஏக்கர்அளவு**	**இழப்பீட்டுத் தொகை(ரூ.)**
பதுளை	2	2.00	35,700
மொத்தம்	**2**	**2**	**35,700**

2022 ஆம் ஆண்டில் 2019/20 பெரும் போகத்தின் பொருட்டு செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை			
மாவட்டம்	**விவசாயிகளின் எண்ணிக்கை**	**ஏக்கர்அளவு**	**இழப்பீட்டுத் தொகை(ரூ.)**
அனுராதபுரம்	11	16.75	318,400
பதுளை	5	6.50	145,800
மொனராகலை	34	53.63	960,850
மொத்தம்	**50**	**77**	**1,425,050**

2022 வருடத்தில் 2020 சிறு போகத்தின் பொருட்டு செலுத்தப்பட்டுள்ளஇழப்பீட்டுத் தொகை			
மாவட்டம்	**விவசாயிகளின் எண்ணிக்கை**	**ஏக்கர் அளவு**	**இழப்பீட்டுத் தொகை (ரூ.)**
கம்பஹ	256	221.56	5,432,818
களுத்துறை	3	1.38	14,625
கண்டி	3	0.80	17,100
மாத்தளை	5	3.25	66,600
மாத்தறை	31	26.72	876,141
திருகோணமலை	20	41	436,500
குருநாகலை	17	12.75	429,300
மாஹோ	8	8	216,000
புத்தளம்	16	28.18	824,625
மன்னம்பிட்டி	1	1.50	13,500
பதுளை	3	2.69	64,175
மொனராகலை	11	15.25	357,100
இரத்தினபுரி	2	1.50	32,400
கேகாலை	21	10.79	181,623
மொத்தம்	**397**	**375.37**	**8,962,507**

2022 ஆம் ஆண்டில் 2020/21 பெரும் போகத்தின் பொருட்டு செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை			
மாவட்டம்	**விவசாயிகளின் எண்ணிக்கை**	**ஏக்கர் அளவு**	**இழப்பீட்டுத் தொகை (ரூ.)**
கம்பஹ	9	17.52	245,724
களுத்துறை	20	18.75	214,200
மாத்தளை	1	0.25	2,700
மாத்தறை	4	2	27,360
அம்பாந்தோட்டை	6	9.25	200,700
யாழ்ப்பாணம்	235	294.20	3,317,469
மன்னார்	5	16	230,400
வவுனியா	3	8	201,600
அம்பாறை	3,380	5,672.46	101,572,398
திருகோணமலை	6,432	10,018.88	171,961,185
கிளிநொச்சி	27	92.50	1,379,700
குருநாகலை	2	5.50	36,000

மாஹோ	6	8.75	147,200
புத்தளம்	1	1.50	54,000
அனுராதபுரம்	299	675.92	7,482,621
பொலன்னறுவை	14	27	464,400
மன்னம்பிட்டி	1	1	36,000
பதுளை	1,646	2,339.27	30,326,091
மொனராகலை	156	443	5,594,925
கேகாலை	2	1.25	31,500
மொத்தம்	**12,249**	**19,653**	**323,526,173**

2022 ஆண்டில் 2021 சிறு போகத்தின் பொருட்டு செலுத்தப்பட்டுள்ளஇழப்பீட்டுத் தொகை			
மாவட்டம்	**விவசாயிகளின் எண்ணிக்கை**	**ஏக்கர் அளவு**	**இழப்பீட்டுத் தொகை (ரூ.)**
கொழும்பு	145	153.06	2,256,862
கம்பஹ	4,078	3,909.39	61,635,605
களுத்துறை	908	809.43	10,155,462
கண்டி	290	158	3,512,130
மாத்தளை	106	85.61	1,359,998
நுவரெலியா	1,165	676.95	5,877,191
காலி	388	314.89	4,195,720
மாத்தறை	514	376.96	5,987,689
அம்பாந்தோட்டை	71	57.50	999,450
மன்னார்	7	7.75	88,200
வவுனியா	6	5.25	119,700
முல்லைத்தீவு	18	16	325,800
மட்டக்களப்பு	8	22	792,000
அம்பாறை	229	323.75	7,031,250
திருகோணமலை	37	55.50	819,900
கிளிநொச்சி	4	4.50	54,000
குருநாகல்	1,524	1,587.36	30,519,074
மாஹோ	558	415.16	6,793,650
புத்தளம்	1,695	2,982.24	56,103,005
அனுராதபுரம்	498	524.57	12,806,375
தம்புத்தேகம	156	109.51	2,432,350
பொலன்னறுவை	232	436.75	7,377,050
மன்னம்பிட்டி	146	130.27	2,595,150
தெஹிஅத்தகண்டி	43	47.75	940,500
பதுளை	539	544.09	12,964,576
மொனராகலை	214	291.75	5,150,850
இரத்தினபுரி	213	142.15	3,623,218
எம்பிலிபிட்டிய	52	75.50	1,038,660
கேகாலை	97	39.74	749,617
மொத்தம்	**13,941**	**14,303.38**	**248,305,032**

2022 ஆம் ஆண்டில் 2021/22 பெரும் போகத்தின் பொருட்டு செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை			
மாவட்டம்	**விவசாயிகளின் எண்ணிக்கை**	**ஏக்கர் அளவு**	**இழப்பீட்டுத் தொகை (ரூ.)**
கம்பஹ	531	454.66	6,180,377
களுத்துறை	229	203.99	2,550,526
கண்டி	281	154.88	2,328,827
மாத்தளை	398	290.17	4,268,210
நுவரெலியா	269	140.59	1,750,601
காலி	142	95.98	1,114,965
மாத்தறை	170	114.02	2,006,035
அம்பாந்தோட்டை	251	266.35	4,042,350
யாழ்ப்பாணம்	5,816	6,587.35	78,484,311
மன்னார்	2,578	5,555.75	77,284,750
வவுனியா	345	613.31	9,808,914
முல்லைத்தீவு	945	1,193	16,992,500
மட்டக்களப்பு	112	284.25	4,709,700
அம்பாறை	1,025	1,621.39	27,606,901
திருகோணமலை	508	781	14,065,376
கிளிநொச்சி	630	725.15	7,666,155
குருநாகல்	2,535	2,159.05	33,389,112
மாஹோ	1,236	1,126.96	20,220,082
புத்தளம்	2,018	3,443.96	53,387,972
அனுராதபுரம்	2,941	3,634.47	69,863,492
தம்புத்தேகம	589	543.44	13,501,200
பொலன்னறுவை	1,123	2,521.45	43,061,350
மன்னம்பிட்டிய	1,350	1,656.27	32,599,537
தெஹிஅத்தகண்டி	278	330.50	5,713,300
பதுளை	1,796	2,262.94	49,434,627
மொனராகலை	2,367	5,602.08	68,978,439
இரத்தினபுரி	363	202.76	2,881,210
எம்பிலிபிட்டிய	71	62.38	929,361
கேகாலை	718	307.36	3,134,227
மொத்தம்	**31,615**	**42,935**	**657,954,407**

அதற்கமைய 2022 ஆம் ஆண்டில் காப்புறுதிப் பிரிவின் பிரதானமான பணியாக காப்புறுதித் திட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகைகளின் ஒட்டுமொத்த சுருக்கம் பின்வருமாறு

	விவசாயிகளின் எண்ணிக்கை	ஏக்கர் அளவு	இழப்பீட்டுத் தொகை (மி. ரூ)
2022 ஆம் ஆண்டின் மொத்தம்	58,408	77,835	1 , 257

அத்துடன், இதுவரையில் 2021 சிறுபோகம், 2021/22 பெரும் போகங்களுக்குரியதான மேன்முறையீடுகள் பரிசீலனை செய்து பார்க்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.அத்துடன், 2022 சிறு போகத்தின் பயிர் அழிவு இழப்பீடு செலுத்துவதற்குரிய ஆரம்ப பணி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், பயிர் சேத இழப்பீட்டுப் பணத்திற்குரிய விவசாயிகளின் பொருட்டு வழங்குவதற்குரியதான திடீர் விபத்துக் காப்புறுதிப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அவற்றை அச்சிடும் நடவடிக்கைகளின் பொருட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், 2023 ஆம் வருடத்தில் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள காப்புறுதித் திட்டங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான ஆரம்பக் கட்ட பணிகள் நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டுள்ளது.

மேலும்,கால்நடைக் காப்புறுதி திடீர் விபத்துக் காப்புறுதி, சுவசெதக் காப்புறுதி போன்ற சாதாரணக் காப்புறுதிகளின் கீழ், 13 மில்லியன் ரூபா அளவில் இழப்பீட்டுத் தொகையை விடுவிப்பதற்கு 2022 ஆம் ஆண்டினுள் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியப் பிரிவு

கமக்காரர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டம்

மற்றும்

கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டம்

கமக்காரர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டம்

கமக்காரர் ஓய்வூதியப் பிரிவு– 2022

கமத்தொழில் பொருளாதாரத்தில் விவசாயின் கடமைப் பணியை அடையாளம் கண்டு, அச்செயற்பாட்டில் அவருக்குப் பாதுகாப்பை வழங்கும் நோக்குடன்,1987 இல் செயற்படுத்தப்பட்ட கமக்காரர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டத்தின் அடிப்படைநோக்கத்தை அடைந்து கொண்டு, 2022ஆண்டு இறுதிக்குள், 169,741 ஓய்வூதியதாரர்களுக்கு, ரூபா4,053,350,019 பணம்அவர்களின் வாழ்க்கைப் பாதுகாப்புக்காக ஓய்வூதியமாக வழங்கப்பட்டுள்ளது.

கமக்காரர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்கமையக் கொடுப்பனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த ஓய்வூதியத் தொகையை விட அதிகரிப்புச் செய்யப்பட்ட ஓய்வூதியத் தொகையைச் செலுத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய, 2010 ஜூலை மாத இறுதிக்குள், கமக்காரர்களின் ஓய்வூதிய நிதியம் பூச்சியமானதுடன், அந்நிதி நெருக்கடிக்கு நிரந்தரத் தீர்வை வழங்கி முன்மொழிவுத் திட்டத்தை செயலழிந்து விடாது பேணும் பொருட்டு நிதி மற்றும் கொள்கைத்திட்டமிடல் அமைச்சின் ஆலோசனையின் பேரில், இத்திட்டம் மறுசீரமைக்கப்பட்டு, புதிய ஓய்வூதியத் திட்டமாக 2014 ஆம் ஆண்டு ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்பட்டது.

புதியகமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் ஆட்சேர்ப்பின் ஆரம்பம் 2022 ஆம் ஆண்டுஅக்டோபர்மாதம்கௌரவஅமைச்சர்மஹிந்தஅமரவீரஅவர்களின்தலைமை யில்மீண்டும்அரம்பிக்கப்பட்டது.

மரணம்

கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்து, ஓய்வூதிய உரித்துரிமை கிடைப்பதற்கு முன்னர்மரணமடைந்த பங்களிப்பாளர்களின் வாரிசுகளுக்குமரணப் பணிக்கொடை உரித்துரிமையாக, 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட பயனறுதிகளின் அளவு ரூபா 5,087,273 ஆகும்.

உடல் பலவீனம்

திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ள உடல் பலவீனமுற்றுள்ள பங்களிப்பாளர்கள் 114 பேரின் பொருட்டு ரூபா 1,196,204 தொகை பலவீனக் கொடுப்பனவாக 2022 ஆம் ஆண்டு இறுதியில் செலுத்தப்பட்டுள்ளது.

கமக்காரர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டம்

கமக்காரர் ஓய்வூதியக் கொடுப்பனவு

2022 ஜனவரி - திசம்பர்

தொ.இல.	மாவட்ட அலுவலகம்	ஓய்வூதியம் பெறும் பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட தொகை (ரூ.)
1	அம்பாறை	4,280	98,040,217
2	அனுராதபுரம்	8,585	183,131,435
3	பதுளை	7,439	172,335,259
4	மட்டக்களப்பு	1,265	28,290,781
5	கொழும்பு	5,598	146,166,870
6	காலி	14,578	386,071,979
7	கம்பஹ	11,783	290,925,074
8	அம்பாந்தோட்டை	9,601	214,232,915
9	யாழ்ப்பாணம்	2,666	62,459,908
10	களுத்துறை	9,399	247,927,860
11	கண்டி	17,074	418,755,318
12	கேகாலை	10,526	247,783,928
13	குருநாகல்	20,614	472,811,857
14	மன்னார்	107	2,008,810
15	மாத்தளை	5,339	119,118,209
16	மாத்தறை	10,462	260,396,827
17	மொனராகலை	5,886	132,125,754
18	முல்லைத்தீவு	138	3,641,464
19	நுவரெலியா	3,329	78,121,455
20	பொலன்னறுவை	5,614	128,647,479
21	புத்தளம்	5,770	133,275,571
22	இரத்தினபுரி	8,091	191,427,071
23	திருகோணமலை	970	22,406,020
24	வவுனியா	627	13,247,958
	மொத்தம்	**169,741**	**4,053,350,019**

>கிளிநொச்சிமாவட்டத்திற்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு வவுனியா மாவட்டத்தின்ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

கமக்காரர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டம்

மரணப் பணிக்கொடைப்பாதுகாப்புப் பயனுறுதிகளின் கொடுப்பனவு

தொ.இல.	மாவட்டம்அலுவலகம்	மரணப் பணிக்கொடை செலுத்தப்பட்ட பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை	செலுத்தப்பட்டதுதொகை (ரூ.)
1.	பதுளை	21	438,565
2.	மொனராகலை	7	182,863
3.	கேகாலை	14	288,300
4.	கண்டி	15	359,895
5.	களுத்துறை	11	228,291
6.	அம்பாந்தோட்டை	15	340,548
7.	கம்பஹ	11	208,358
8.	காலி	14	320,681
9.	கொழும்பு	3	63,883
10.	மட்டக்களப்பு	-	-
11.	தம்புத்தேகம	4	104,025
12.	அனுராதபுரம்	11	251,594
13.	அம்பாறை	6	133,230
14.	குருநாகல்	10	187,206
15.	மன்னம்பிட்டி	6	139,106
16.	புத்தளம்	9	188,540
17.	தெஹிஅத்தக்கண்டிய (மகாவலி - சீ)	3	69,959
18.	மன்னார்	-	-
19.	முல்லைத்தீவு	-	-
20.	கல்முனை	-	-
21.	மகாவலி - ஜீ	-	-
22.	திருகோணமலை	-	-
23.	வவுனியா	-	-
24.	யாழ்ப்பாணம்	5	92,878
25.	உடவலவை	1	17,500
26.	பொலன்னறுவை	3	76,117
27.	மாத்தளை	18	401,427
28.	மாத்தறை	10	207,080
29.	நுவரெலியா	10	286,766
30.	இரத்தினபுரி	7	171,961
31.	மாஹோ	14	328,500
மொத்தம்		**228**	**5,087,273**

2022 ஜனவரி - திசம்பர்

கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம்

கடற்றொழிலாளர் ஓய்வூதியப் பிரிவு - 2022

1991 ஏப்ரல் மாதம் தொடக்கம் அமுல்படுத்தப்பட்ட கடற்றொழிலாளர்ஓய்வூதியம் மற்றும் சமூக நலன் திட்டம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தித் திணைக்களம்மற்றும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

திட்டத்தின் நோக்கங்கள்

- கடற்றொழிலாளர்கள் தமது முதுமை வயதில் அல்லது பலவீனமுற்ற போது அவர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்குதல்.
- கடற்றொழிலாளர் ஒருவர் இறந்தால் அவரில் தங்கி வாழ்வோருக்கு நிவாரணம் வழங்குதல்.
- கடற்றொழிலாளர்கள் தங்கள் வாழ்வாதாரத்தில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு ஊக்கப்படுத்துதல்.
- இளைஞர் சமூகத்தை கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு வழியமைத்தல் மற்றும் கடற்றொழிலாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் சிக்கனத்தை மேம்படுத்துதல்.

1996 ஏப்ரல் மாதம் தொடக்கம் கடற்றொழிலாளர்ஓய்வூதியக் கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டதுடன், 2022 இறுதிக்குள்5,556கடற்றொழிலாளர்கள் மாதாந்த ஓய்வூதியம் பெறுகின்றனர். 2022வருடத்தில் ஓய்வூதியமாக வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூபா 80,034,415.00 ஆகும். 2022திசம்பர்31 ஆந் திகதியில்69,049 பங்களிப்பாளர்கள் இத்திட்டத்திற்குப் பங்களித்துள்ளனர்.

மரணப் பணிக்கொடை மற்றும் உடல் பலவீனப் பயனுறிதிகள்

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் பங்களிப்புச் செய்து உயிரிழந்த பங்களிப்பாளர்கள்23 பேரின் வாரிசுகளுக்கு 2022 ஆண்டில் செலுத்தப்பட்டுள்ளபயனுறிக்குக் கொடுப்பனவுத் தொகை ரூபா 231,000.00 ஆகும்

கடற்றொழிலாளர்ஓய்வூதியம்மற்றும் சமூக பாதுகாப்புநலன் திட்டம்

ஓய்வூதியக் கொடுப்பனவு–2022 ஆம் ஆண்டு

மாவட்ட கடற்றொழில் விரிவாக்கல் பிரிவு	ஓய்வூதியக் கொடுப்பனவு	
	பங்களிப்பாளர் எண்ணிக்கை	(ஜன-திசம்பர்) தொகை (ரூபா)
களுத்துறை	125	1,795,947.00
காலி	145	2,161,719.00
மஹவெவ	453	6,554,779.00
மாத்தறை	347	4,985,779.00
கொழும்பு	67	996,095.00
தங்காலை	294	4,282,064.00
புத்தளம்	69	1,004,833.00
நீர்கொழும்பு	693	10,011,540.00
மட்டக்களப்பு	539	8,355,391.00
திருகோணமலை	131	1,990,414.00
மன்னார்	536	7,932,374.00
கல்முனை	391	5,668,433.00
முல்லைத்தீவு	81	1,206,687.00
கிளிநொச்சி	428	6,040,402.00
யாழ்ப்பாணம்	1,185	16,070,630.00
நன்னீர் மீன் தடாகம்		
நுவரெலியா	8	107,004.00
பொலன்னறுவை	2	28,800.00
இரத்தினபுரி	5	58,843.00
மொனராகலை	1	15,804.00
குருநாகல்	3	41,400.00
அனுராதபுரம்	4	56,515.00
மாத்தளை	5	67,776.00
கண்டி	9	124,392.00
கேகாலை	-	-
பதுளை	7	98,604.00
வவுனியா	2	29,208.00
மட்டக்களப்பு நன்னீர்	26	348,982.00
மொத்தம்	5,556	80,034,415.00

கடற்றொழிலாளர்ஓய்வூதியம்மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம்

31.12.2022 ஆந் திகதிக்கு ஆட்சேர்ப்பு

மாவட்ட கடற்றொழில் விரிவாக்கல் பிரிவு	வயது அடிப்படையில் பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை						2022 மொத்தப் பங்களிப்பாளர் எண்ணிக்கை
	18-29	30-35	36-45	46-50	51-54	55-59	
களுத்துறை	1 , 213	721	772	197	105	59	3 , 067
காலி	1 , 082	676	840	221	118	95	3 , 032
மஹவெவ	3 , 253	1 , 702	2 , 036	613	256	240	8 , 100
மாத்தறை	17 , 50	980	1 , 232	346	201	164	4 , 673
கொழும்பு	576	360	478	140	63	38	1 , 655
தங்காலை	2 , 514	1 , 389	1 , 629	412	201	169	6 , 314
புத்தளம்	2 , 167	1 , 156	1 , 222	255	107	61	4 , 968
நீர்கொழும்பு	2 , 538	1 , 599	2 , 167	735	419	378	7 , 836
மட்டக்களப்பு	2 , 248	1 , 390	1 , 630	555	272	266	6 , 361
திருகோணமலை	654	516	550	129	81	78	2 , 008
மன்னார்	2 , 066	1 , 227	1 , 343	429	222	257	5 , 544
கல்முனை	1 , 565	1 , 109	1 , 515	479	244	207	5 , 119
முல்லைத்தீவு	88	79	141	50	27	44	429
கிளிநொச்சி	519	340	540	250	185	183	2 , 017
யாழ்ப்பாணம்	2 , 185	1 , 117	1 , 444	668	402	617	6 , 433
நன்னீர் மீன் தடாகம்							
நுவரெலியா	29	28	47	7	1	3	115
பொலன்னறுவை	45	35	27	11	2	1	121
இரத்தினபுரி	27	15	9	1	3	-	55
மொனராகலை	17	14	10	1	-	-	42
குருநாகல்	45	24	24	1	-	2	96
அனுராதபுரம்	169	81	84	17	7	5	363
மாத்தளை	31	14	23	5	2	3	78
கண்டி	13	12	25	5	3	3	61
கேகாலை	1	1	2	-	-	-	4
பதுளை	59	33	33	3	-	3	131
வவுனியா	59	33	41	15	4	-	152
மட்டக்களப்பு நன்னீர்	84	52	67	27	20	25	275
மொத்தக் கூட்டுத்தொகை	**24 ,997**	**14 ,703**	**17,931**	**5, 572**	**2,945**	**2,901**	**69,049**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு -2022

2022 ஆம் ஆண்டிற்கான, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நடைமுறையில் உள்ள காப்புறுதி மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் பொருட்டு ஒவ்வொரு பிரிவுகள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கமையத் தயாரித்த வருடாந்த உள்ளகக் கணக்காய்வு வேலைத்திட்டத்தின் அமைய உள்ளகக் கணக்காய்வுநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதற்கமைய, உள்ளக் கணக்காய்வுப் பிரிவின் மனித வளங்களின் உதவிப் பணிப்பாளர் உள்ளகக் கணக்காய்வாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அலுவலகப் பணியாளர் உத்தியோகத்தரின் கணக்காய்வுப் பங்களிப்புடன் 2022 ஆம் ஆண்டுக்கான 22 உள்ளகக் கணக்காய்வு பரிசோதனைகள், பிரதான அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவுகள் மற்றும்புவியியல் மட்டத்தில் பரந்துள்ள30 மாவட்ட அலுவலகங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் பொருட்டு நிலவும் கமத்தொழில்அவதானத்தை முகாமைத்தும் செய்யும் நோக்கத்தின் அடிப்படையாக் கொண்டு ஒவ்வொரு பிரிவுகள் மற்றும் மாவட்ட அலுவலகத்தின் பணியின் திறமையான மற்றும் பயனுள்ள செயல்திறன் மிக்கதாக நிறைவேற்றும் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளில்நிறைவான தன்மை, துல்லியம் மற்றும் அவற்றின் செயல்திறனை மதிப்பீடு செய்யும் பொருட்டு பின்வரும் ஒவ்வொரு பிரிவின் கீழும் உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

நிர்வாகப் பிரிவை உள்ளடக்கும் வகையில் மோட்டார் சைக்கிள் கடன் வழங்கல் பரிசோதனை2020/2021,சபையின் மோட்டார் வாகனப் பராமரிப்பு, ஓட்டம் , பயன்பாடு மற்றும் எரிபொருள் பாவனை தொடர்பான பரிசோதனை, விடுமுறை பதிவுகளைப் பரிசோதித்தல் - (குருநாகல் , காலி, கண்டி,கம்பஹ,மொனராகலை), நிர்வாகப் பிரிவின் உத்தியோகத்தர்களின் விடுமுறை அறிக்கைகளை பரிசீலனை செய்தல், 31/12/2022 அன்றைய திகதிக்கு பௌதீக இருப்பு பரிசோதனை ஆகிய துறைகளின் கீழ் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.சபையின் சட்டப் பிரிவின் கடமைகளை உள்ளடக்கும் வகையில்மூன்றாம் தரப்பு வழக்கு நடவடிக்கைகள்தொடர்பான பரிசோதனை 2021/2022 மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிதிப் பிரிவை உள்ளடக்கும் வகையில் 001622 என்னும் கணக்கிலக்கம் உடைய கால்நடைக் காப்புறுதிக் கணக்கு - காசுப் புத்தகம் மற்றும் வங்கி இணக்கக் கூற்றுத் தயாரித்தல் தொடர்பான பரிசோதனை, கமக்காரர்ஓய்வூதியத் திட்டத்தின் தவணைப் பணம் பிரதான காரியாலயத்திற்குஅனுப்புதல் தொடர்பான ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் பிரதான காரியாலயத்திற்கு முன்வைக்கும் செயல்முறையை அனுப்பும் ஆய்வு செய்தல், 2021.12.31 ஆந் திகதிக்கு கமத்தொழில் காப்புறுதித திட்டத்தின் முதலீட்டுப் பெறுமதியைப் பரிசோதித்தல். சிறு பண நிலுவையைப் பரிசோதித்தல் - 2022/12/31 ஆம் திகதி மேற்படி பிரிவுகளின் கீழ் கணக்காய்வுப் பரிசோதனை நடைபெற்றது.

காப்புறுதிப் பிரிவின் நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாக கால்நடைக் காப்புறுதி தவணைப் பண வருமானம் மற்றும் இழப்பீடுக் கொடுப்பனவுகளின் பரிசோதனை 2021, புத்தளம் மாவட்டத்தில் 2021 சிறு போகத்திற்கு ஏற்புடையதான நட்டஈடு கணக்கீட்டின் அடிப்படை தொடர்பான பரிசோதனை, கால்நடைக் காப்புறுதித் திட்டத்தின் தவணைப் பண வருமானம் மற்றும் இழப்பீடுகள் கொடுப்பனவு தொடர்பான பரிசோதனை (2019/2020/2021) - பொரலந்த அரசக் கால்நடைப் பண்ணை

- பதுளை என்னும் துறையின் கீழ்க் கணக்காய்வு சோதனைகள் நடாத்தப்பட்டுள்ளது.அபிவிருத்திப் பிரிவின் நடவடிக்கைகளுக்குரிய தொடர் வேலைத் திட்டங்கள்,இரு வார அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் பிரதான காரியாலயத்திற்குச் சமர்ப்பித்தல் மற்றும் செயற்திறன் பரிசோதனை (தம்புத்தேகம) ஆகிய துறைகளின் கீழ் கணக்காய்வுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

கமக்காரர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கமக்காரர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் நலன் திட்டம் - மரணப் பணிக்கொடைக் கொடுப்பனவுப் பரிசோதனை 2021, கமக்காரர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் தபால் அலுவலகங்கள் மூலம் கமக்காரர் ஓய்வூதியக் கொடுப்பனவுபோன்ற விடயங்களின் கீழ் கணக்காய்வுப் சோதனைகள் செய்யப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டநெருக்கடி நிலைமை காரணமாக 30 மாவட்ட அலுவலகங்களில் அம்பிலிபிட்டிய மாவட்ட அலுவலகம் மட்டும் பரிசோதிக்கப்பட்டது.

தலைவர் அவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் உத்தரவின் கீழ், விசேட பரிசோதனையின் கீழ் வெளிக்கள உத்தியோகத்தர்திரு.ருஹுனகே விபுல கடமைக்கு அறிக்கையிடாமை மற்றும் தவணைப் பணத்தை வங்கியில் வைப்பிலிடாமை தொடர்பாக விசேட பரிசோதனை, உதவிப் பணிப்பாளர் தனுக ரங்கன நியமனம் தொடர்பாக நடாத்தப்பட்ட விசேட விசாரணை, பயிலுனர் பயிற்சி உத்தியோகத்தர்கள் வெளிக்கள கடமைகளின பொருட்டு இணைத்துக் கொள்ளல் - பொலன்னறுவை மாவட்ட அலுவலகம், பணிப்பாளர் நாயகத்தின் விடுமுறை அறிக்கை தொடர்பான பரிசோதனை, சபையின் பிரதான காரியாலத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் 2022 ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையில் கடமைக்கு வருகை தரல், கடமையின் பின்னர் புறப்படல் மற்றும் விடுமுறை பெற்றுக் கொள்ளல் மற்றும் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான பரிசோதனை, முன்னால் தலைவர் திரு. ஹஷான் திஸாநாயக்க அவர்கள், அவரின் கடமை நாட்களினுள் சபையின் வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளாரா என்பது தொடர்பான பரிசோதனை, 26/11/2022 ஆந் திகதியன்று பிரதான காரியாலயத்தில் துப்பரவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, சுத்தம் செய்யும் போது, குளிரூட்டும் இயந்திரங்கள் தொடர்பான சில செப்பு குழாய்களை நிறுவன வளாகத்திலிருந்து வெளியே கொண்டு செல்ல முயற்சித்தல் தொடர்பான விசாரணை - அலுவலக உதவியாளர், திரு. இந்திக்க வீரசிங்க ஆகிய வியடங்கள் தொடர்பாகப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

கணக்காய்வாளர் திணைக்களம்,விவசாய அமைச்சு மற்றும் பொது வியாபாரத் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

<u>கணக்காய்வு முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடத்துதல்</u>

2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய நிலைமைகள் காரணமாக, 2022 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய 03கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் (2022/02/26, 2022/09/30, 2022/12/22) நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன்போது வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கமையஉள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுப் பரிசோதனை அறிக்கையை மதிப்பிடல், அரசக்கணக்காய்வு

ஐயவினாக்களை ஆய்வு செய்தல், வருடாந்த நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்களுக்கு ஏற்புடைய கணகாய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளை மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. கணக்காய்வு முகாமைத்துக் குழு உறுப்பினர்கள் பின்வருமாறு.

26/02/2022 திகதியிடப்பட்ட கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்கள்

திருமதி WHA விமலஜீவ - குழுத் தலைவர், பணிப்பாளர், அரச நிதித் திணைக்களம்

திருஏ.எம்.எல். அபேரத்ன - குழு உறுப்பினர், ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம்

திருமதி என். நிலகூஷி குணசேகர - குழு உறுப்பினர், மேலதிக செயலாளர்,விவசாய அமைச்சு

30/09/2022 மற்றும் 22/12/2022 கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்கள்

திரு. ஆர்.எம்.டீ.கே.ஜீ.என்.டீ. ரணதுங்க - குழுத் தலைவர்,பணிப்பாளர், அரச நிதித் திணைக்களம்

திரு. ஏ. எம்.எல். அபேரத்ன - குழு உறுப்பினர், ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம்

திருமதி என். epyf;\p குணசேகர- குழு உறுப்பினர், மேலதிக செயலாளர், விவசாய அமைச்சு

நிர்வாகம் மற்றும் மனித வளங்கள் பிரிவு

நிர்வாகம் மற்றும் மனித வளங்கள் பிரிவு

ஆளணியினர்

31.12.2022 ஆந் திகதிக்கு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆளணியினர் பின்வருமாறு.

ஆளணியினர்கட்டமைப்பு

சேவை வகுதி	பதவிப் பெயர்	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	தற்போதுள்ள எண்ணிக்கை	வெற்றிடங்கள்
சிரேஷ்ட நிர்வாகம்				
HM	பணிப்பாளர் நாயகம்	1	1	-
HM	பணிப்பாளர்	5	1	4
முகாமைத்துவம்				
MM	பிரதிப் பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர்	45	32	13
கனிஷ்ட முகாமைத்துவம்				
JM	நிர்வாக உத்தியோகத்தர்	2	-	2
	அமைப்புத் தொகுதி நிர்வாகி	1	-	1
	நிதி அலுவலர்	1	-	1
	திட்டமிடல் உத்தியோகத்தர்	1	-	1
இணை உத்தியோகத்தர்				
ASS.O	அபிவிருத்தி உத்தியோகத்தர்	55	28	27
	விநியோக உத்தியோகத்தர்	1	-	1
	உள்ளகக் கணக்காய்வு அதிகாரி	1	-	1
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)				
MA - Tech	போக்குவரத்து உதவியாளர்	1	1	-
	செயலாளர்	1	1	-
	புத்தகக் காப்பாளர்	4	1	3
	வன்பொருள் மற்றும் வலையமைப்புதொழில் நுட்பவியலாளர்	1	1	-
	தொழில் நுட்பவியலாளர்(ஆடியோ/விஷ்ஷவல்)	1	-	1
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத)				
MA – Non Tech	முகாமைத்துவ உதவியாளர்	220	145	75
ஆரம்ப நிலை (தொழில்நுட்பம்)				
PL - Skilled	சாரதி	38	24	14
ஆரம்ப நிலை(தொழில்நுட்பம் அல்லாத)				

PL - NonSkilled	அலுவலக உதவியாளர்	42	38	4
		421	**273**	**148**

சபையின் கடமைப் பொறுப்புக்களைத் தொடர்ச்சியாகநடாத்திச் செல்லும் பொருட்டு உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் வரையில் நிலவும் வெற்றிடங்களில் அத்தியாவசியமான சில பதவிகளின் பொருட்டு பிரதான காரியாலயம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பொருட்டு பின்வரும் பதவிகளின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையிலும், அமைய அடிப்படையிலும் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஒப்பந்த அடிப்படையில்

MA - Non Tech	முகாமைத்துவ உதவியாளர் /வெளிக்கள சாரதி	1
PL - Skilled		1
PL - Non Skilled	அலுவலக உதவியாளர் (துப்புரவு பணியாளர்)	1
	மொத்தம்	**3**

அமைய அடிப்படை

ASS.O	அபிவிருத்திஉத்தியோகத்தர்	02
MA - Non Tech	முகாமையாளர் உதவியாளர்	13
	மொத்தம்	**15**

31.12.2022 ஆந் திகதிக்கு அலுவலகப் பணியாளர் பகுப்பாய்வு

அலுவலக ஆளணியினரின் பெண் / ஆண் பகுப்பாய்வு

ஆண் -148
பெண் - 125
மொத்தம் - 273

சேவைக் காலத்திற்கமையப் பகுப்பாய்வு

வருடம்	ஊழியர் எண்ணிக்கை	சதவீதம்
30 க்கு மேல்	19	7%
26 - 30	14	5%
21 - 25	7	3%
16 - 20	42	15%
15 வயதிற்குட்பட்டவர்கள்	191	70%
மொத்தம்	273	100%

வயதுப் பகுப்பாய்வு

வயது பிரிவு	பணியாளர்எண்ணிக்கை	சதவீதம்
56 - 60	29	11%
51 - 55	30	11%
46 - 50	46	17%
41 - 45	59	22%
36 - 40	41	15%
31 - 35	27	10%
30க்கு கீழ்	41	15%
சேகரிப்பு	273	100%

2022 வருடத்தினுள் ஓய்வு பெற்ற, மரணமடைந்த மற்றும் சேவையிலிருந்து விலகல்

2022 ஆம் ஆண்டினுள், சபையின் சேவையில் உள்ளஉத்தியோகத்தர்களில் நிரந்தர பின்வரும் காரணங்களால்17 உத்தியோகத்தர்கள் சேவையை விட்டு வெளியேறியுள்ளனர்.

	பதவிப் பெயர்	எண்ணிக்கை	சேவையை முடிவுறுத்துவதற்கான காரணம்
1	பிரதி/உதவிப் பணிப்பாளர்	03 03	ஓய்வு பெறல் சேவையிலிருந்து விட்டு விலகல்
2	அபிவிருத்தி உத்தியோகத்தர்	03 02	ஓய்வு பெறல் சேவையிலிருந்து விட்டு விலகல்
3	முகாமைத்துவ உதவியாளர்	02 01	ஓய்வு பெறல் சேவையிலிருந்து விட்டு விலகல்
4	அலுவலக உதவியாளர்	01	ஓய்வு பெறல்
5	சாரதி	02	ஓய்வு பெறல்

2022ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள்

இவ்வருடத்தில் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளின் வெற்றிடங்களின் பொருட்டு16உத்தியோகத்தர்களும் அலுவலக உதவியாளர் பதவிகளின் வெற்றிடங்களின் பொருட்டு 09 உத்தியோகத்தர்களும் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பணியாளர் பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகள்

2022 ஆம் ஆண்டில் பின்வரும் பயிற்சித் திட்டங்களின் பொருட்டு உத்தியோகத்தர்களைப்பயிற்றுவிப்பதற்கு இயலுமாகவிருந்த்து.

உத்தியோகத்தரின் பெயர்	பதவி	பயிற்சி திட்டத்தின் பெயர்	பயிற்சி நிறுவனத்தின் பெயர்	கால எல்லை
1. திரு சமிந்த குமார கீர்த்திரத்ன	வழங்கல் அலுவலர்- ப.க.	அரசு கொள்கைத் திட்டமிடல் செயற்பாடுகள் தொடர்பான சான்றிதழ் பத்திரப் பாடநெறி	திறன் அபிவிருத்தி நிதியம்	10 நாட்கள்
2. திருகல்ப ரொஷான் குணதிலக்க	போக்குவரத்து உத்தியோகத்தர்	மோட்டார் வாகன தொழில்நுட்பம் தொடர்பான டிப் ளோமோ பாடநெறி	இலங்கை ஜெர்மன் தொழில்நுட்ப் பயிற்சி நிறுவனம்	01 வருடம்
3. திரு.நளின் சமிந்த ஜனக திஸாநாயக்க	முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சியம்)	களஞ்சிய முகாமைத்துவம்	விநியோகம் மற்றும் பொருள் முகாமைத்துவ நிறுவனம்	03 மாதங்கள்

மேலும், சகல நிரந்தர அலுவலக ஆளணியினரதும் 2022 ஆம் ஆண்டுவிடயத்திற்கான அறிவைப் இற்றைப்படுத்தும் பொருட்டு தேசிய தொழிலாளர் கற்கைகள் நிறுவகத்தில் பயிற்சி செயலமர்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டு உத்தியோகத்தர்களுக்குப் பயிறசி அளிக்கப்பட்டது.

ஊழியர்களின் நலன்புரி

மருத்துவக் காப்புறுதித் திட்டம்,மோட்டார் சைக்கிள் உரித்துள்ள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் கடன் வழங்கல் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பெறுகைகள் மற்றும் போக்குவரத்துத் துறை
விநியோகப் பிரிவு

சபையின் மூலம் செயற்படுத்தப்படும் காப்புறுதித் திட்டங்கள் தொடர்பாகப் பின்வரும் ஆவணங்கள் அரசின் பெறுகை நடைமுறையைக் கடைப்பிடித்து வெளி நிலையங்களில் அச்சிடுவதற்கு நடவடிக்கைகள் செய்யப்பட்டது.

மூன்றாம் தரப்புக் காப்புறுதித் திட்டம்

- மூன்றாம் தரப்பு விண்ணப்பப் படிவங்கள்
- மூன்றாம் தரப்புப் பற்றுச்சீட்டு புத்தகங்கள்
- மூன்றாம் தரப்பு அட்டைப் புத்தகங்கள்
- மூன்றாம் தரப்பு காட் அட்டைகள்

பயிர்க் காப்புறுதித் திட்டம்

- பயிர் காப்புறுதிவிண்ணப்பப் படிவங்கள்
- நெற் பயிர்ச்செய்கைக் காப்புறதிவிண்ணப்பப் படிவங்கள்
- மேலதிகப் பயிர்கள் அழிவுவிண்ணப்பப் படிவங்கள்
- அழிவுகள் அறிக்கையிடும் ஆவணங்கள்
- அழிவுகள் அறிக்கையிடும்புத்தகங்கள்

கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்

- கமக்காரர் ஓய்வூதியக் கொடுப்பனவுப் புத்தகங்கள்
- கமக்காரர் ஓய்வூதிய அடையாள அட்டைகள்

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்

- கடற்றொழிலாளர் ஓய்வூதியம் கொடுப்பனவுப் புத்தகங்கள்
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய அடையாள அட்டைகள்

நிதிரீதியான நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தப்படும் - பொதுப் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்

இதற்கு மேலதிகமாகப்பிரதான காரியாலயம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்குத் தேவையான35 பொதுவிடுமுறை விண்ணப்பங்கள், கால்நடைக் காப்புறுதிவிண்ணப்பங்கள், கால்நடைக் காப்புறுதிப் பத்திரங்கள், சுவசெதவிண்ணப்பங்கள், சுவசெதபத்திரங்கள்மற்றும் போக்குவரத்துக் கடமைகளின் பொருட்டு தேவையான ஆவணங்களும் டுப்லோ பிரிண்டர் இயந்திரம் மூலம் அச்சிடுதலும்மேற்கொள்ளப்பட்டது.
மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பிரதானகாரியாலத்திற்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவுசெய்யும் போது, பெறுகைகள்நடைமுறைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அதற்கமைய மாவட்ட அலுவலகங்களின் பொருட்டு அலுவலக உபகரணங்களும்(மேசைகள், கதிரைகள், அலுமாரிகள்)கொள்வனவு செய்யப்பட்டது.

பிரதான காரியாலயத்தின் பிரிவுகளினால் வேண்டுகோள் விடுக்கப்படும் காகிதாதிகள் பெறுகைகள் நடைமுறையைக் கடைப்பிடித்து கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியத்திற்கு வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக கனிஷ்ட ஊழியர்களின் பொருட்டு வழங்கப்படும் சீருடைகள் பெறுகைகள்

நடைமுறைக்கமைய கொள்வனவு செய்வதற்கு இவ்ஆண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

போக்குவரத்துக் குழாம்

சபையினது கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு பிரதான காரியாலயம் மற்றும்மாவட்ட அலுவலகங்களுக்கு 29 வாகனங்கள் உள்ளன. இந்த வாகனங்களில் 02 வாகனங்கள் ஒதுக்கப்பட்ட வாகனங்கள் என்பதுடன், ஏனைய வாகனங்கள் பிரதான காரியாலயம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் குழாம் கடமைகளின் பொருட்டு பயன்படுத்தப்படுகின்றன. வாகனங்களின் விபரங்கள் பின்வருமாறு.

தொ.இல.	வாகன இலக்கம்	வகை	பதிவுசெய்த வருடம்	ஆயுட்காலம்
01	32-1427	Mitsubishi Pajero	1985	38
02	32-4880	Toyota (Land Crusir)	1988	35
03	32-4850	Toyota (Land Crusir)	1988	35
04	32-4852	Toyota (Land Crusir)	1988	35
05	32-4938	Mitsubishi Pajero	1988	35
06	32-4920	Mitsubishi Pajero	1988	35
07	32-5210	Mitsubishi Pajero	1988	35
08	51-2423	Nissan (Cab)	1990	33
09	32-7718	Dihasthu (Jeep) (Rocky)	1990	33
10	32-7719	Dihasthu (Jeep) (Rocky)	1990	33
11	32-8016	Dihasthu (Jeep) (Rocky)	1990	33
12	53-9447	Mitsubishi (L200)	1992	31
13	53-9446	Mitsubishi (L200)	1992	31
14	58-4436	Mitsubishi (L200)	1996	27
15	58-4437	Mitsubishi (L200)	1996	27
16	HH-6105	Bolero (Jeep)	2003	20
17	KD-3476	Toyota (121)	2006	17
18	KF-2280	Mitsubishi Pajero	பதிவு ஆண்டு-2007 உற்பத்தி ஆண்டு -1992	- 31
19	QM-4647	Bajaj (Threewheel)	2007	16
20	KH-5041	Chevrolet (Aveo)	2008	15
21	KI-2554	Nissan (Sunny)	2008	15
22	KP-8706	Maruti (800)	2011	12
23	KP-8723	Maruti (800)	2011	12
24	KQ-0253	Maruti (800)	2011	12
25	NC-4104	Toyota (Hiace)	2015	8
26	NC-4096	Toyota (Hiace)	2015	8
27	CAL-6100	Micro(Rexton)	2015	8
28	CAL-6101	Micro(Rexton)	2015	8
29	TVS	Champசைக்கிள் -48cc	2008	15

அலுவலகக் கட்டடங்கள்

சபையின் பிரதான காரியாலயம் இவ்வருடத்திலும் இலக்கம் 117,சுபத்ராராம வீதி,கங்கோடவில,நுகேகொடை என்னும்முகவரியில் உள்ள தனியார் கட்டடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வந்தது. சபையின் 30 பிராந்திய அலுவலகங்கள் செயற்படுவதுடன். பராமரிக்கிறது,இவற்றில் சபைக்குச் சொந்தமாக06 கட்டடங்கள் உள்ளன. ஏனைய மாவட்ட அலுவலகங்கள் மாதாந்த வாடகை அடிப்படையில் அரச மற்றும் தனியார் கட்டடங்களில் தொடர்ந்தும் செயற்படுகின்றது.

திட்டமிடல் பிரிவு

திட்டமிடல் பிரிவு - 2022

2022 ஆம் ஆண்டில், திட்டமிடல் பிரிவினால், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் தொலைநோக்கு மற்றும் பணிகளுக்கமையச் செயற்பட்டு, சபையின் சகல பிரிவுகளும் ஒன்றிணைந்து, குறிக்கோள் மற்றும் இலக்குகளை அடையத் தேவையான திட்டங்களைத் தயாரித்தல்,கருத்திட்டங்கள் மற்றும் முன்மொழிவுத் திட்டமிடல், தரவு மற்றும் புள்ளிவிபரங்களை முறையாகச் சேகரித்தல்,பகுப்பாய்வு செய்தல், தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல், ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளது.

அடுத்த ஐந்தாண்டுகளின் பொருட்டு திட்டங்களைத் தயாரித்தல்

- **2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் பொருட்டு செயற்படுத் திட்டத்தைத் தயாரித்தல்**.

2022 ஆம் ஆண்டின் பொருட்டு செயற்படுத் திட்டம் மற்றும் ஐந்தாண்டு மூலோபாயத் திட்டத்தின் வரைவு, இது 23/02/2022 ஆந் திகதி நடைபெற்ற 516 வது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதன்போது,தீர்மானிக்கப்பட்டவாறு,30/04/2022 ஆந் திகதி 519 வது விசேட பணிப்பாளர் சபைக் கூட்டம் கூட்டப்பட்டு, சபையின் தொடர் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படும் முறை பற்றி மேலும் கலந்துரையாடப்பட்டது.

அதன்போது, கலந்துரையாடப்பட்ட விடயங்களை அடிப்படையாக் கொண்டு. நிறைவேற்றுச் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய தேவையான உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன், 2022/05/23, 2022/05/28 மற்றும் பிரிவு மட்டத்தில் தேவையானவாறு கலந்துரையாடல் மற்றும் கூட்டங்கள் நடாத்தப்பட்டு, மூலோபாய திட்டம் உள்ளடங்கிய2022 செயற்படுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

புதிய தலைவரின் வருகையின் பின்னர், ஏற்கனவே தயாரிக்கப்பட்டு முடிவுறுத்திய 2022 செயற்படுத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டம்(செயற்படுத் திட்டம்) பணிப்பாளர் சபைக்குச் சமர்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டு,மேலும் அது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய,புதிய கருத்துருவின் கீழ் திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனத தீர்மானிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு முடிவுறுவதற்குச் சில மாதங்கள் உள்ளதால், ஏற்கனவே தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தியிருந்த 2022 செயற்படுத் பாட்டுத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டத்தின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு புதிய செயற்படுத் திட்டத்தைத் தயாரிக்கும் பொருட்டு அறிவுரைகள் பெறப்பட்டன. அதன் போது, சபையின்நோக்கம், பணி மற்றும் குறிக்கோள்கள் நிகழ்காலத்திற்கும் மற்றும் எதிர்கால நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப தற்போதைய மற்றும் எதிர்கால திட்டங்களுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டது. அதற்கமைய, பொதுவாக இவ்வாறான நடவடிக்கையின் பொருட்டு கணிசமான அளவு காலம் கழிந்தாலும், 2022 அறிக்கைத் தயாரிக்கப்பட்டு முன் ஆயத்தத்துடன் இருந்த காரணத்தால், 2022 செயற்படுத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டம் புதிய எண்ணக்கருமற்றும் மாதிரியின் கீழ் தயாரிக்கப்பட்டதுடன், அதன்போது கிடைக்கப் பெற்ற கருத்துகளின் அடிப்படையில் 2023 செயற்படுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

இதன் பொருட்டு, இது தொடர்பான நிபுணரான பொறியிலாளர் திரு. பிரபாத் விதானகே அவர்கள் தலைமையில், நிறைவேற்று உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் உட்பட் 50 உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன்,10/19/2022 மற்றும் 10/20/2022 அகிய இரு நாட்கள் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தில் விசேட செயலமர்வு நடைபெற்றது.

அதன்போது, பிரிவு மட்டத்தில் நிறுவனப் பணிகளின் பகுப்பாய்வின் நோக்கம், பணி, இலட்சியங்கள் மற்றும் நோக்கங்களில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டன .இவ்வாறு வரைவு செய்யப்பட்டமூலோபாயத் திட்டம் மற்றும் 2023 செயற்படுத் திட்டம் தொடர்பாக2022/11/17 மற்றும் 2022/11/22 ஆகிய திகதிகளில், பிரதான காரியாலயத்தில் நிறைவேற்று உத்தியோகத்தர்களுடன் மேலும் கலந்துரையாடல் கூட்டங்கள் நடத்தப்பட்டன.
அதற்கமைய, வரைவு செய்யப்பட்ட, 2023 ஆம் ஆண்டின் பொருட்டான செயற்படுத் திட்டம்2022 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 23 ஆந் திகதி நடைபெற்ற 523வது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டதுடன், அதன் பிரதிகள் விவசாய அமைச்சு, நிதி அமைச்சு போன்ற தேவையான நிறுவனங்களுக்கு முன்வைக்கப்பட்டது

- அரசின் ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் பொருட்டு திட்டங்களைத் தயாரித்தல்.

அரசின்ஒதுக்கீட்டின் அடிப்படையில் செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக, 2023 ஆம் ஆண்டின் பொருட்டான செயற்படுத் திட்டங்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் திட்டமிடல் பிரிவின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது .

அதன் கீழ் கட்டாயப் பயிர்ச்செய்கைக் காப்புறுதித் திட்டம், ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத்திட்டம் மற்றும் மூலதனத் தேவைகள் தொடர்பாக,2023 ஆம் ஆண்டின் பொருட்டு ஒதுக்கீடுகள்ஒதுக்கிக் கொள்ளல் பொருட்டான செயற்படுத் திட்டம் மற்றும் 2022 வருடாந்த முன்னேற்றம் தொடர்பாக உரிய படிவங்களுக்கமையப் பூர்த்தி செய்யப்பட்டு விவசாய அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டது.

<u>பிரிவுகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு, தரவு மற்றும் தகவல்கள் சேகரிப்பு மற்றும் வெளி நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு</u>

- <u>பிரிவுகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு, தரவு மற்றும் தகவல்கள் சேகரிப்பு</u>

திட்டமிடல் பிரிவினால் 2022 ஆம் ஆண்டு முழுவதும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின்சகல பிரிவுகளுடனும் நல்ல ஒருங்கிணைப்பைப் பேணி, ஒவ்வொரு பிரிவுகளினதும் இற்றைப்படுத்தப்பட்டதரவு மற்றும் புள்ளிவிபரத் தகவல்களை முறையாகச் சேகரிக்கப்பட்டதுடன்,அப்புள்ளிவிவரங்களின் பகுப்பாய்வு மூலம், மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுதேவையான நடவடிக்கைகளின் பொருட்டுஉயர் முகாமைத்துவதற்குச் சமரப்பிக்கப்பட்டது.

- **வெளி நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு**

மேலும் , நிதியமைச்சு, இலங்கை மத்திய வங்கி, விவசாய அமைச்சு உள்ளிட்ட விவசாயத் துறையுடன் தொடர்புடைய சகல நிறுவனங்களையும் ஏனைய நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து, 2022 ஆம் ஆண்டு தொடர்பாகஅந் நிறுவனங்களால் கோரப்பட்ட சகல அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு,நிறுவனத்தின் தலைவர் ஊடாக உரிய நிறுவனங்களுக்குத் துரிதமாக முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- **செயற்திறன் அறிக்கைகளைத் தயாரித்தல்**

2022 ஆம் ஆண்டினுள், இச் சபையினால் அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பான தரவுகள் மற்றும் தகவல்களை பிரிவு மட்டத்தில் சேகரித்து, அதற்கமைய, 2022 ஆம் ஆண்டின் பொருட்டான செயற்திறன் அறிக்கை தொடர்புடைய படிவங்களின்படி தயாரிக்கப்பட்டதுடன், அது நிறுவனத் தலைவர் ஊடாக நிரல் அமைச்சிற்குமுன்வைக்கப்பட்டது

<u>கருத்திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளைச்செயற்படுத்துதல்</u>

உலக வங்கியுடன் இணைந்த சர்வதேச நிதிக் கம்பனியின் தொழில்நுட்பப் பங்களிப்பின் கீழ் தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்ட,கமத்தொழில் தகவல்கள்முகாமைத்துவ அமைப்பை(AIMS), வெளிக்களமட்டத்தில் செயற்படுத்தும் பொருட்டு மாவட்ட அலுவலகங்களுக்கு அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகள்2022ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

- கமத்தொழில் தகவல்கள்முகாமைத்துவ அமைப்பு(AMIS) மற்றும் இணையதளம்/நடமாடும் உள்ளீடுகள் (Web/Mobile Application) மாவட்ட அலுவலகங்களுக்கு அறிமுகப்படுத்துதல் மற்றும் வெளிக்களத்தில் செயற்படுத்துதல்.

2022/23 பெரும் போகம் ஆரம்பத்துடன், கமத்தொழில் தகவல்கள் முகாமைத்துவ அமைப்பு(AIMS) அனுராதபுரம் மாவட்டத்தை அடிப்படையாக கொண்டு நாடாளவீய ரீதியில் மாவட்ட அலுவலகங்களுக்கு அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. அதன்போது, தவணைப் பண அறவீட்டுடன் காப்புறுதிக்குப் பங்களிப்பு செய்யும் விவசாயிகளின் தகவல்கள்,பயிர்ச்செய்கை நிலங்கள் பற்றிய தகவல்கள் இவ் அமைப்பிற்கு உள்ளடக்கும் பொருட்டு மாவட்ட அலுவலகங்கள் செயற்படுவதற்கு வழி வகுப்பட்டது

மேற்படி வேலைத்திட்டத்தின்கீழ், அனுராதபுரம்மாவட்டத்தில் வெளிக்களங்களுக்குப் பொறுப்பாக கடமையாற்றும்மாவட்டப் பணிப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களைப்பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள்,பிரதான காரியாலயத்தின் உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன், வெளிக்களத்தில் பிரயோகப் பயிற்சி வேலைத்திட்டமாக 2022/11/12மற்றும் 2022/11/13 ஆகிய இரு நாட்களில் அனுராதபுரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேலும், தரவு அமைப்பில் தரவு உள்ளீடு நடவடிக்கைகளுக்கு உதவி புரியும் வகையில், பிரதான காரியாலயத்தின்தொழில்நுட்ப அறிவு கொண்ட

உத்தியோகத்தரொருவர்12/11/2022 ஆந் திகதி தொடக்கம் ஒரு வார காலத்திற்கு, அநுராதபுரம் மாவட்டத்தில் நடைபெறும் வெளிக்கள வேலைத்திட்டத்தின் பொ ருட்டு, பங்கேற்கச் செய்யப்பட்டார்மேற்கூறியவேவலைத்திட்டத்தின் பொருட்டு முன் பயிற்சி பெற்ற ரஜரட்ட பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் தேவையான தொழில்நுட்ப கருவிகளுடன் இதன் பொருட்டு ஈடுபடுத்தப்பட்டனர்.

இதற்கு இணையாகநாட்டின் சகலமாவட்டங்களின் பொருட்டும் கமத்தொழில் தகவல்கள் முகாமைத்துவ தரவு அமைப்பிற்கு (AIMS), தரவுகளை உள்ளிடல் மற்றும் அதன் பாவனைகள் தொடர்பான தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டது. இதன் கீழ், மாவட்ட அலுவலகங்களில்வெளிக்களத்திற்குப் பொறுப்பாகக் கடமையாற்றும் மாவட்ட பணிப்பாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தரர்கள் மற்றும் தரவு உள்ளிடும் நடவடிக்கைகளுக்குத் தொடர்பான ஏனைய உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம்ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் நிகழ்ச்சி 23/12/2022 ஆந் திகதி கமத்தொழில் மற்றும கமநலக் காப்புறுதிச் சபையின் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.இதில் அம்பாந்தோட்டை, அனுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை, மன்னம்பிட்டி மற்றும் தெஹியத்தகண்டி ஆகிய மாவட்ட அலுவலகங்களைச் சேர்ந்த 24 உத்தியோகத்தர்களின் பொருட்டு கமத்தொழில் தகவல்கள் முகாமைத்துவ தரவு அமைப்பைக்(AIMS) கையாளுதல், தரவுகளை உள்ளிடல், வரைபடமாக்கல், புகைப்படங்களைப் பதிவேற்றுதல் தொடர்பான விரிவான மற்றும் பிரயோகப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும், ஏனைய மாவட்டங்களில் உள்ள உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பது தொடர்பாக 04பயிற்சி அமர்வுகளின்கீழ் செயலமர்வுகள் நடத்துவதற்கான ஆரம்பத் திட்டங்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகளும் 2022ல், மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு அனுராதபுரம், அம்பாந்தோட்டை, அம்பாறை, மொனராகலை, மன்னம்பிட்டி, தெஹியத்தகண்டிய உள்ளிட்ட பிரதான கமத்தொழில் மாவட்டங்களில் காப்புறுதி செய்யப்பட்ட விவசாயிகள் மற்றும் பயிரிடப்பட்ட காணிகளின் விபரங்கள், செய்கை நிலங்களின் கண்காணிப்பு மற்றும் புகைப்படங்களை அமைப்பது தொடர்பான விபரங்கள் தலைமை அலுவலகத்தின் திட்டமிடல் துறையின் மேற்பார்வைக்குரிய விபரங்கள் மற்றும் புகைப்பட அமைப்பிற்கு உள்ளிடும் நடவடிக்கைகள் பிரதான காரியாலயத்தன் திட்டமிடல் பிரிவின் மேற்பார்வை வழிகாட்டுதலின் கீழ் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி வேலைத்திட்டத்துடன் தொடர்புடைய முன்னேற்ற ஆய்வு மற்றும்வெளிக்கள மட்டத்திலான சிக்கல்களைத் தீர்க்கும் நடவடிக்கைகள் தொலை தொடர்பு முறைகளைப் (தொலைபேசி உரையாடல்கள், ZOOM Meeting, AnyDesk) பயன்படுத்தி நாளாந்தம்மேற்கொள்ளப்பட்டது. மேலும், அநுராதபுரம் மாவட்ட வேலைத்திட்டத்தின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டம் 24/11/2022ஆந்திகதி பிரதான காரியாலயத்தின் திட்டமிடல் பிரிவின் உத்தியோகத்தர்களின் பங்பற்றலுடன் அநுராதபுரம் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

அதே சமயம், கமத்தொழில் தகவல்கள் முகாமைத்துவ தரவு அமைப்பின் ஊடாகக் காப்புறுதிச் செயற்பாட்டை முறையாகவும் மற்றும் விரைவுபடுத்துவதற்கும் ஏற்புடையதாக, பிரதான காரியாலயம் மற்றும் வெளிக்களத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களை தொழில்நுட்ப வசதிகளுடன் பலப்படுத்தும் நடவடிக்கைகள் ஆம்பிக்கப்பட்டது. இதன் கீழ் வெளிக்கள கடமைகளில் ஈடுபடும்

உத்தியோகத்தர்களின் பொருட்டு **டெப்**இயந்திரங்கள் வழங்குவது பொருட்டான அடிப்படை நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

- வெளி நிறுவனங்களுக்கான விழிப்புணர்வுத் திட்டங்களைச் செயற்படுத்துதல்.

2022/23 பெரும் போகம் தொடக்கம்கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட கமத்தொழில் தகவல்கள் முகாமைத்துவ தரவு அமைப்பின் (AIMS) ஐப் பயன்படுத்திகாப்புறுதி செய்யப்பட்ட பயிர்ச்செய்கைநிலங்களை மேற்பார்வை செய்யும் புதிய செயல்முறையைப் பற்றிக் காப்புறுதியுடன் தொடர்பான வெளிநிறுவனங்களை அறிவூட்டுதல் தொடர்பான பொருட்டு வேவலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதற்கட்டமாக ஆரம்ப நிகழ்வு 13/12/2022 ஆந் திகதி கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் தலைவர் அவர்களின் தலைமையில் அனுராதபுரம் மாவட்ட செயலகத்தில் நடாத்தப்பட்டது. இதன் பொருட்டு பிரதான அரச மற்றும் தனியார் வங்கிகளின் பயிர்க்கடன் தொடர்பானஉத்தியோகத்தர்கள், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும்அனுராதபுரம் மாவட்ட உத்தியோகத்தர்கள் உட்பட 48 பேர் கலந்து கொண்டனர்.

- வானிலை குறிகாட்டிகளின் அடிப்படையில் காப்புறுதி முறையை அறிமுகப்படுத்தும் கருத்திட்டத்தின்பெறுபேறுகளை மதிப்பீடல் மற்றும் பின்னாய்வு செய்தல்.

சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டு முடிவுறுத்தப்பட்ட வானிலை குறிகாட்டிகளின் அடிப்படையிலான காப்புறுதி முறையை அறிமுகப்படுத்தும் கருத்திட்டத்தின் பெறுபேறுகளை மதிப்பிடுவதற்குரிய நேர்முகப் பரீடசை 12/05/2022 ஆந் திகதி IFC நிறுவனத்தில் நடைபெற்றது. இதன்பொருட்ட கருத்திட்டத்துடன் தொடர்புடைய வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் திட்டமிடல் பிரிவின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், இக்கருத்திட்டத்தை மதிப்பீடு செய்வதற்காக வெளிநாட்டு பிரதிநிதிகள் அடங்கிய மதிப்பீட்டுக் குழு நாட்டை வந்தடைந்தனர். அதற்கமைய, 11/5/2022 ஆந் திகதி அக் குழு மற்றும் சபையின் உயர் நிர்வாகத்தினருக்கு இடையே ஒரு சந்திப்பொன்று நடைபெற்றதுடன், அன்று மாலை சபையின் நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மற்றும் திட்டமிடல் பிரிவின் கருத்திட்டத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் கருத்திட்டத்தின் முன்னேற்றத்தனை ஆய்வு செய்யும் ஒரு கூட்டம்IFC நிறுவனத்தில் நடைபெற்றது.

மேலும் , இக்கருத்திட்டத்தின் பணிகள் மதிப்பீடு செய்வது தொடர்பாக மதிப்பீட்டுக் குழு 16/11/2022 அன்று திட்டம் நடைபெற்ற கம்பஹ மாவட்டத்தில் கண்காணிப்புச் பயணத்தை மேற்கொண்டதுடன், அதன்பொருட்டு பிரதான காரியாலயத்தின்மற்றும் கம்பஹ மாவட்ட அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வானிலை குறிகாட்டிகள் அடிப்படையிலான காப்புறுதி முறைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் காப்புறுதி முன்மொழிவுத் திட்டத்தை விலையிடல் தொடர்பான பயிற்சி செயலமர்வு வெளிநாட்டு நிபுணர்களால் 2022 2/06/21 , 2022/16/22

மற்றும் 2022/06/23 ஆகிய திகதிகளில்நிகழ்நிலை முறைகள் மூலம் நடைபெற்றது. இதன்பொருட்டு திட்டமிடல் பிரிவின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

IFC நிறுவகத்தின் அதிகாரிகளின்வேண்டுகோளுக்கு இணங்க, இக் கருத்திட்டம் நடைபெற்ற முறை பற்றிய ஒரு ஆவணக் குறும்படம், IFC நிறுவகத்தின் அதிகாரிகளின் தொழில்நுட்ப ஆதரவுடன் ஒளிப்பதிவு செய்யும் நடவடிக்கைகள் 2022-06-08 மற்றும் 2022-09-09 ஆகிய இரு நாட்கள், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் வளாகத்திலும், மற்றும் அண்மித்துள்ள நெற்பயிர்ச்செய்கை நடைபெறும் வெளிக்களத்திலும் பதிவு செய்யப்பட்டது. இதன்பொருட்டுதிட்டமிடல் பிரிவின்உத்தியோகத்தர்கள் கருத்துக்களை எடுத்துரைத்தும் பின்னணி காட்சிகளின் பொருட்டும் பங்களித்தனர்.

- GIZ கருத்திட்டத்தின் கீழ் ERP அமைப்பைத் தயாரிப்பது தொடர்பான பணிகள்பணிப்பாய்வுக் குறிப்புக்கள் (Workflow)தயாரித்தல்.

AIMS மற்றும் GIZ கருத்திட்டம் தொடர்பாக வணிக ஆய்வாளராக(Business Analyst) திட்டமிடல் பிரிவின்நெத்மி உபேகா உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டதுடன், அவரால் ஒவ்வொரு பிரிவுகளினதும் கடமைப் பணிகள் மற்றும் செயற்பாடுகளைக் அடையாளம் கண்டு அதற்கமைய பணிப்பாய்வுக் குறிப்புக்கள் (Workflow) தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.

நிதிப் பிரிவு

நிதித் தொகுப்பு

2022 ஆம் வருடத்தில், சபையின்கமத்தொழில் காப்புறுதித் திட்டம் 2,319 மில்லியன் ரூபாவை நிகர லாபமாக ஈட்டியதுடன், இவ்வருடத்தில் ஈட்டிய இயக்க இலாபம் 2,663 மில்லியன் ரூபாவாகும்.

2018 வரவு செலவு திட்ட முன்மொழிவுகளின்படி, கட்டாயக் காப்புறுதித் திட்டம்அவ் ஆறு வகையான பயிர்களுக்கும் இவ்வருடமும் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அதன் மூலம் நெல், சோளம், பெரியவெங்காயம், உருளைக்கிழங்கு, சோயா மற்றும் மிளகாய் ஆகிய பயிர்களின் பொருட்டும் ஏக்கருக்குரூபா 40,000/- அதிகபட்சத்தின் கீழ் காப்பீடு எற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

பல போகங்களில் நிலவிய கடும் வரட்சி மற்றும் வானிலை மற்றும் காலநிலை மாற்றங்களினால் ஏற்பட்ட தாக்கத்தினால் கருத்திற்கொண்டு வருடத்தினுள் விவசாயிகளிடம் இருந்து அறவிடப்படும் தவணைப் பணத்தை விவசாயிகளிடமிருந்து அறவிடாது அரசினால் வழங்குவதற்குத் தீர்மானித்ததுடன்,இதன் தொகை 1950 மில்லியன் ரூபாவாகும்.

இதற்கு மேலதிகமாக, 2022 ஆம் ஆண்டில், மேலதிகக் காப்புறுதித் தவணைப் பணத்தை அறவிட்டதன் மூலம் பயிர்களுக்கு ஏற்படும் சகல அவதானமான நிலைகளையும் ஈடுசெய்யும் வகையில் குறைந்தபட்சத் தவணைப் பணம் ரூபா 6,400/- இன் உட்படுத்தப்பட்டு,ஏக்கருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத்தொகையை ரூபா 100,000/- வரையில் அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் போதும் கூட,2022 ஆம் ஆண்டில், சபையின் ஏனைய காப்புறுதித திட்டங்களுக்கு முந்திய வருடங்களுக்கு ஒப்பிடுகையில் 5.1% அதிகரிப்பை ஈட்டியுள்ளது.


2022 ஆம் ஆண்டில், சபையின் கட்டாயப் பயிர்க் காப்புறுதி இழப்பீட்டுப் பொறுப்பு 698.7 மில்லியன் ரூபா அளவிலாகும்.

2022 இந்த ஆண்டில், கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் 169,741 விவசாயிகளின் பொருட்டு ஓய்வூதியமாக 3,918 மில்லியன்ரூபா நிகரத் தொகையைச் செலுத்தியுள்ளது.கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் 5,556 கடற்றொழிலாளர்களுக்78.3 மில்லியன் ரூபாய் ஓய்வூதியமாக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களின் நிதிசார் தகவல்கள்

இலாபம்செயற்பாட்டு இலாபம்

- கமத்தொழில் காப்புறுதி முன்மொழிவுத் திட்டம்




	1 2018	2 2019	3 2020	4 2021	5 2022
செயற்பாட்டு லாபம் (மி.ரூ.)	1 , 144.7	878	1 , 401.3	1 , 752	2 , 663
நிகர லாபம் (மி.ரூ.)	921	652.3	1 , 153.7	1 , 494.4	2 , 319

2022வருடத்தில், கமத்தொழில் காப்புறுதித் திட்டத்தின் மூலம்2,319 மில்லியன் ரூபா நிகர இலாபம் ஈட்டப்பட்டுள்ளதுடன்,இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 55.17% அதிகரிப்பைக் காட்டுகிறது. இந்த நிலைமைக்கான காரணங்கள், முன்னைய ஆண்டை விட காப்புறுதி வருமானம் அதிகரிப்பு மற்றும் இழப்பீடு கொடுப்பனவுகள் உட்படசெயற்பாட்டுச் செலவுகள் குறைவடைந்தாகும். இதன்படி, 2021 ஆம் ஆண்டில் மொத்த காப்புறுதி வருமானம் 152.6 மில்லியன் ரூபா என்பதுடன், அது 2022 ஆம் ஆண்டில் 713.2 மில்லியன் ரூபாவாகும். இது 2021 ஆம் ஆண்டை விட 367% அதிகமாகும். இது தவிர, சபையினால் நடை முறைப்படுத்தப்பட்டமூன்றாம் தரப்புக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உயர்ந்த முன்னேற்றத்தைக் காட்டியுள்ளதுடன், இதன் மூலம் 2022 ஆம் ஆண்டில் சபை

ஈட்டிய வருமானம் 311 மில்லியன் ரூபாவாகும், இது 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.9% அதிகரிப்பாகும்.


- <u>கமக்காரர் ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டம்</u>



	1 2018	2 2019	3 2020	4 2021	5 2022
வருமானம் (மி.ரூபா)	211.9	233.4	209.8	224	276.9
செயற்பாடுகள் செலவு (மி.ரூ.)	3114	3271	4555	3766	3967.9

2022 ஆம் ஆண்டில், 169,741 விவசாயிகளுக்கு நிகர ஓய்வூதியமாக 3,918 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது . இவ் வருடத்தில், ஓய்வூதியத் திட்டத்தின் மொத்தச் செயற்பாட்டுச் செலவு 3967.9 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், கடந்த ஆண்டு போன்று இவ்வாண்டிலும் ஓய்வூதியம் வழங்குவதற்காக 4,158 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடாக திறைசேரி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

- <u>கடற்றொழிலாளர்ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டம்</u>



	1 2018	2 2019	3 2020	4 2021	5 2022
வருமானம்	69.7	53	29.6	35.2	102.4
செயற்பாட்டுச் செலவு	66.1	67.2	115.4	78.7	81.6

2022 ஆம் ஆண்டில், கடற்றொழிலாளருக்கு78.3 மில்லியன் ரூபாய் ஓய்வூதியமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன், இதன் பொருட்டுசபைக்குச் சொந்தமான நிதி பயன்படுத்தப்பட்டது.

2022 மொத்தத் திட்டங்கள் மற்றும் விவசாயக் காப்பீட்டுத் திட்டத்திற்கான கணக்குகளின் ஒருங்கிணைந்த அறிக்கை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
ஒன்றிணைந்த நிதிக்கூற்று
நிதி நிலைமைக் கூற்று

		கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை (குழுமம்)		கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	
		2022.12.31	2021.12.31	2022.12.31	2021.12.31
	குறிப்புக்கள்	ரூ. ச.	ரூ. ச	ரூ. ச	ரூ. ச
சொத்துக்கள்					
நடைமுறையல்லாத சொத்துக்கள்					
சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	1	58,734,565.10	52,340,853.15	53,958,364.70	49,701,372.45
		58,734,565.10	52,340,853.15	53,958,364.70	49,701,372.45
முதிர்ச்சி வரையில் தடுத்த வைத்த முதலீடுகள்					
திறைசேரி பிணைப் பத்திரங்கள்		1,562,157,095.25	1,045,073,943.17	522,795,607.14	-
		1,562,157,095.25	1,045,073,943.17	522,795,607.14	-
நடமாடும்சொத்துக்கள்					
இருப்பு	2.1	35,479,123.85	10,444,427.65	31,718,050.45	8,986,803.01
கிடைக்கப் பெற வேண்டியவை	2.2	176,995,438.57	772,083,675.90	959,808,915.80	1,600,691,389.17
கிடைக்கப் பெற வேண்டிய தவணைப் பணம்	2.3	4,254,814,019.25	2,904,272,630.51	4,252,903,299.25	2,902,448,847.51
வைப்புக்கள் மற்றும் முன்கொடுப்பனவுகள்	2.4	6,075,138.98	5,308,286.19	6,075,138.98	5,308,286.19
முற்பணம்	2.5	668,883.19	742,918.82	668,883.19	742,918.82
முதிர்சி வரையில் தடுத்தவைத்த நிதிப் பத்திரங்கள்	2.6	5,170,060,616.87	4,414,732,250.04	4,092,320,982.00	3,733,511,529.73
வங்கியில் உள்ள பணம்	2.7	88,918,256.55	29,912,263.50	84,816,800.47	14,014,103.40
		9,733,011,477.26	8,137,496,452.61	9,428,312,070.14	8,265,703,877.83
மொத்தச் சொத்துக்கள்		**11,353,903,137.61**	**9,234,911,248.93**	**10,005,066,041.98**	**8,315,405,250.28**
பங்கு மற்றும் பொறுப்புக்கள்					
மூலதனம் மற்றும் ஒக்கங்கள்					
திறைசேரி பங்களிப்புச்செய்த ஆரம்ப மூலதனம்		50,000,000.00	50,000,000.00	50,000,000.00	50,000,000.00
க.கா.ச. நிதி (நிலுவை மற்றும்மேலதிகம்	3	(84,680,098,305.19)	(82,567,418,019.18)	6,907,682,321.95	4,588,669,420.07
அரச அன்பளிப்பு - மூலதனம்	4	12,128,063.62	17,915,566.53	12,128,063.62	17,915,566.53
க.கா.ச. நிதியம்	5	435,124,724.78	301,967,881.11	435,124,724.78	301,967,881.11
மரண பணிக்கொடை நிதியம்	6	1,292,310,846.99	1,178,731,261.16	1,258,775,352.29	1,146,766,066.46
அலுவலக ஆளணியினரின் சுகாதாரக் காப்புறுதி நிதியம்		18,812,989.19	13,572,359.07	18,812,989.19	13,572,359.07
கெத்தட அருண கட்டாயக் காப்புறுதி நிதியம்		706,503,600.00	706,503,600.00	706,503,600.00	706,503,600.00
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்		60,979,166.66	60,979,166.66	58,129,166.66	58,129,166.66
உற்பத்தி மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பு நிதியம்		31,660,458.10	24,545,950.47	31,660,458.10	24,545,950.47
திறைசேரி முறிகளின் பேரில் அரசின் அளிப்புக்கள்		1,081,488,000.00	1,081,488,000.00	-	-
மூலதனக் கொடுப்பனவு GIZ		65,792,099.98	-	65,792,099.98	
		(80,925,298,355.87)	(79,131,714,234.18)	9,544,608,776.57	6,908,070,010.37
நடைமுறைச் சொத்துக்கள்					
பணிக்கொடையின் பொருட்டு ஒதுக்கீடு		61,124,641.91	84,311,918.25	24,842,727.00	30,787,791.93
ஒய்வூதியப் பொறுப்புக்கள்		87,503,204,013.80	82,828,949,558.70	-	-
		87,564,328,655.71	82,913,261,476.95	24,842,727.00	30,787,791.93
நடைமுறையல்லாத சொத்துக்கள்					
அச்சு நடவடிக்கையின் பொருட்டு ஒதுக்கீடு		1,742,199.31	2,634,747.38	500,000.00	1,116,614.60
முன் தவணை வரவு	7.1	45,942,713.24	25,831,363.48	45,942,713.24	24,131,012.48
ஏனைய கொடுப்பனவு செய்ய வேண்டியவை	7.2	4,353,136,401.60	4,247,367,978.36	77,645,436.60	175,441,794.01
அட்டுறுச் செலவுகள்	7.3	16,784,421.08	18,544,529.46	14,259,286.03	16,872,639.41
அழிவு மீளளிப்பின் பொருட்டு ஒதுக்கீடு	7.4	297,267,102.54	1,158,985,387.48	297,267,102.54	1,158,985,387.48
		4,714,872,837.77	5,453,364,006.16	435,614,538.41	1,376,547,447.98
மொத்தப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்		11,353,903,137.61	9,234,911,248.93	10,005,066,041.98	8,315,405,250.28

இந்நதிக் கூற்று இலங்கை கணக்கியல் தரநியமனங்களின் தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாகும்.

....
நிதிப் பிரிவின் தலைவர் பணிப்பாளர் நாயகம்

இந்நிதிக் கூற்றைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலின் பொருட்டு பணிப்பாளர் சபை பொறுப்புக் கூறல் வேண்டும்
பணிப்பாளர் சபை சார்பில் ஒப்பமிட்டவர்

....
பணிப்பாளர் சபை உறுப்பினர் பணிப்பாளர் சபை உறுப்பினர்
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தாழில் மற்றும் கமநலக் காப்புறுதிச

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
ஒன்றிணைந்த நிதிக் கூற்று
விரிவான வருமானக் கூற்று
2022.12.31

		கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை (குழுமம்)		கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	
		2022.12.31	2021.12.31	2022.12.31	2021.12.31
வருமானம்	**குறிப்புக்கள்**	**ரூ. ச.**	**ரூ. ச.**	**ரூ. ச.**	**ரூ. ச.**
பங்களிப்புப் பணம்	8.1	503,235,295.13	505,227,300.78	390,559,060.16	390,852,447.50
காப்புறுதி தவணைப் பணம் - திறைசேரி பங்களிப்புப் பணம்		1,950,000,000.00	1,950,000,000.00	1,950,000,000.00	1,950,000,000.00
இழப்பீடுகளின் பொருட்டு அளிப்பு - தே.கா. பயிர் வரி		378,504,691.86	963,444,973.83	378,504,691.86	963,444,973.83
வட்டி வருமானம்	8.2	888,117,028.85	236,492,245.00	713,257,269.63	152,608,628.56
மொத்த வருமானம்		**3,719,857,015.84**	**3,655,164,519.61**	**3,432,321,021.65**	**3,456,906,049.89**
செயற்பாட்டுச் செலவினம்					
இழப்பீடுகள் கொடுப்பனவு	9.1	(712,325,510.81)	(1,650,202,697.16)	(712,325,510.81)	(1,650,202,697.16)
மறு காப்புறுதியாளரிடமிருந்து மீள அறவிடப்படக் கூடிய உரித்துரிமை		-	-	-	-
செயற்பாட்டு செலவினம்	9.2	(72,516,884.47)	(70,062,875.89)	(56,858,637.47)	(54,700,948.89)
ஒய்வூதியக் கொடுப்பனவு மற்றும் தரகுப் பணம்		(3,997,234,231.00)	(3,794,503,178.00)	-	-
பங்களிப்புப் பணத்தை மீளச் செலுத்துதல் மற்றும் தேறிய வட்டி பணம்		(17,025,847.42)	(15,023,588.00)	-	-
கொடுப்பனவு		(18,946,560.00)	(19,490,194.20)	-	-
		(1,153,362.69)	(1,122,190.00)	-	-
		(4,819,202,396.39)	**(5,550,404,723.25)**	**(769,184,148.28)**	**(1,704,903,646.05)**
பற்றாக்குறை		**(1,099,345,380.55)**	**(1,895,240,203.64)**	**2,663,136,873.37**	**1,752,002,403.84**
ஒய்வூதியம் செலுத்தும் பொருட்டு அரசின் அளிப்பு		3,968,000,000.00	3,753,000,000.00	-	-
நிர்வாகச் செலவின் பொருட்டு அரசின் அளிப்பு		190,000,000.00	247,000,000.00	-	-
ஏனைய வருமானங்கள்	10	9,820,857.57	11,136,623.60	6,745,479.27	8,160,201.36
		4,167,820,857.57	**4,011,136,623.60**	**6,745,479.27**	**8,160,201.36**
		3,068,475,477.02	**2,115,896,419.96**	**2,669,882,352.64**	**1,760,162,605.20**
செலவினம்					
நிர்வாகச் செலவு	11	(417,450,416.91)	(336,085,803.04)	(229,100,719.52)	(184,219,914.26)
நிதி மற்றும் ஏனையவை	12	(179,615.16)	(111,957.30)	(100,879.17)	(67,630.00)
மொத்தச் செலவினம்		**(417,630,032.07)**	**(336,197,760.34)**	**(229,201,598.69)**	**(184,287,544.26)**
தேறிய மிகை / (பற்றாக்குற)		**2,650,845,444.95**	**1,779,698,659.62**	**2,440,680,753.95**	**1,575,875,060.94**
க.க.கா.ச. ஒதுக்க நிதியத்தின் பொருட்டு ஒதுக்கீடு		(133,156,843.67)	(87,600,120.19)	(133,156,843.67)	(87,600,120.19)
ஒக்கீட்டின் பின்னரதேறிய மிகை (பற்றாக்குறை)		**2,517,688,601.28**	**1,692,098,539.43**	**2,307,523,910.28**	**1,488,274,940.75**
வேறு விரிவான வருமானங்கள்					
பணிக்கொடை இலாபம்/ (நட்டம்)		37,127,258.25	18,693,910.13	11,488,991.60	6,084,834.57
அதிகரிப்பு		(4,674,254,455.10)	(4,411,586,355.01)	-	-
		(4,637,127,196.85)	**(4,392,892,444.88)**	11,488,991.60	6,084,834.57
வரிவான வருமானததனதேறிய மிகை / (பற்றாக்குறை)		**(2,119,438,595.57)**	**(2,700,793,905.45)**	**2,319,012,901.88**	**1,494,359,775.32**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
பங்கு மாற்றங்கள் தொடர்பான கூற்று
2022 திசம்பர் 31 ஆந் திகதிக்கு

குழுமம்

விபரம்	மூலதனத்தின் பொருட்டு அரசின் அளிப்பு ரூபா	திரட்டிய மிகை/ பற்றாக்குறை ரூபா	மூலதன செலவின் பொருட்டு அரசின் அளிப்புக்க ரூபா	க.க.கா.ச. ஒதுக்கு நிதியம் ரூபா	கமக்காரர் மரணப் பணிக்கொடை நிதியம் ரூபா	அலுவலக ஆளணியி னரின் வைத்தியக் காப்புறுதி ரூபா	கெத்தட அருண கட்டாயக் காப்புறுதி நிதியம் ரூபா	மீள் கணக்கீடு மற்றும் ஒதுக்கம் ரூபா	ஊக்குவிப்பு மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பு நிதியம் ரூபா	திறைசேரி முறியின் பொருட்டு அரசின் அளிப்பு ரூபா	மூலதன ஒதுக்கீடு GIZ ரூபா	மொத்தம் ரூபா
2021 ஜனவரி 01 ஆந் திகதிக்கு மீதி	**50,000,000**	**(79,866,624,114)**	**3,169,323**	**214,367,761**	**1,108,122,512**	**8,678,452**	**706,503,600**	**60,979,167**	**17,595,272**	**1,081,488,000**	-	**(76,615,720,027)**
கடந்த வருடத்தின் சீராக்கம்		17,000										17,000.00
வருடத்திலுள் சேர்க்கப்பட்டவை	-		20,000,000	87,600,120	19,490,194	6,381,447	-	-	14,825,022	-		148,296,784
வட்டி வருமானம்	-				52,418,185	451,642	-	-	-	-		52,869,827
அரசின் அன்பளிப்பு மதிப்பிறக்கம்	-	-	(5,253,757)	-	-	-	-	-	-	-		(5,253,757)
காப்புறுதி பயனுறிகளின் கொடுப்பனவு	-				(1,299,630)	(1,939,182)	-	-	(7,874,344)			(11,113,156)
தேறிய மிகை /(பற்றகாக்குறை)	-	(2,700,793,905)	-	-	-			-	-	-		(2,700,793,905)
2021 திசம்பர் 31 ஆந் திகதிக்கு மீதி	**50,000,000**	**(82,567,401,019)**	**17,915,567**	**301,967,881**	**1,178,731,261**	**13,572,359**	**706,503,600**	**60,979,167**	**24,545,950**	**1,081,488,000**	-	(79,131,697,234)
வருடத்திலுள் சேர்க்கப்பட்டது:	-	6,741,310	-	133,156,844	18,946,560	5,503,200		-	15,552,007	-	65,792,100	245,692,020
வட்டி வருமானம்					95,985,651	1,821,998						97,807,649
அரசின் அன்பளிப்பு மதிப்பிறக்கம்	-	-	(5,787,503)	-	-	-		-				(5,787,503)
காப்புறுதி பயனுறிகளின் கொடுப்பனவு					(1,352,625)	(2,084,568)			(8,437,499)			(11,874,692)
தேறிய மிகை /(பற்றாக்குறை)	-	(2,119,438,596)	-	-	-	-						(2,119,438,596)
2022 திசம்பர் 31 ஆந் திகதிக்கு மீதி	**50,000,000**	**(84,680,098,305)**	**12,128,064**	**435,124,725**	**1,292,310,847**	**18,812,989**	**706,503,600**	**60,979,167**	**31,660,458**	**1,081,488,000**	**65,792,100**	**(80,925,298,356)**

பங்குகளின் மாற்றங்கள் தொடர்பான கூற்று
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்

விபரம்	மூலதனத்தின் பொருட்டு அரசின் அளிப்பு ரூபா	திரட்டிய மிகை/ பற்றாக்குறை ரூபா	மூலதன செலவின் பொருட்டு அரசின் அளிப்புக்க ள் ரூபா	க.க.கா.ச. ஒதுக்கு நிதியம் ரூபா	கமக்காரர் மரணப் பணிக்கொடை நிதியம் ரூபா	அலுவலக ஆளணியி னரின் வைத்தியக் காப்புறுதி ரூபா	கெத்தட அருண கட்டாயக் காப்புறுதி நிதியம் ரூபா	மீள் கணக்கீடு மற்றும் ஒதுக்கம் ரூபா	ஊக்குவிப்பு மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பு நிதியம் ரூபா	திறைசேரி முறியின் பொருட்டு அரசின் அளிப்பு ரூபா	மூலதன ஒதுக்கீடு GIZ ரூபா	மொத்தம் ரூபா
2021 ஜனவரி 01 ஆந் திகதிக்கு மீதி	**50,000,000**	**3,094,309,645**	**3,169,323**	**214,367,761**	**1,077,622,157**	**8,678,452**	**706,503,600**	**58,129,167**	**17,595,272**	-	-	**5,230,375,377.07**
வருடத்திலுள் சேர்க்கப்பட்டது:	-		20,000,000	87,600,120	17,737,354	6,381,447	-	-	14,825,022	-	-	146,543,944
வட்டி வருமானம்	-				52,418,185	451,642	-	-	-	-	-	52,869,827
அரசின் அன்பளிப்பு மதிப்பிறக்கம்	-	-	(5,253,757)	-	-	-	-	-	-	-	-	(5,253,757)
காப்புறுதி பயனுறிகளின் கொடுப்பனவு	-				(1,011,630)	(1,939,182)	-	-	(7,874,344)	-	-	(10,825,156)
தேறிய மிகை /(பற்றாக்குறை)	-	1,494,359,775	-	-	-			-	-	-	-	1,494,359,775
2021 திசம்பர் 31 ஆந் திகதிக்கு மீதி	**50,000,000**	**4,588,669,420**	**17,915,567**	**301,967,881**	**1,146,766,066**	**13,572,359**	**706,503,600**	**58,129,167**	**24,545,950**	-	-	**6,908,070,010.38**
வருடத்திலுள் சேர்க்கப்பட்டது:	-	-	-	133,156,844	17,197,260	5,503,200		-	15,552,007	-	65,792,099.98	237,201,410
வட்டி வருமானம்					95,985,651	1,821,998				-		97,807,649
மதிப்பிறக்கம்-கமக்காரர் ஓய்வூதியம் அரச அளிப்பு	-	-	(5,787,503)	-	-	-		-		-		(5,787,503)
காப்புறுதி பயனுறிகளின் கொடுப்பனவு					(1,173,625)	(2,084,568)			(8,437,499)	-	-	(11,695,692)
தேறிய மிகை /(பற்றாக்குறை)	-	2,319,012,902	-	-	-	-				-		2,319,012,902
2022 திசம்பர் 31 ஆந் திகதிக்கு மீதி	**50,000,000**	**6,907,682,322**	**12,128,064**	**435,124,725**	**1,258,775,352**	**18,812,989**	**706,503,600**	**58,129,167**	**31,660,458**	-	**65,792,100**	**9,544,608,777**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
காசுப் பாச்சல் கூற்று
2022.12.31

	கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை (குழுமம்)		மத்தொழில் காப்புறுதித் திட்ட	
	2022.12.31	**2021.12.31**	**2022.12.31**	**2021.12.31**
	ரூபா ச.	**ரூபா ச.**	**ரூபா ச.**	**ரூபா ச.**
செயற்பாட்டு நடவடிக்கைகளினால் எழுந்த காசுப் பாச்சல்				
தேறிய மிகை /(பற்றாக்குறை)	(2,119,438,595.57)	(2,700,793,905.45)	2,319,012,901.88	1,494,359,775.32
கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை சீராக்கங்கள்				
தேய்மானம்	20,284,691.45	19,445,260.75	19,098,611.15	18,437,621.51
மதிப்பிறக்கம் - அரசின் அன்பளிப்பு	(5,787,502.91)	(5,253,756.74)	(5,787,502.91)	(5,253,756.74)
கடந்த வருடம் தொடர்பான சீராக்கம்	17,000.00	(1,179,625.30)	0.00	-
ஓய்வூதியப் பொறுப்புக்கள்	4,674,254,455.10	4,411,586,355.01	0.00	-
க.க.கா. ஒதுக்க நிதியத்தின்பொருட்டு ஒதுக்கீடு	133,156,843.67	87,600,120.19	133,156,843.67	87,600,120.19
பணிக்கொடை இலாபம்/நட்டம்	(18,946,560.00)	(19,490,194.20)	(17,197,260.00)	(17,737,354.20)
	(37,127,258.25)	**(18,693,910.13)**	**(11,488,991.60)**	**(6,084,834.57)**
சொத்துக்கள்,பொறிகள், உபகரணங்கள் கையுதிர்த்தலின் பேரில் இலாபம்/நட்டம்	4,765,851,669.06	4,474,014,249.58	117,781,700.31	76,961,796.19
ஓய்வூதியப் பணிக்கொடையின் பொருட்டு ஒதுக்கீடு	14,280,736.91	12,233,973.05	5,543,926.64	4,867,170.67
செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் செயற்பாட்டு மிகை	**2,660,693,810.40**	**1,785,454,317.18**	**2,442,338,528.83**	**1,576,188,742.18**
இருப்புப் பொருட்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	(25,034,696.20)	(1,448,055.37)	(22,731,247.44)	(1,433,812.20)
கிடைக்கப் பெற வேண்டியவை (அதிகரிப்பு)/வீழ்ச்சி	595,088,237.33	(507,180,839.10)	640,882,473.37	(459,001,796.20)
கிடைக்கப் பெற வேண்டிய தவணைப் பணம் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	(1,350,541,388.74)	(951,783,493.21)	(1,350,454,451.74)	(952,771,663.21)
வைப்புக்கள் மற்றும் முன் கொடுப்பனவுகள் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	(766,852.79)	615.61	(766,852.79)	615.61
முற்பணத்தில் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	74,035.63	(71,018.23)	74,035.63	(71,018.23)
சேத இழப்புகளின் பொருட்டு ஒதுக்கீடு	(861,718,284.94)	583,966,926.16	(861,718,284.94)	583,966,926.16
அச்சிடல் நடவடிக்கைகளின் பொருட்டு ஒதுக்கீடு (அதிகரிப்பு)/வீழ்ச்சி	(892,548.07)	(80,550.08)	(616,614.60)	30,566.64
முன் தவணைப் பணத்திற்கான முற்பணம் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	20,111,349.76	(8,822,083.33)	21,811,700.76	(10,522,434.33)
ஏனைய கொடுப்பனவு செய்யப்பட வேண்டியவை (அதிகரிப்பு)/வீழ்ச்சி	105,768,423.24	116,430,044.76	(97,796,357.41)	99,933,473.41
அட்டுறுச் செலவினங்கள் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	(1,760,108.38)	(3,149,205.03)	(2,613,353.38)	(647,715.07)
	(1,519,671,833.16)	**(772,137,657.82)**	**(1,673,928,952.54)**	**(740,516,857.42)**
செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவாகிய பணம்	**1,141,021,977.24**	**1,013,316,659.36**	**768,409,576.29**	**835,671,884.76**
ஓய்வூதியப் பணிக்கொடை - கொடுப்பனவு	(340,755.03)	(20,654,472.50)	-	(8,485,827.50)
செயற்பாட்டு நடவடிக்கைகளினால் எழுந்த தேறிய காசுப் பாச்சல்	**1,140,681,222.21**	**992,662,186.86**	**768,409,576.29**	**827,186,057.26**
முதலீட்டு செயற்பாடுகளினால் எழுந்த காசுப்				
வைத்தியக் காப்புறுதி நிதியம்	5,240,630.12	4,893,906.78	5,240,630.12	4,893,906.78
கமக்காரர் மரணப் பணிக்கொடை நிதியம்	132,526,145.83	90,098,943.53	129,206,545.83	86,881,263.53
உற்பத்தி மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பு நிதியம்	7,114,507.63	6,950,678.43	7,114,507.63	6,950,678.43
வருடத்தினுள் முதலீடு	(1,278,123,973.97)	(1,099,416,606.22)	(881,605,059.41)	(937,824,430.04)
சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல்	(26,678,403.30)	(9,787,217.85)	(23,355,603.30)	(9,334,312.85)
முதலீட்டு செயற்பாடுகளினால் எழுந்த தேறிய காசுப் பாச்சல்	**(1,159,921,093.69)**	**(1,007,260,295.33)**	**(763,398,979.13)**	**(848,432,894.15)**
நிதிசார் செயற்பாடுகளினால் எழுந்த காசுப்				
மூலதன செலவின் பொருட்டு அரசின் அளிப்பு	-	20,000,000.00	-	20,000,000.00
மூலதனசெலவின் பொருட்டு அளிப்பு	65,792,099.98	-	65,792,099.98	-
புதிய ஓய்வூதிய திட்டத்திற்கான நிதியம்	6,741,309.56	-	-	-
அரசின் முறி	5,712,455.06	5,214,424.86	-	-
நிதிசார் செயற்பாடுகளினால் எழுந்த தேறிய காசுப் பாச்சல்	**78,245,864.60**	**25,214,424.86**	**65,792,099.98**	**20,000,000.00**
காசு மற்றும் காசுக்குச் சமமானவையின் தேறிய (அதிகரிப்பு)/வீழ்ச்சி	**59,005,993.12**	**10,616,316.39**	**70,802,697.14**	**(1,246,836.89)**
வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச்	**29,912,263.50**	**19,295,947.12**	**14,014,103.40**	**15,260,940.29**
வருட முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமானவை	**88,918,256.62**	**29,912,263.51**	**84,816,800.54**	**14,014,103.40**

கமத்தொழில்மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கமத்தொழில் காப்புறுதி முன்மொழிவுத் திட்டங்கள்

முக்கியமான கணக்கியல் கொள்கைகள்

1. பொதுவானகொள்கைகள்

1.1 அறிக்கையிடல் மற்றும் அமைப்பாமை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை(இங்கு இதன் பின்னர்" சபை" எனக் குறிப்பிடப்படும்) 1999 இலக்கம் 20 இலக்கச் சட்டத்தினால் கூட்டிணைப்புச் செய்யப்பட்டதுடன், இலக்கம் 117, சுபத்ராராம வீதி, கங்கோடவில, நுகேகொடையில் என்னும் இடத்தில் அமையப் பெற்றுள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் தன்மை

கமத்தொழில் மற்றும் தோட்டப் பயிர்கள் மற்றும் மூலிகைத் தாவரங்கள், கால்நடைகள், கடற்றொழில் மற்றும் வனவியல், கமத்தொழில் கருவிகள் மற்றும் கருவிகள் மற்றும் கமத்தொழில் பூங்கா விஞ்ஞான ரீதியான உற்பத்திகள் மற்றும் மூலிகைத் தாவரங்கள், கடற்றொழில் மற்றும்வனாந்தர உற்பத்திகளைக் களஞ்சியப் படுத்தல் மற்றும் பாதுகாத்தல் உள்ளடங்கலாக கமத்தொழில் காப்புறுதியில் சபை பிரதானமாக ஈடுபட்டு வருகின்றது. அத்துடன், கமத்தொழிலாளர்களின் பொருட்டு மருத்துவ நலன்புரிகளை வழங்குதல், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் பசளைக் காப்புறுதி நடவடிக்கைகளில் மற்றும் கமத்தொழிலாளர்களுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களின்பொருட்டு மூன்றாம் தரப்புக் காப்புறுதிகளை வழங்குதலிலும் சபை ஈடுபட்டு வருகின்றது. ஆய்வு செய்யப்படும் நிதியாண்டினுள் சபையின் பிரதான செயற்பாடுகளின் தன்மையில் மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை.

1.3 தயாரித்தலுக்கான அடிப்படை

(அ) இசைவுக் கூற்று

இந்த நிதிக் கூற்றில் நிதி நிலை தொடர்பான கூற்று, விரிவான வருமானக் கூற்று, நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களின் மாற்றங்கள் தொடர்பான கூற்று, காசுப் பாச்சல் கூற்று மற்றும் நிதிநிலை கூற்றுக்களுக்கான குறிப்புக்களைக் கொண்டுள்ளது. இக்கணக்குக் கூற்று இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கியல் தரநிலைகளின் (இ.நி.அ.நி. / இ.க.நி.) பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கணக்கீட்டிற்கான அடிப்படை

தொடர்புடைய குறிப்புகளின் கீழ் நியாயமானபெறுமதிகள் தொடர்பான பொருத்தமான வெளிப்பாடுகள் செய்யப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த, இந்நிதிக் கூற்று வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது

(இ) ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்

நடப்புக் கால எல்லையின் நிதிநிலை கூற்றுகள் தொடர்பாகப் புரிந்துகொள்வதை மேம்படுத்துவதற்கும்மற்றும் இடைக்கால ஒப்பீட்டுத் தன்மையை மேம்படுத்துவதற்கும், நிதிநிலைக் கூற்றுக்களில் அறிவிக்கப்பட்டுள்ள சகலதொகைகளுக்கும் கடந்த கால எல்லைக்குரிய தொடர்பான அளவு ரீதியாகவும், எடுத்துரைப்பாகவும் மற்றும் விபரமான தகவல்கள் உள்ளிட்ட ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
நிதிநிலைக் கூற்றுக்களில் உள்ள உருப்படிகளின் விளக்கக்காட்சி அல்லது வகைப்படுத்தல் திருத்தப்பட்டால், மிகச்சிறந்த விளக்கக்காட்சியை வழங்கும் பொருட்டு நடப்பாண்டுடன் ஒப்பீட்டுத் தொகைகள் ஒத்துப்போகும் வகையில் மீள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) நடைமுறை சார்ந்த மற்றும் சமர்ப்பிக்கப்படும் புழக்கத்தில் உள்ள பணஅலகு

இந்நிதிக் கூற்றுக்கள் சபையின் நடைமுறையில் உள்ள மற்றும் சமர்ப்பிக்கப்படும் புழக்கத்தில் உள்ளதுமான பணஅலகான இலங்கை ரூபாயில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(இ) மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் பயன்பாடு

இ.நி.அ.நி./இ.க.நி. தரத்தன்மைக்கு அமைவாக நிதி அறிக்கைகளைத தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல், கணக்கியல் கொள்கைகள் மற்றும்அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் ஆகியவற்றிற்கு அமைவாக நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் கணக்கியல் கொள்கைகள் மற்றும் அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளின் அளவுகளின் பயன்பாட்டை பாதிக்கும் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவதிற்கு விதித்துரைக்கப்பட்டுள்ளத. பயன்படுத்தப்பட்டுள்ள இவ் மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகள் உண்மையான பெறுபேறுகளிலிருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையான அனுமானங்கள் தொடர்ச்சியான அடிப்படையில்ஆய்வு செய்யப்படும். கணக்கியல்மதிப்பீடுகளின் மீள்திருத்தம்செய்தல்உரிய காலப்பகுதிக்கு மட்டுமே பாதிக்கப்படுவதாயின்,அவை ஏற்றுக்கொள்ளப்படுவது, அம்மதிப்பீடுகள் மீள்திருத்தப்படும் காலப்பகுதியினுள் என்பதுடன், நடப்பு மற்றும் ஏதேனும் எதிர்காலகாலப் பகுதிகளுக்கு அம்மீள்திருத்தங்கள் பாதிக்கப்படுமாயின்,மீள்திருத்தக் காலப்பகுதிகள் மற்றும் எதிர்கால காலப்பகுதிகளின் பொருட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களின் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அளவுகளின் பேரில் மிகவும் குறிப்பிடத்தக்க விளைவைக் கொண்டிருக்கும் கணக்கியல் கொள்கைகளைப் பயன்படுத்தும்போது, மதிப்பீட்டுகூற்றுக்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள அளவுகளின் பேரில் மிகவும் குறிப்பிடத்தக்க விளைவைக் கொண்டிருக்கும் கணக்கியல் கொள்கைகளைப் பயன்படுத்தும்போது,மதிப்பீட்டின் நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் தீர்மானமான தீர்ப்புக்கள் தொடர்பாக கருத்திற்கொள்ள வேண்டிய துறைகள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்களில் அடங்கியுள்ளது.

(இ) நடப்புத் தொழில் முயற்சி (இடையுறாத் தன்மை)

நடப்பு தொழில் முயற்சியாக இடையுறாத் தன்மையுடன் இருப்பதற்குச் சபைக்குள்ள ஆற்றல் தொடர்பாக முகாமைத்துவம் மதிப்பிட்டுள்ளது. எனவேநடப்புத் தொழில் முயற்சியின் அடிப்படையில். நிதிநிலை கூற்றுக்கள்இடையறாதுதயாரிக்கப்படுகின்றது.

2. சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீடுகளின் அடிப்படை

2.1சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

(அ) ஏற்றுக் கொள்ளல் மற்றும் அளவிடல்

சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் உருப்படிகள் கூறப்பட்டிருப்பது,சேர்க்கப்பட்ட தேய்மானங்கள் மற்றும் சேதங்கள்இழப்புகள்என்பன கழிக்கப்பட்டு நியாயமான பெறுமதியே காட்டப்பட்டுள்ளது.

சகல சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆரம்பத்தில் அறிக்கையிடப்பட்டிருப்பது, திரட்டப்பட்ட தேய்மானம் அல்லது பெறுமதியில் திரட்டப்பட்ட சேதங்கள் இழப்புக்கள் கழிக்கப்பட்ட பெறுமதிக்கேயாகும். ஒரு சொத்தின் குறிப்பிடத்தக்க கூறுகள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு தேய்மானம் செய்யப்படுகின்றன. சொத்துக்கள், பொறிகள்அல்லது உபகரணங்களின் குறிப்பிடத்தக்க பகுதிகளினல் குறிப்பிட்ட இடைவெளியில் மாற்ற வேண்டியிருக்கும் போது, மாற்றப்பட்ட பகுதி ஏற்றுக் கொள்ளப்பட்டுஅகற்றப்பட்டு, புதிய பகுதி அதன் தொடர்புடைய பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானத்துடன்நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஏனைய சகல திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு செலவுகளும் ஏற்பட்டுள்ள செலவாக வருமானக் கூற்றில் ஏற்றுக் கொள்ளப்படும்.

ரூபா 63,480,159.28மற்றும் மொத்த வரலாற்றுச் செலவுடன் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள்உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஆ) செலவினங்கள்

சொத்துக்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்களின் செலவுகள் அவற்றின் கொள்விலையில் மற்றும் உரிய சொத்து, அதிலிருந்து எதிர்பார்க்கப்படும் பாவனையின் பொருட்டு செயற்படும் நிலைக்குக்கொண்டுவரும் பொருட்டான ஏதேனும் நேரடியாக வசூலிக்கப்பட்டதான கட்டணச் செலவுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

சொத்துக்களின் வருவாய் கொள்திறனைத்தெடர்ச்சியாக ப்பேணுவதற்குஅல்லது மேம்படுத்துவதற்குஒரு நிலையான இயல்புடைய சொத்துக்களைக் கையகப்படுத்துதல், விரிவுபடுத்துதல் அல்லது மேம்படுத்தும் பொருட்டு எற்படும் செலவுகள் மூலதனச் செலவாகக் கருதப்படும்.

பிரதானமான பரிசோதனைகள்உட்பட வேறானகணக்குகள் வைத்துள்ள சொத்துக்கள்,பொருட்கள் அல்லது உபகரணங்களின்கூறுகளை மாற்றுவதற்கு ஏற்படும் செலவுகள் மூலதனமாக்கப்படுகின்றன.ஏனைய பொருட்களில் பொதிந்துள்ள செலவுகள் மூலதனமாக்கப்படுவது, அப்பகுதியினுள் உள்ளடங்கியுள்ள எதிர்காலப் பொருளாதாரப் பலனுறுதிகள் நிறுவனத்திற்குப் கிடைப்பதற்குச் சாத்தியம் இருந்தால்மட்டு மேபொருட்களின்செலவு நம்பகத்தன்மையுடன் அளவிடப்படக்கூடிய தாகஇருந்தால் மட்டுமேயாகும்.

(இ) மீள் கணிப்பீடு

ஒரு சொத்தாக ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர், நியாயமான பெறுமதியை நம்பகத்தன்மையுடன் அளவிடக் கூடியகாணிகள் மற்றும் கட்டடங்கள், ஏதேனும்திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் திரட்டப்பட்டஇழப்புக்களைக் கழித்து மீள் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்ட திகதிக்குமீள்கணிப்பீட்டு பெறுமதி வரையில் உள்ளது. மீள் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டசொத்தின் நியாயமான பெறுமதி, அறிக்கையிடல் திகதியில் அதன் திறன் பெறுமதியின் அளவுகளில் மாற்றங்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு மதிப்பீடுகள் செய்யப்படும்.

மோட்டார் வாகனங்களின் மீள் கணிப்பீட்டின் போது, இலாபம் அல்லது இழப்புக்கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ள அச்சொத்திலேயே ஏதேனும் முன் குறைப்புக்களை ஈடுசெய்வதாயின் தவிர, மீள்மதிப்பீட்டு மதிப்பில் ஏற்படும் ஏதேனும் அதிகரிப்புநிறை மீள்மதிப்பீட்டு இருப்புக்குவரவு வைக்கப்படும். பெறுமதியின் குறைவுகள், மீள்மதிப்பீட்டு இருப்பில் முன்னர் அடையாளம் காணப்பட்ட அதிகரிப்பை மீறும் போது,இலாபம் அல்லது இழப்பு கூற்றில் அடையாளம் காணப்படும்.நீக்கப்படும் போது, தொடர்புடைய மீள்மதிப்பீட்டு இருப்பை தக்கவைக்கப்பட்ட வருவாய்க்கு மாற்றப்படும் என்பதுடன், நீக்கப்படுவதில் பேரில் இலாபம் அல்லது நட்டத்தைத் தீர்மானிக்கும் போது கணக்குகளுக்குஎடுத்துக்கொள்ளப்படுவதில்லை.

(ஈ) தேய்மானம்

எளிய நேர்கோட்டு முறையில் பேரில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவருடாந்த விகிதங்களுக்கு அச்சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தினுள் அவ்வளவினை பதிவேடுகளிலிருந்துநீக்கும் பொருட்டு,தேய்மானம்விரிவான வருமானக் கூற்றில் செலவுச் சுமையாகக் காட்டப்படும்.

கட்டடங்கள்	4%
மோட்டார் வாகனங்கள்	20%
மரத்தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்	10%
விளம்பர உபகரணங்கள்	10%
சேதம் தடுப்பு உபகரணங்கள்	10%
அறுவடை வெட்டும் உபகரணங்கள்	10%
துவிச்சக்கர வண்டி	20%

அளவை உபகரணங்கள்	10%
நிறுத்தல் உபகரணங்கள்	10%
நலன்புரி உபகரணங்கள்	10%
தொலைபேசி	20%
கணினிகள்	20%
மோட்டார் சைக்கிள்கள்	20%

2.2 அருவச் சொத்துக்கள்

சொத்துக்களாக வைத்துக் கொள்ளக் கூடிய எதிர்காலப் பொருளாதாரப் பயனுறுதிகளை நிறுவனத்திற்குஈட்டிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுமாயின் மற்றும் இலங்கை கணக்கியல் நியமம் இ.க.நி. - 38 அருவ சொத்துக்களின் பிரகாரம் சொத்தின்செலவுநம்பகத்தன்மையுடன் அளவிடப்பட இயலுமாயின், அருவச் சொத்தொன்று ஏற்றுக் கொள்ளப்படும்.அதற்கமைய, இச்சொத்துக்கள்திரட்டப்பட்டமதிப்பிறக்க தேய்மானம் மற்றும் ஏதேனும்திரட்டப்பட்ட இழப்பு நட்டம் நிதி நிலை தொடர்பான கூற்றில் காட்டப்படும்.

கணினி மென்பொருளானது எளியநேர்கோட்டு முறையின் பேரில் 05ஆண்டுகளினுள் தேய்மானம் செய்யப்படும்.

2.3 பொருட் பதிவேட்டின் பொருட்கள்

பொருட் பதிவேட்டின் பொருட்களின் கணிப்பீட்டில் கூறப்பட்டிருப்பது, செலவு அல்லதுநிகரத் தேறிய பெறுமானத்தின் ஆகக் குறைந்த பெறுமானத்திற்கேயாகும். நிகரத் தேறிய பெறுமானம் என்பது, ஒரு தொகையொன்று பொதுவான வியாபார நடவடிக்கைகளின் போது, விற்பனை செய்யக் கூடிய மதிப்பீட்டு விலையிலிருந்து அத்தொகையை மேலும் முழுமையாக்குவதற்கு ஏற்படும் மதிப்பிடப்பட்டுள்ள விற்பனைச் செலவைக் கழித்துக் கொண்டதன் பின்னர் கிடைக்கப் பெறுமதியாகும். இச்செலவிற்கு இருப்புப் பொருட்களைக் கையகப்படுத்திக் கொள்ளல்மற்றும் அவற்றை தற்போதுள்ள நிலையத்திற்கு மற்றும் நிலைக்கு கொண்டு வருவதற்கும் ஆகும் செலவுகளும் உள்ளடங்கும்.

2.4 நிதிசார் சொத்துக்கள்

இ.க.நி. 39 இல் உள்ள விடயப் பரப்பில் நிதிசார் சொத்துக்கள் எனஇலாபம் அல்லது இழப்பு என்பனவற்றினுள் எழும் நியாயமானபெறுமதியுள்ளநிதிசார் சொத்துக்கள். கடன்கள் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை, கால முதிர்ச்சி வரையில் பிடித்து வைக்கப்பட்ட முதலீடுகள், விற்பனையின் பொருட்டுஉள்ள நிதிசார் சொத்துக்கள் அல்லது எதிர்காலகாப்புப் பத்திரங்கள் என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளநியாயமானபெறுமதியில் உள்ள வழித்தோன்றல் நிதிப் பத்திரங்கள் உபகரணங்கள்நிதிசார் சொத்துகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

நிதிசார் சொத்துக்களில் அடிப்படையின் பேரில் பணிப்பாளர் சபை அவற்றின் வகைப்படுத்தலைத் தீர்மானிப்பார்கள்.

சகல நிதிசார் சொத்துக்களும் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதிக்கு, இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் எழும் நியாயமானபெறுமதியல்லாத சந்தர்ப்பங்களில் நேரடியாக விதிக்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள் செலவுகளுக்கும்ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆரம்பத்தில் கடன்கள் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை மற்றும் வைப்புக்கள் என்பன அவை ஆரம்பிக்கப்பட்ட திகதியில் ஏற்றுக்கொள்ளப்படும். ஏனைய சகல நிதிசார் சொத்துக்கள்(இலாபம் மற்றும் நட்டம் மூலம் எழும் நியாயமான பெறுமதிக்குவிதித்திரைக்கப்பட்ட சொத்துக்கள் உட்பட) ஆரம்பத்தில் சான்றுப்பத்திரத்தின் ஒப்பந்தங்களின் ஏற்பாடுகளுக்கு சபையானதுதரப்பாளரான விற்பனைத் திகதியிலிருந்து ஏற்றுக் கொள்ளப்படும்.

ஏதேனுமொரு சொத்திலிருந்து நிதிப் பாச்சலின் பேரில்உள்ள ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள உரித்துரிமை முடிவுறும் போது அல்லது நிதிசார் சொத்தின் உரித்துரிமையின் சகல அவதானங்கள் மற்றும் கொடுப்பனவுகளும் கருத்திற் கொள்ளக் கூடியதாகக் கையளிக்கப்படும் போது, கொடுக்கல் வாங்கல் ஒன்றில் நிதிசார் சொத்துக்களின் பேரில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நிதிப்பாச்சல்

கிடைப்பதற்குள்ள உரிமையை, அதனைக் கையளிக்கும் போது, சபை நிதிசார் சொத்தை ஏற்றுக் கொள்வதை நீக்கிவிடும். கையளிக்கப்பட்ட நிதிசார் சொத்தொன்றைச் சபையினால்உருவாக்கப்பட்ட அல்லது பிடித்து வைக்கப்பட்டஏதேனும் கட்டுக்கள், வேறான சொத்தொன்றாகஅல்லது பொறுப்பொன்றாக ஏற்றுக் கொள்ளப்படும்.

நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஈடுசெய்யப்படுவதுடன், பணத்தின் அளவை ஈடுசெய்வதற்கு சபைக்கு சட்டப்பூர்வ உரிமை இருக்கும் போதுமற்றும்நிகர அடிப்படையின் பேரில் தீர்ப்பதற்கு அல்லது சொத்தை அடைந்து கொண்டு பொறுப்பை சமமாகத் தீர்ப்பதற்குக் கருதுவதாயின் மட்டும் தேறிய பணத்தின் அளவு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் சமர்ப்பிக்கப்படும்.

சபையின்நிதிசார்சொத்துகளுக்குப்பணம்மற்றும் குறுகிய கால முதலீடுகள் மற்றும் விற்பனை மற்றும் ஏனைய வரவுகள் உள்ளடங்கும்.

(அ) இலாபம் அல்லது நட்டம் ஊடாகஎழும் நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக எழும் நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்களுக்கு வியாபாரத்தின் பொருட்டு பிடித்து வைக்கப்பட்டுள்ள நிதிசார் சொத்துக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதிக்கு ஆரம்ப ஏற்றுக் கொள்ளலின் பேரில் பெயர் குறிப்பிடப்பட்ட நிதிசார் சொத்துக்கள் உள்ளடங்கும். நிதிசார் சொத்துக்கள் அண்மித்த நடப்பு விற்பனை அல்லது மீள்கொள்வனவு நடவடிக்கையின் பொருட்டு கையகப்படுத்தப்பட்டிருப்பின், அவை வியாபாரத்தின் பொருட்டு தடுத்து வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்கள், விபரமான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்திற்கு அல்லதி நிதிசார் செலவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயமான பெறுமதியின் வித்தியாசங்களுடன் நியாயமான பெறுமதிக்கு நிதிநிலைமைக் தொடர்பான கூற்றில் காட்டப்படும்.

(ஆ) கடன்கள் மற்றும் கிடைக்கப்பெறவேண்டிய பணம்

கடன்கள் மற்றும் கிடைக்கப் பெற வேண்டியவை முனைப்பான விற்பனைச் சந்தையில் விலை கணக்குகள் சமர்ப்பிக்கப்படாத நிலையான மற்றும் உறுதியான கொடுப்பனவுகளைக் கொண்டபெறுதிப் பத்திரங்கள்அல்லாத நிதிசார் சொத்துக்களாகும். ஆரம்பக் கணக்குப் பார்த்தலின் பின்னர் அவ்வாறான நிதிசார் சொத்துக்களின் இழப்புக்களைக் கழித்துக் கொண்டு, பலனளிக்கும் வட்டி வழிமுறையைப் பயன்படுத்தி, மதிப்பிறக்கம் செய்யப்பட்ட செலவிற்கமையக் கணக்கிடப்படும். மதிப்பிறக்கம் செய்யப்படும் செலவுகள் கணக்கிடப்படுவது, கையகப்படுத்திக் கொள்ளும் போது, ஏதேனும் தள்ளுபடிகள் அல்லது அதிகப்படிகள் மற்றும் பயனளிக்கும் வட்டி வீதத்தின் ஒருங்கிணைந்த பகுதியான கட்டணம் அல்லது செலவைக் கருத்திற் கொண்டாகும். பயனளிக்கும் வட்டி முறை தேக்கமாக்கல்

விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும். இழப்புக்கள் காரணமாக ஏற்படும் நட்டம் நிதிசார் செலவின் விரிவான வருமானக் கூற்றில் ஏற்றுக் கொள்ளப்படும்.

கடன்கள் மற்றும் கிடைக்கப் பெற வேண்டியவையில் உள்ளடங்குவது, வியாபார வரவுகள், ஊழியர் கடன்கள், வைப்புக்கள், முற்பணங்கள், ஏனைய கிடைக்கப் பெறவேண்டிய சகல காசு மற்றும் காசிற்குச் சமமானவைபோன்றவையாகும்.

(இ) கால முதிர்ச்சிவரையில் பிடித்து வைத்திருக்கும் முதலீடுகள்

நிலையான மற்றும் உறுதியான கொடுப்பனவுகளுடனான பெறுதிப் பத்திரங்கள்அல்லாத நிதிசார் சொத்துக்கள்மற்றும் நிலையான கால முதிர்ச்சிகள், சபைக்கு கால முதிர்ச்சி வரையில் பிடித்து வைத்துக் கொள்ளும் ஆக்கபூர்வமானஎண்ணம் மற்றும் ஆற்றல் உள்ள போது, அவற்றைக் கால முதிர்ச்சி வரையில் பிடித்து வைத்துக் கொள்வதாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்பக் கணக்குப் பார்த்தலின் பின்னர் கால முதிர்ச்சி வரையில் தடுத்து வைக்கப்பட்ட முதலீடுகளின் இழப்புக்களைக் கழித்துக் கொண்டு, பலனளிக்கும் வட்டி வழிமுறையைப் பயன்படுத்தி, மதிப்பிறக்கம் செய்யப்பட்ட செலவிற்கமையக் கணக்கிடப்படும். மதிப்பிறக்கம் செய்யப்படும் பயனளிக்கும் வட்டி முறை தேக்கமாக்கல் விரிவான வருமானக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படும். இழப்புக்கள் காரணமாக ஏற்படும் நட்டம் நிதிசார் செலவின் விரிவான வருமானக் கூற்றில் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத்தின் காப்புப் பத்திரங்கள் மற்றும் நிலையான வைப்புத்தொகைகளில் முதலீடுகள்,கால முதிர்ச்சி வரையில் பிடித்து வைத்திருக்கும் முதலீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) விற்பனையின் பொருட்டு உள்ள நிதிசார் முதலீடுகள்

விற்பனையின் பொருட்டு உள்ள நிதிச் சொத்துக்கள் என்பது, விற்பனையின் பொருட்டு உள்ளதாகப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளஅல்லது மேற்குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நிதிசார் சொத்துக்கள் பிரிவிற்குள்ளும் வகைப்படுத்தப்படாதுள்ள பெறுமதிகள் அல்லாத நிதிசார் சொத்துக்களாகும்.ஆரம்ப ஏற்றுக் கொள்ளலுக்கு பின்னர், அவை நியாயமான பெறுமதியில் கணக்கிடப்படும் என்பதுடன், இழப்பு நட்டம் தவிர அதன் வித்தியாசங்கள் ஏனைய விரிவான வருமானத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன், நிதியம் மற்றும் இருப்புகளில் ஒதுக்கப்பட்டுள்ள நியாயமான பெறுமதியில் சமர்ப்பிக்கப்படும். விற்பனையின் பொருட்டு உள்ள கடன் காப்புக்களின் பேரில் வட்டி வருமானம் பயனளிக்கப்படும் வட்டி வீதத்தைப் பயன்படுத்திக் கணக்கிடப்படும் என்பதுடன், இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். முதலீடொன்று ஏற்றுக்கொள்வதை நீக்கப்படுமிடத்து, நிதியம் மற்றும் இருப்பு ஒதுக்குகளின் திரட்டப்பட்ட இலாபம் அல்லது நட்டம்,இலாபம் அல்லது நட்டங்களில்மீள்வகைப்படுத்தப்படும்.

ஆரம்ப ஏற்றுக்கொள்ளலின்பேரில் விற்பனையின் பொருட்டு உள்ள நிதி மூதலீடொன்றாகச் சபை எந்தவொரு நிதிசார் சொத்தாகப் பெயர் குறிப்பிடவில்லை.

2.5.1 நிதிசார் சொத்துகளின் சேதம்

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியில், நிதிசார் சொத்து அல்லது நிதிசார் சொத்துகளின் குழுமமொன்றுசேதமடைந்தற்கானபுலனால் உண்மை என உணரக் கூடியசான்றுகள் உள்ளதா என்பதை சபை மதிப்பிடும் என்பதுடன், அத்தகைய சேதங்கள் ஏற்பட்டு இருப்பின், சொத்தின் கொள்திறன்பெறுமதி மற்றும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாச்சலின் பெறுமதிக்கிடையில் உள்ள வித்தியாசத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலம் இழப்பின் அளவு கணக்கிடப்படும்.

3. பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

நிதி நிலை தொடர்பான கூற்றின் பேரில் நடைமுறைப் பொறுப்புகள் என வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புகள் என்பது,கோரிக்கையின் பேரில் அல்லது அறிக்கையிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டியுள்ளவையாகும். நடைமுறையல்லாதசொத்துக்கள் என்பது அறிக்கையிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்துவதற்குள்ள நிலுவைத் தொகையாகும்.

இந்நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் போது,அறியப்பட்ட சகல பொறுப்புக்களின் பொருட்டும் காரணங்கள் காட்டப்பட்டுள்ளது. கடந்த கால நிகழ்வின் விளைவாகச் சபைக்கு சட்டப்பூர்வ அல்லது சம்பிரதாயக் கட்டுப்பாடொன்று உள்ள போது மற்றும் அக்கட்டிணைப்பைத்தீர்க்கும் பொருட்டு பொருளாதார நன்மைகள் வெளி நோக்கிச் செல்வதற்குத் தேவையான வாய்ப்புக்கள் உள்ளபோது ஒதுக்கீடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

3.1 ஓய்வூதிய நன்மைகள்

இலங்கை கணக்கியல் தரநியமம்- 19 'ஓய்வு நன்மைகளின் செலவு' க்கு இணங்க சகல நிரந்தர ஊழியர்களுக்கும் சேவையின் முதல் வருடத்தை நிறைவு செய்ததில் இருந்து ஓய்வூதியப் பணிக்கொடையின் பொருட்டு ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்கமைய, இதன் பொருட்டு ஊழியர் ஒருவரின் பொருட்டான பொறுப்பு ஏற்புடையதாகவது, ஐந்தாண்டுகள் தொடர்ச்சியான சேவைக் காலத்தை நிறைவு செய்யதால் மட்டுமேயாகும்.பொறுப்பின் பொருட்டுவெளிவாரியாக நிதியளிக்கப்படுவதில்லை

3.2 மூலதன ஒதுக்கீகள் மற்றும் சாத்தியமற்ற பொறுப்புகள்

சாத்தியமற்றபொறுப்புகள் என்பது பொருளாதார நன்மைகளின் பரிமாற்றங்கள் நிகழ வாய்ப்பில்லாதஅல்லது நம்பகத்தன்மையுடன் அளவிட முடியாத சந்தர்ப்பங்களின் போது, எதிர்பாராத எதிர்கால நிகழ்வுகள் அல்லது தற்போதைய கடப்பாடுகள் மூலம் மட்டும் இருப்பத்தை உறுதிசெய்யப்படும் சாத்தியம் பொறுப்புகளாகும்.

சபையின் மூலதன ஒதுக்கீடு மற்றும் சாத்தியமற்ற பொறுப்புகள் நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

3.3 கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிதியத்தின் பொறுப்புகள்

கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிதியத்தின்2007 இல் மேற்கொள்ளப்பட்ட ஆயுட் கணிப்பு கணக்கிடப்பட்டதன் பேரில் நிகழ்காலச் சொத்துக்களின் பெறுமதியின் அடிப்படையில் நிதிநிலைக் கூற்றில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது,

4. விரிவான வருமானக் கூற்று

4.1 வருமானம்

அ) சபையின் வருமானம்,காப்புறுத் தவணை, திறைசேரி பற்றுச்சீட்டுக்கள் மற்றும் ஊழியர் கடனின் பொருட்டான வட்டிவருமானம் மற்றும் ஏனைய பல்வேறு வருமானங்களைப் பிரதிநிதிப்படுத்துகின்றது

ஆ) தவணைப் பணச் சேகரிப்பினால் கிடைக்கப் பெற்ற சகல வருமானங்களும்காசு அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படும்.

4.2 வருமானங்களை ஏற்றுக் கொள்ளல்

அ) ஓய்வூதியத் தவணைப் பண வருமானங்கள் சேகரிக்கும் சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கௌளப்படும் .
ஆ)மேற்படி வருமானம் அட்டுறு அடிப்படையிலாகும் என்பதுடன், தொடர்புடைய செலவுகளுடன் இணக்கம் செய்யப்படும்.
இ) வட்டி வருமானம் கால அடிப்ப டையில் அட்டுறவாகும்.

4.3 அரச அளிப்புக்களின் பொருட்டான கணக்கீடு

சபை ஏற்படுத்திக் கொண்ட செலவினங்களின் பொருட்டு அதற்குச் செலுத்தப்படும் அன்பளிப்புகள், அச்செலவுகள் அடையாளம் காணப்பட்ட காலப்பகுதியினுள்வருமானமாக விரிவான வருமானக் கூற்றில் ஏற்றுக் கொள்ளப்படும்.ஒரு சொத்தின் செலவின் பொருட்டு சபையிக்குச் செலுத்தப்படும் அளிப்புக்கள, தொடர்புடைய சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் முழுவதும் முறையான அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் ஏற்றுக் கொள்ளப்படும்.

4.5 செலவினங்கள்

கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் காப்புறுதி முன்மொழிவுத் திட்டத்தின் செயற்பாடுகளை செயற்படுத்தும் போதும் மற்றும் மூலதனச் சொத்துக்களை வினைத்திறனான நிலையில் நடாத்திச் செல்லும் போதும் ஏற்படும் சகலசெலவுகளும், வருடத்தின் பொருட்டுமிகையை அல்லது பற்றாக்குறையைத் தீர்மானிக்கும் போது, அட்டுறு அடிப்படையில் வருமானத்திற்குச் செலவுச் சுமையாகக் காட்டப்பட்டுள்ளது.

401/4 என்னும் இலக்கமுடைய 15.10.2008 ஆந் திகதிய பணிப்பாளர் சபைப் பத்திரத்தின் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களின் பேரில் ஒதுக்கப்பட்டுள்ள சபையின் மறைமுகச்செலவுகளாகும்.

செலவு	விகிதங்கள்
வாடகைத் தொலைபேசி	5%
தபால் கட்டணம் , நீர் கட்டணம்	5%
மின்சாரம்	5%
அலுவலகத்தின் பிரதானமான உபகரணங்கள்	5%
கட்டடங்களின் பராமரிப்பு	5%
வாகனப் பராமரிப்பு	3%
எரிபொருள்	2%
காகிதாதிகள்	2%
சீருடைகள்	2%
பாதுகாப்பு	5%
கணினிச் செலவுகள்	5%

5. காசுப் பாச்சல் கூற்று

இலங்கை கணக்கியல் தரநியமம்07 இன் பிரகாரம் காசுப் பாச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருப்பது, "மறைமுக முறை" யைப் பயன்படுத்தியேயாகும்.

6. அறிக்கையிடப்படும் திகதிக்கு பின்னரானசம்பவங்கள்

அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் நிகழும்சம்பவங்களின் பரிமாணங்கள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன்,பொருத்தமான இடங்களில்இணக்கம் செய்யப்பட்டுள்ளது.

7. தொடர்புடைய தரப்பினரின்கொடுக்கல் வாங்கல்கள்

கமக்காரர்களின் ஓய்வூதியத் திட்டம் மற்றும் கமத்தொழில் காப்புறுதித் திட்டம்,கடற்றொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் தொடர்புடைய தரப்பினர்களாகக் கருதப்படுகின்றனர். இத்தொடர்புடைய தரப்பினருடன் மேற்கொண்ட இக்கொடுக்கல் வாங்கல்கள்நியாயமானபெறுமதியின் அடிப்படையின் பேரில் வெளிப்படுத்தப்படுகின்றன.

கடற்றொழிலாளர்ஓய்வூதியத் திட்டமானது, கமக்காரர்களின் ஓய்வூதியத் திட்டத்திற்கு ரூபா 518,000,000கடன் கொடுத்துள்ளது.

8. கடந்த ஆண்டிற்கான சீராக்கம்

கடந்த வருடத்தின் சீராக்கங்களின் விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.
செலுத்தப்படவேண்டியுள்ள சட்டக் கட்டணங்களின்பொருட்டு கடந்த வருடத்தின் சீராக்கம்ரூபா 17,000.00 ஆகும்.

9. எதிர்பாராத சந்தர்ப்பங்கள்

கிடைக்கப் பெற வேண்டிய வட்டி

1996 ஆம் ஆண்டு, திறைசேரி உண்டியல்களில் முதலீடுகளின் மீதான வட்டி இழப்புத் தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இலங்கை வங்கிக்கு எதிராக சபையினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விவரங்கள் வருமாறு.

வழக்கு இலக்கம்	தொகை (ரூபா)
MR 21843	1,454,670.84
MR 21844	1,172,602.46
MR 21845	2,784,657.55

கமத்தொழில் காப்புறுதிச் சபை, 1996 ஆம் ஆண்டு இலங்கை வங்கியின் திசைசேரி உண்டியல்களில் முதலீடு செய்ததன் மூலம் வட்டி தொடர்பாக ஏற்பட்டஇழப்புத் தொடர்பாக அவ்வங்கிக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

முறைப்பாட்டாளரின் முறைப்பாட்டிற்கமைய மாவட்ட நீதிபதியினால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், மேல்முறையீடுகளின் குறிப்பிடப்படாத மேலதிக நிவாரணங்களை வழங்குவதை நிராகரித்துள்ளார். எனவே கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் பணிப்பாளர் சபை தீர்ப்பினை ஏற்றுக்கொண்டு, மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்கள் திட்டம்
2022 திசம்பர் 31 ஆந் திகதிக்கு கணக்கின் பொருட்டு குறிப்புக்கள்

குறிப்பு 01 - நடை முறையல்லாத சொத்துக்கள்

சொத்துக்கள்	2022 ஜனவரி 01 ஆந் திகதிக்குச் செலவு	கையுதிர்த்தல்	சேர்க்கப்பட்டவை	2022 திசம்பர் 31 ஆந் திகதிக்குச் செலவு	2022 ஜனவரி 01 ஆந் திகதிக்கு திரட்டிய தேய்மானம்	கையுதிர்த்தல	வருடத்தின் பொருட்டு தேய்மானம்	மொத்தத் தேய்மானம்	புத்தகங்களின் படி தேறிய பெறுமதி
அலுவலக உபகரணங்கள்	528,648.50		-	528,648.50	433,136.96		14,792.00	447,928.96	80,719.54
நலன்புரி உபகரணங்கள்	1,325.00		-	1,325.00	1,325.00		-	1,325.00	-
மரத்தளபாடங்கள் மற்றும்	77,676.92	-	-	77,676.92	65,564.42	-	2,850.00	68,414.42	9,262.50
கணினி உபகரணங்கள்	264,945.00		-	264,945.00	264,945.00		-	264,945.00	-
	872,595.42	**-**	**-**	**872,595.42**	**764,971.38**	**-**	**17,642.00**	**782,613.38**	**89,982.04**

சொத்துக்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு, 2022 திசம்பர் 31 ஆந் திகதிக்கு மேலும் பாவனையில் உள்ள ரூபா.696,175.42 தேறிய பெறுமானத்துடன் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்கியுள்ளது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்கள் திட்டம்
2022 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவுறும் வருடத்தின் பொருட்டு
வருமானக் கூற்றின் பொருட்டு குறிப்புக்கள்

	2022.12.31	2021.12.31
குறிப்பு 02 - இருப்பு	**ரூ சு.**	**ரூ சு.**
அச்சுப் பொருட்கள்	92,219.05	93,701.62
	92,219.05	**93,701.62**
குறிப்பு 03 - கிடைக்கப் பெற வேண்டியவை		
கமக்காரர்களின் ஓய்வூதியக் கடன்	-	248,129,565.75
மரணப் பணிக்கொடை முற்பணம்	5,000.00	50,000.00
	5,000.00	**248,179,565.75**
குறிப்பு 04 - கால முதிர்வு வரையில் தடுத்து வைக்கப்பட்ட நிதிச் சாதனப் பத்திரம்		
திறைசேரி உண்டியல் - இலங்கை வங்கி	-	386,997,211.54
நிலையான வைப்பு - இலங்கை வங்கி	662,541,899.59	-
	662,541,899.59	**386,997,211.54**
குறிப்பு 05 - வங்கியில் உள்ள பணம்		
க.இ.164790 இலங்கை வங்கி யூனியன் பிளேஸ்	118,692.76	13,501.35
க.இ.164795 இலங்கை வங்கி யூனியன் பிளேஸ்	513,051.48	731,681.91
கணக்கில் சேர்க்கப்பட்டவை	68,857.00	132,652.00
	700,601.24	**877,835.26**
குறிப்பு 06 - கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திரட்டிய நிதியம்		
முன்கொண்டு வரப்பட்ட மீதி	(4,103,708,674.39)	(3,675,902,449.83)
கடந்த வரூட சீராக்கம்	17,000.00	-
	(4,103,691,674.39)	**(3,675,902,449.83)**
வருடத்தினுள் சேர்க்கப்பட்டவை		
வருடத்தின்பொருட்டு மொத்த மிகை /(பற்றாக	(406,060,646.43)	(427,806,224.56)
	(4,509,752,320.82)	**(4,103,708,674.39)**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்கள் திட்டம்
2022 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவுறும் வருடத்தின் பொருட்டு
வருமானக் கூற்றின் பொருட்டு குறிப்புக்கள்

	2022.12.31	2021.12.31
	ரூ சு.	ரூ சு.
குறிப்பு 7 - மரணப் பணிக் கொடை நிதியம்		
முன் கொண்டு வரப்பட்ட மீதி	30,965,194.70	29,500,354.70
கூட்டப்பட்டது:		
வருடத்தின் பொருட்டு பங்களிப்புப் பணம்	1,749,300.00	1,752,840.00
கழிக்கப்பட்டது:		
மரணப் பணிக்கொடைக் கொடுப்பனவு	(179,000.00)	(288,000.00)
	(179,000.00)	(288,000.00)
	1,570,300.00	**1,464,840.00**
	32,535,494.70	**30,965,194.70**
குறிப்பு 08 - செலுத்தப்பட வேண்டியவை		
செலுத்தப்படவேண்டிய - ஓய்வூதியக் கொடுப்பனவு	5,738,914.00	4,863,160.00
செலுத்தப்படவேண்டிய- கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	62,893,599.68	55,164,714.53
செலுத்தப்படவேண்டிய - மீளச்செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புப் பணம்	106,702.00	207,450.00
செலுத்தப்படவேண்டிய - மரணப் பணிக்கொடை	159,000.00	211,000.00
செலுத்தப்படவேண்டிய - இலங்கை வங்கி	-	325.00
செலுத்தப்படவேண்டிய - ஊக்குவிப்புக் கொடுப்பனவு	146,131.00	271,424.00
	11,450.00	-
	69,055,796.68	**60,954,795.29**
குறிப்பு 9 - அட்டுறுச் செலவினம்		
அச்சிடல் கட்டணம்	542,199.31	542,305.81
சட்ட நடவடிக்கைகளின் பொருட்டு கட்டணம்	-	17,000.00
கணக்காய்வுக் கட்டணத்தின் பொருட்டு ஒதுக்கீடு	264,600.00	529,200.00
	806,799.31	**1,088,505.81**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
2022 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவுறும் வருடத்தின பொருட்டு
வருமானக் கூற்றின் பொருட்டு குறிப்பு

	2022.12.31	2021.12.31
	ரூ ச.	ரூ ச.
குறிப்பு 10 - நிர்வாகச் செலவு		
சம்பளம் மற்றும் ஊதியம்	3,352,383.20	2,950,603.31
ஊ.சே.நி. பங்களிப்புப் பணம்	362,230.73	354,072.40
ஊ.பொ.நி. பங்களிப்புப் பணம்	90,557.68	88,518.10
மேலதிகம்	-	4,524.00
விசேட கொடுப்பனவு	497,736.00	557,736.00
பணிக்கொடை	476,364.72	354,351.88
எரிபொருள்	427,929.77	222,322.01
காகிதாதிகள்	249,691.41	197,464.85
அச்சிடல்	121,432.57	161,987.30
அலுவல ஆளணியினரின் சீருடை	10,208.85	7,108.35
கூலி	937,444.40	765,535.85
தொலைபேசி	333,025.96	201,657.10
தபால் கட்டணம்	351,050.86	99,473.49
நீர பற்றுச்சீட்டு	30,877.32	26,607.94
பாதுகாப்பு	121,813.04	92,790.00
மின்சாரம்	135,498.03	119,477.80
மோட்டார் வாகனப் பராமரிப்பு	552,388.49	489,631.87
கட்டட பராமரிப்பு	35,051.15	23,756.47
அலுவல உபகரணங்களின் பராமரிப்பு	56,212.22	40,157.92
கணினிச் செலவு	182,651.39	222,420.80
தேய்மானம்	17,642.00	17,642.00
க்ணக்காய்வுக் கட்டணம்	239,400.00	178,749.00
	8,581,589.79	**7,176,588.44**
குறிப்பு 11 - நிதிசார் கட்டணம்		
வங்கிக் கட்டணம்	400.00	100.00
	400.00	**100.00**

ஆடிட்டர் ஜெனரல் அறிக்கைகள்

எனது இலக்கம்: ARI/C/AAIB/01/22/09 /FA 2023 ஓகத்து 04 ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும கமநலக் காப்புறுதிச்சபை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினதும் அதன் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய,சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டங்களினதும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள், சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

.....

1. நிதிக் கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ("சபை") மற்றும் அதன் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய,சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டங்களினதும் ("குழுமம்") 2022 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான விபரமான வருமானக்கூற்று, உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்வுக் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள், பொழிப்பு தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சபையினதும் குழுமத்தினதும் நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்கமுடைய நிதிச்சட்டத்தினதும் ஏற்பாடுகளின்கீழ் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக செயற்றிட்டத்தின் 2022 திசெம்பர் 31 அந் திகதியிலான நிதிநிலைமை, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிசார் செயற்பாடு மற்றும் காசுப்பாய்வு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுகளுக்கான கருத்துரைகள்

குழுமத்தின் கீழுள்ள நிருவகிக்கப்படுகின்ற அமைப்புகளில் உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகள் பற்றி கீழே குறிப்பிட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு என்னால் முனைப்பழியுள்ள அபிப்பிராயமொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

1.2.1.1 **கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்களினதும் கமக்காரர் ஓய்வூதியம் பெறுனர்களினதும் ஓய்வூதியப் பொறுப்பு காலத்துடன் நேரொத்தவகையில் மேற்கொள்ளப்படுகின்ற ஆயுட்கணிப்பு மதிப்பீடு மூலமாக கணிக்கப்படவேண்டியிருப்பினும் 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடர்ச்சியாக ஆயுட்கணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான ஓய்வூதியப் பொறுப்பு கணிக்கப்பட்டிருந்ததோடு அவ்விதமாக கணிக்கப்பட்டிருந்த ஓய்வூதியப் பொறுப்பு ரூ. 82,435,153,268 ஆக விளங்கியது. மேலும் நிதியத்தினால் இந்த கடப்பாடுகளை தீர்த்துவைக்க போதியளவிலான முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முனைப்பான உறுப்பினர்களிடமிருந்து, கணக்காண்டுக்காக கிடைக்கவேண்டிய பங்களிப்புத் தொகையின் பெறுமதியை இனங்காணக்கூடியவகையில் ஓய்வூதிய செயற்றிட்டத்தில் சேர்ந்த திகதி மற்றும் உரித்துக்கோருகின்ற தினத்தை உள்ளிட்ட உதவுதொகை செலுத்துனர்களின் பெயர்ப்பட்டியலை தவணைப்பணக் கிடைப்பனவுகளை உள்ளிட்டதாக முழுமையாகவும் இற்றைப்படுத்தியும் பேணிவராமையால் உதவுதொகை செலுத்துனர்களிடமிருந்து கிடைத்த வருமானம் அட்டுறு அடிப்படைக்குப் பதிலாக காசு அடிப்படையில் ரூ. 13,420,221 என கணக்குப் பதியப்பட்டிருந்துது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் தபால் திணைக்களத்தின் மாவட்ட கணக்கு அலுவலகங்களிடமிருந்து மீள வரவழைத்துக் கொள்ளவேண்டிய உரித்துக்கோராத ரூ. 47,102,835 ஒய்வூதியத் தொகையின் திட்பநுட்பத்தன்மையை பரிசோதிக்கதக்கவகையில் சபையினால் பதிவேடுகள் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் கமக்காரர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்காக பொது திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூ. 3,968,000,000 பணத்தொகையில் ரூ. 3,918,881,123 செலுத்திய பின்னர் எஞ்சிய தொகையான ரூ. 49,118,877 திறைசேரிக்கு திருப்பி அனுப்பட்டிருக்கவில்லை என்பதோடு அத்தொகை மீளச்செலுத்தப்படவேண்டிய தொகையாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் கமக்காரர் ஓய்வூதிய செலுத்துதல்களில் உரித்துக்கோராத ரூ, 167,470,484 கமக்காரர்களுக்கு மீளச்செலுத்தப்படவேண்டிய பொறுப்பாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்படாமல் செயற்றிட்டத்தின் வருமானமாகக்கருதி கணக்குப் பதியப்பட்டிருந்தது.

(ஊ) 2019 சனவரி தொடக்கம் 2022 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் ரூ. 4,435, 400 உரித்துக்கோராத தேறிய தவணைப்பணம் மற்றும் மாதாந்த ஏலாமை நலன் கொடுப்பனவுக்கான 612 காசோலைகள் நி.பி. 396 (ஈ) (iii) இன் பிரகாரம் செலுத்தப்படவேண்டிய கடனாக குறிப்புப் பதியாமல் அந்தந்நத வருடங்களின் வருவாயாக கொள்ளப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் நிர்வாகச் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூ. 190,000,000 கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் கணக்கில் வரவு வைக்காமல் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி செயற்றிட்டத்தின் வங்கிக் கணக்கில் வரவுவைத்து அதிலிருந்து செலவுகளைசெய்து நடைமுறைக் கணக்கொன்று மூலமாக அந்த கொடுக்கல்வாங்கல் நிதியத்தின் பேரேட்டில் குறிப்புப் பதியப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டில் இந்த செயற்றிட்டத்துடன் தொடர்புடையதாக சட்டமுறையான கொடுக்கல்வாங்கல் இல்லாதிருக்கையில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் சட்டச்செலவினத்தின் 60 சதவீதத்திற்கு இணையானதாக ரூ. 1,348,623 இந்த செயற்றிட்டத்திற்கான சட்டச் செலவினமாக கணக்குப் பதியப்பட்டிருந்தது. இந்த சதவீதம் தீர்மானிக்கப்பட்ட விதம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம், கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை ஆகிய மூன்று கணக்குக்கூறுகளும் கூட்டாக இயங்கிவந்திருப்பினும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையின் நிர்வாகச் செலவில் நூற்றுக்கு 50 சதவீதமும் ஏனைய செலவுகளில் நூற்றுக்கு 20 தொடக்கம் 50 வீதம் வரையான உயர்மட்ட சதவீதத்தில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு உள்ளீர்க்கப்பட்டிருந்தது.

இந்த சதவீதங்களின் நியாயத்தன்மையை பரீட்சித்துப் பார்ப்பதற்கான சதவீதங்களை தீர்மானித்த அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) செயற்றிட்டத்தின் மொத்த சொத்துக்கள் ரூ. 1,516,033,327 மற்றும் மொத்த பொறுப்புகள் ரூ. 87,508,723, 633 ஆக விளங்கியதோடு சொத்துக்களை விஞ்சிய பொறுப்புகள் ரூ. 85,992,690,306 ஆக அமைந்தது. இந்த பாதகமான நிலைமை செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமை மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

1.2.1.2. கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) தளபாடங்களும் பொருத்திகளும், அலுவலக உபகரணங்களும் கணினிகளும் போன்ற ரூ. 696,175 பெறுமதியான முழுமையாக தேய்மானம் கழிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்ந்தும் பாவிக்கப்பட்டு வந்தபோதிலும் அவற்றை மீள்மதிப்பீடுசெய்து கணக்குப்பதிய கணக்கீட்டு நியமம் 08 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் இந்த செயற்றிட்டத்தின் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்களின் ஓய்வூதிய கடப்பாடுகளுக்கான ஆயுட்கணிப்பு காலத்துடன் நேரொத்ததாக மேற்கொள்ளப்பட வேண்டியபோதிலும் 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அத்தகைய ஆயுட்கணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதோடு அன்றைய திகதியில் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்கள் மற்றும் கடற்றொழில் ஓய்வூதியம் பெறுனர்களின் ஓய்வூதியப் பொறுப்பு ரூ. 5,068,050,746 ஆக அமைந்தது.

(இ) கடற்றொழிலாளர் ஓய்வூதிய செயற்றிட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி இல்லாதநிலையில் சபைத் தலைவரின் பிரத்தியேக செயலாளர், தம்புத்தேகம அலுவலகத்தின் அலுவலக உதவியாளர் மற்றும் மன்னார் மாவட்ட அலுவலகத்தின் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தரொருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அந்த மூவருக்கும் சம்பளமாக ரூ. 2,209,812 செலுத்தப்பட்டு செயற்றிட்டத்தின் செலவினமாக கணக்குப் பதியப்பட்டிருந்தது.

(ஈ) 2019 ஆம் ஆண்டில் முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூ. 98,000 ஆக அமைந்த கடற்றொழிலாளர் இறப்புப் பணிக்கொடை நிதியத்தின் சென்மதியான மீதி 2020 இல் தீர்க்கப்பட்டிருப்பினும் மேற்படி தீர்த்தல் தவறுநிறைந்ததாக கணக்குப் பதியப்பட்டமையால் மீதி மீளாய்வாண்டிலும் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(உ) செயற்றிட்டத்தின் மொத்த சொத்துக்கள் ரூ. 663,412,060 மற்றும் மொத்த பொறுப்புக்கள் ரூ. 5,140,628,886 ஆகவும் நிலவியதோடு சொத்துக்களை விஞ்சிய பொறுப்புக்கள் ரூ. 4,477,216,826 ஆக விளங்கியது. இந்த பாதகமான நிலைமை திட்டத்தின் இடையறாத வழியுரிமை மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

1.2.2 சபையின் நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள்

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயனுறுதிமிக்க ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாமையால் முழுமையாகவே தேய்மானம் கழிக்கப்பட்டிருப்பினும் தொடர்ந்தும் பாவிக்கப்பட்டு வருகின்ற ரூ. 33,415,830 கிரயத்தைக்கொண்ட ஆதனம், சாதனம், பொறித்தொகுதிகளின் பயனுறுதிமிக்க ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடுசெய்யப்பட்ட வழுவினை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தியமைத்து சரிசெய்து சரியான கொண்டுசெல்லல் பெறுமானத்தை கணக்குப்பதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்காய்வு நியமம் 20 இன் பந்தி 7 இன் பிரகாரம் அரச கொடை நியாயமான உறுதிப்படுத்தல் கிடைக்கும்வரை வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படலாகாதெனினும், திறைசேரியிடமிருந்து உறுதிப்படுத்தல் இன்றி, கமத்தொழில் திணைக்களத்தின் சமூக பொருளாதார மற்றும் திட்டமிடல் நிலையத்தினால் வருடாந்தம் மதிப்பீடுசெய்து வெப் தளத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள இலவசக் காப்புறுதியின்கீழ் உள்ளடக்கப்படுகின்ற பயர்ச்செய்கை நிலங்களின் ஏக்கரளவின் அடிப்படையில் கணிப்பீடுசெய்து, ஏக்கரொன்றுக்கு ரூ. 675 தவணை வீதம் 2018 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான தவணைப்பண வருமானம் ரூ. 4,249,619,152 திறைசேரியிடமிருந்து வருமதியான தொகையாக நிதிக்கூற்றுகளில் அட்டுறு செய்யப்பட்டிருந்தது. மேற்படி பெறுமதி திரண்ட நிதியத்தின் நூற்றுக்கு 62 சதவீதமாக அமைவதோடு மேற்படி முழுத்தொகையுமே சபைக்கு கிடைப்பது நிச்சயமற்றதென்பது அவதானிக்கப்படுகின்றது,

(இ) சபையினால் நெறிப்படுத்தப்படுகின்ற கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் நிருவாகச் செலவினங்களுக்காக பொது திறைசேரியிடமிருந்து வழங்கப்பட்ட அரச கொடையான ரூ. 1,500,000 திறைசேரியிடமிருந்து கிடைத்த தொகையாக காட்டப்படாமல் குழுமத்தின் நிதிக்கூற்றுகளில் தவறானவகையில் பிற வருமானமாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்குச் சொந்தமான மஹியங்கனை , எம்பிலிப்பிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய நகரங்களில் உள்ள 3 உத்தியோபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள 76.6 பர்ச்சஸ் பரப்பளவுகொண்ட 3 காணிகளை மதிப்பீடுசெய்து நிதிக்கூற்றுகளில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(**உ)** சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்துடன் (IFC) ஒருங்கிணைந்தவகையில் கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டங்களின் விளைவாற்றலை அதிகரிப்பதற்காகவும் அதன் மூலமாக இலங்கையில் கமத்தொழில் காப்புறுதியின் உள்ளடக்கத்தை மேம்படுத்துகின்ற குறிக்கோளுடன் 2016 மே மாதம் 05 ஆந் திகதி ஓர் ஒத்துழைப்பு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டு, பயிர்ச்சேதங்களுக்கான காப்புறுதி இழப்பீடு செலுத்துகின்ற செயற்பாங்கிணை 2 ½ மாதங்கள் வரை குறைத்துக்கொள்வதற்காக

சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட காப்புறுதி முறையியலை அறிமுகம்செய்து கட்டியெழுப்பப்பட்டுள்ள விவசாய முகாமைத்துவ தகவல் முறைமைக்கு ஐக்கிய நாடுகள் உணவு, விவசாயத் தாபனம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூ. 20,391,0898 நிதி வசதிகளை சபைக்கு வழங்கியிருந்ததோடு ஆண்டிறுதியளவில் சபையினால் அதற்காக ரூ. 23,009,698 செலவிடப்பட்டிருப்பினும் இந்த முகாமைத்துவ தகவல் முறைமை நிதிக்கூற்றுகளில் கணக்குப் பதியப்பட்டிருக்கவில்லை. இழப்பீட்டுக் கணிப்பீடு மற்றும் இழப்பீடு செலுத்துகின்ற செயற்பாங்கிற்காக தகவல் முறைமை பாவிக்கப்படாமையால் கருத்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோள்கள் ஈடேறியிருக்கவில்லை.

(ஊ) பயிர்க் காப்புறுதி செயற்றிட்டத்தின்கீழ் காப்புறுதிக் காப்பீடு பெறப்பட்டிருந்த 18 விவசாயிகளுக்கு சபையின் நிதியங்களிலிருந்து இழப்பீடு செலுத்துவதைவிடுத்து தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்தும் திறைசேரியிலிருந்தும் பணத்தை வரவழைப்பித்து, 2021 சிறுபோகத்திற்காக ரூ. 336,150 இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது.

(எ) சபையின் மாவட்ட அலுவலகங்களால் காப்புறுதி பெறுனர்களிடமிருந்து சேகரித்த ரூ. 3,284,147 ஆக அமைந்த தவணைப்பணம் மாவட்ட அலுவலகங்களிருந்து வருமதியான காப்புறுதி தவணைப்பணமென தவறானவகையில் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) தனியார் தொலைத்தொடர்பு கம்பெனியொன்றிடமிருந்து 2021 ஒற்றோபர் மாதத்தில் நன்கொடையாக கிடைத்த 10 டெப் (tab) கருவிகள் இன்வென்றரியில் பதியப்பட்டோ அல்லது நிதிசாரா சொத்துக்களாகவோ நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கடன் மற்றும் நானவித பணிகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 02 வருடங்கள் தொடக்கம் 38 வருடங்கள் வரை பழமையான ரூ. 1,107,227 ஆக அமைந்த முற்பண மீதிகளை மீளாய்வாண்டிலும் அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த மீதியை அறவிட்டுக்கொள்வது ஐயப்பாடு நிறைந்ததென்பது அவதானிக்கப்பட்டிருப்பினும் அதற்கான நிதியேற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வுத் தரங்களுக்கு (இ.க.நி) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் தொடர்ந்தும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவை எனவும் உசிதமானவை எனவும் நான் நம்புகிறேன்.

1.3 சபையின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கிய ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு கையளிக்க எதிர்பார்த்துள்ள சபையின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள போதிலும் நிதிக் கூற்றுகள் மற்றும் அது சம்பந்தமான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்பதன் மூலமாக கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக்கூற்றுகள் சம்பந்தமான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படுவதில்லை என்பதோடு நான் அது பற்றிய எந்தவிதமான உத்தரவாதத்தையோ அல்து அபிப்பிராயத்தையோ வெளிப்படுத்தப் போவதில்லை.

நிதிக்கூற்றுகள் பற்றிய எனது கணக்காய்வுடன் தொடர்புடையதாக எனது பொறுப்பாக அமைவது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெறக்கூடியதாக அமைந்தவிடத்து வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்கையில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுகளுடன் அல்லது கணக்காய்வில் வேறுவிதமாகப் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கிணங்க கணியரீதியாக பொருந்துவதில்லையா என்பதை பரிசீலித்துப் பார்ப்பதாகும்.

சபையினதும் குழுமத்தினதும் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை வாசிக்கையில் அதில் கணியரீதியான தவறாகக் காட்டப்படல் உள்ளதாக நான் ஊகிப்பேனாயின் சரிசெய்வதற்காக ஆளுந்தரப்பினருக்கு அந்த தகவல்கள் பற்றி அறிவிக்க வேண்டும். தொடர்ந்தும் சரிசெய்யாத தவறாகக் காட்டப்படல் இருக்குமாயின் அவை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமானவகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகள் இன்றி நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுவதற்கு ஏதுவாகும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் செயற்றிட்டத்தை இடையறாமல் பேணிவருவதற்கான இயலுமையை தீர்மானிக்க வேண்டியது

முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் குழுமத்தை ஒழிக்கக் கருதுமாயின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்திவிட செயலாற்றினாலேயன்றி தொடர்ந்து இயங்குகின்ற அடிப்படையில் கணக்குகளை பதிதலும் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

குழுமத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினரால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச் செய்விக்கும் வகையில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி முறைப்படி பதிவேடுகளும் அறிக்கைகளும் பேணிவரப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்ந்த மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதுமே கணியரீதியான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்கின்றதென்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடி அல்லது தவறு தனியாக அல்லது கூட்டாக தாக்கமேற்படுத்துவதால் கணியரீதியான பிறழ்கூற்றுக்கள் தோன்றக்கூடுமென்பதோடு அதன் கணியரீதியான தன்மை இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்பவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானங்கள்மீது ஏற்படுகின்ற தாக்கங்களில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்பளிப்பு மற்றும் தொழில்சார் சந்தேகங்களைக் கொண்டதாக செயலாற்றப்பட்டது. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்கையில் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வினை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உசிதமாக கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டன.

தவறுதலாக காட்டப்படுதல் காரணமாக இடம்பெறுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகளினால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியினால் ஏற்படக்கூடிய தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவது அவை மறைசூழ்ச்சியால், போலியாவணம் புனைதலால், கருத்தொன்றிய கைவிடல்களால் அல்லது உள்ளக கடப்பாடுகளை தவிர்த்தல் போன்ற எதுக்களால் இடம்பெறுவதாலாகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் விளைவாற்றல் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடும் கருத்து இல்லாவிட்டாலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்துணர்வு பெறப்பட்டது.
- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக குழுமத்தின் தொடர்ந்தியங்கும்தன்மை பற்றிய கணியரீதியான நிச்சயமற்றதன்மை நிலவுகின்றதா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும்தன்மை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதிலான ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சயமற்ற தன்மையை நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அது சம்பந்தமாக வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனஞ்செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அதனை வெளிப்படுத்துதல் போதியளவினதாக அமையாவிடின் எனது அபிப்பிராயம் மறுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் தொடர்ந்தியங்கும் தன்மை முற்றுப்பெற இயலும்.
- நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் உசிதமாக மற்றும் நியாயமானவகையில் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளிட்டதாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணம் மதிப்பீடு செய்யப்பட்டது.
- ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுகள் பற்றிய அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்காக குழுமத்திடம் இருக்கின்ற நிறுவனங்கள் அல்லது தொழில்முயற்சி செயற்பாடுகளின் நிதிசார் தகவல்கள் சம்பந்தமாக போதியளவிலான பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் பெறப்பட்டன. குழுமக் கணக்காய்வின் நெறிப்படுத்தல், மேற்பார்வை மற்றும் செயலாற்றுகை தொடர்பில் நான் பொறுப்புக்கூறவேண்டும். எனது கணக்காய்வு அபிப்பிராயம் சம்பந்தமாக நான் முழுமையான பொறுப்பினை வகிக்வேண்டும்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கண்டுபிடித்தல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் பிற விடயங்கள் பற்றி ஆளுந்தரப்பினர்களை விழிப்பணர்வூட்டுகிறேன்.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்காக அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கணக்காய்வுக்காக அவசியமான அனைத்து தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு எனது விசாரணையில் புலனாகின்றவிதத்தில் முறையான நிதியறிக்கைகள் சபையினால் பேணிவரப்பட்டிருந்தன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டம் சமர்ப்பித்த நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்ததாக அமைகின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் 1.2.2 (அ), (ஆ) (இ), (ஈ) மற்றும் (உ) ஆகிய பந்திகளில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முந்திய வருடத்தில் என்னால் செய்யப்பட்டுள்ள விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

2.2 கடைப்பிடிக்கப்பட்ட செயல்வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின்பேரிலும் கணியரீதியான மட்டுப்பாடுகளுக்குள்ளேயும் கீழே குறிப்பிடப்பட்ட கூற்றுக்களை வெளியிடும் அளவுக்கு எதுவுமே எனது கவனத்திற்கு இலக்காகவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டத்தின் ஆளும் சபையினது எவரேனும் அங்கத்தவருக்கு திட்டத்தில் இணைந்து

ஏதேனும் உன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ வேறுவிதமாகவோ பொதுவான தொழில்முயற்சி நிலைமைக்குப் புறம்பான தொடர்பு உள்ளமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்பு நீங்கலாக ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது திட்டத்தின் ஆளும் சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றி உள்ளமை.

	சட்டதிட்டங்கள் /பணிப்புரைகளுக்கான தொடர்பு	**அவதானிப்புகள்**
(அ)	கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபை முகாமைத்துவ சேவைகள் தொகுதியின் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் 4.3.1 (அ) உப பிரிவு	(i) காப்புறுதிப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் பதவிக்காக அரச பிரிவில்/ கூட்டுத்தாபனங்கள் /சபைகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் காப்புறுதி நடவடிக்கைகள் பற்றிய 03 வருடகால அனுபவம்வாய்ந்த உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்படவேண்டியிருப்பினும் அதற்கு முரணாக 03 வருடகால வெளிக்கள மற்றும் நிர்வாக நடவடிக்கைள் பற்றிய அனுபவம்வாய்ந்த உத்தியோகத்தரொருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார். (ii) திட்டமிடல் பிரிவின் உதவிப்பணிப்பாளர் பதவிக்காக அரச பிரிவில்/ கூட்டுத்தாபனங்கள் /சபைகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் திட்டமிடல் அல்லது செயலாற்றுகை நெறிப்படுத்தல் துறையில் 03 வருடகால அனுபவம்வாய்ந்த உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்படவேண்டியிருப்பினும் அதற்கு முரணாக 03 வருடகால வெளிக்கள மற்றும் நிர்வாக நடவடிக்கைள் பற்றிய அனுபவம்வாய்ந்த உத்தியோகத்தரொருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்.
(ஆ)	2015 மே மாதமம் 25 ஆந் திகதிகொண்ட PED/1/2015 இலக்கமுடைய பகிரங்கத்	சுற்றிக்கையில் ஏற்பாடுகள் இல்லாதநிலையில் MM 1-1 சேவைகள் தொகுதியைச் சேர்ந்த 19 உத்தியோகத்தர்களுக்காக பணிப்பாளர்சபை

	தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 2	அங்கீகாரத்தின்பேரில் மீளாய்வாண்டில் ரூ. 1,380,533 போக்குவரத்துப்படி செலுத்தப்பட்டிருந்தது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளமை.

தத்துவங்கள், கடமைகள், மற்றும் பணிகள்	**அவதானிப்புகள்**
(அ) 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தின் 7 (அ) உப பிரிவு	விவசாயிகளுக்கு உறுதிநிலையைப் பெற்றுக்கொடுக்கின்ற மற்றும் விவசாய உற்பத்திகளை மேம்படுத்துகின்ற குறிக்கோளுடன் நட்டம் தொடர்பில் அவர்களுக்கு சேத இழப்பீட்டினை வழங்குவதற்காக விவசாயிகளின் நன்மை கருதி சபையினால் பேணிவரப்பட்ட "கெத்தட்ட அருண" காப்புறுதித் திட்டத்துடன் ஏற்புடைய 8,185 கமக்காரர்களுக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்ட ரூ. 70,800,200 இழப்பீட்டுத்தொகை, கணக்கு இலக்கங்கள், கமக்காரர்களின் பெயர்கள் மற்றும் அடையாள அட்டை இலக்கங்கள் பொருந்தாமை காரணமாக வணிக வங்கிகளால் திருப்பி அனுப்பப்பட்டிருப்பினும் மேற்படி மீதியை தீர்த்துவைக்க 5 வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டத்தின் வளங்களை சிக்கனமாகவும் பயனுறுதிமிக்கவகையிலும் விளைவாற்றல்மிக்தாகவும் காலப்பகுதிகளுக்குள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைவாக பெறுகைசெய்து பாவிக்கவில்லையென்பது.

2.3 பிற விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) 2021 /22 பெரும்போகத்திற்காக 26,904 கமக்காரர்களுக்கு செலுத்தவேண்டிய இழப்பீட்டுத்தொகையில் ரூ. 10,777,000 திடீர் விபத்தக் காப்புறுதி தவணைப் பணத்தைக் கழித்திருந்ததோடு மேற்படி பணத்தொகையை கழித்துக்கொண்ட தினத்தில் இருந்து

ஒரு வருடகாலத்திற்கு திடீர் விபத்துக் காப்புறுதிக் காப்பீடு வழங்கப்படவேண்டியபோதிலும் 14,779 கமக்காரர்களுக்கு காப்புறுதித் தவணைப்பணம் கழிக்கப்பட்ட திகதியில் இருந்து 7 மாதங்கள் கழிந்திருப்பினும் காப்புறுதிப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எம்பிலிப்பிட்டிய மாவட்ட அலுவலக வளாகமும் உத்தியோகபூர்வ இல்லமும் 1998 இல் இருந்து சிதைவடைந்த நிலையிலும் திருத்தவேலைகள் செய்யப்படவேண்டிய நிலையிலும் நிலவுவதாக சபை அடையாளம் கண்டிருந்தபோதிலும் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது உருப்படி கணக்காய்வு பரீட்சித்தலின்போது அவதானிக்கப்பட்டது.

(இ) 2021 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக 15 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததோடு மேற்படி ஆட்சேர்ப்பிற்கான நேர்முகப் பரீட்சையில் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் 3,5,7 மற்றும் 12 ஆகிய இடங்களில் பெயர்கள் உள்ள 4 விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படாமல் அதைவிட குறைந்த புள்ளிகளைப்பெற்ற 4 விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஈ) தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு 2011, 2012 மற்றும் 2013 ஆகிய வருடங்களுக்காக சபையினால் செலுத்தப்பட்ட சம்பளத் தொகையிலிருந்து செலவுமீளளிப்பு செய்யப்பட்டிராத ரூ. 171,011 பணத்தொகை 10 வருடங்களாக நிதிக்கூற்றுகளில் முன்கொண்டு வரப்படுகின்றது.

(உ) 2018 திசெம்பர் 31 இல் நிலவிய ரூ. 426,871 ஆக அமைந்த மீளச்செலுத்தவேண்டிய டெண்டர் வைப்புகளின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியளவிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

டபிள்யு. டீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எனது இலக்கம்: ஏஆர்ஜ/சீ/12/எப்பிஎஸ்/1/ 22/எப்ஏ 2023 யூலை 04 ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

.....

1. நிதிக் கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான விபரமான வருமானக்கூற்று, உரிமைப் பங்குகளிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக்கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள், பொழிப்பு தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் 1987 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச்சட்டத்தினதும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) உறுப்புரையுடனும் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக செயற்றிட்டத்தின் 2022 திசெம்பர் 31 அந் திகதியிலான நிதிநிலைமை, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிசார் செயற்பாடு மற்றும் காசுப்பாய்வு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

கீழ்க்காணும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்கள் மற்றும் கமக்காரர் ஓய்வூதியம் பெறுனர்களின் ஓய்வூதிய கடப்பாடுகளுக்கான ஆயுட்கணிப்பு காலத்துடன் நேரொத்ததாக மேற்கொள்ளப்பட வேண்டியபோதிலும் 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடர்ச்சியாக அத்தகைய ஆயுட்கணிப்பு மதிப்பீடு செய்யப்படாமல் கணிக்கப்பட்டிருந்ததோடு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் ஓய்வூதியக் கடப்பாடு ரூ. 82,435,153,268 ஆக அமைந்தது. மேலும் இந்த கடப்பாடுகளை தீர்ப்பதற்குப் போதியளவிலான முதலீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முனைப்பான உதவுதொகை செலுத்துநர்களிடமிருந்து கணக்காண்டுக்காக வருமதியான உதவுதொகைகளின் பெறுமதியை இனங்காண இயலுமானவகையில் உதவுதொகை செலுத்துனர்கள் ஓய்வூதியத்திற்காக சேர்ந்த திகதி மற்றும் உரிமை கோருகின்ற திகதியை உள்ளடக்கிய உதவுதொகை செலுத்துனர்களின் பெயர்ப்பட்டியல் தவணைப்பணக் கிடைப்பனவுகளை உள்ளடக்கியதாக முனைப்பாகவும் இற்றைப்படுத்தியும் பேணிவரப்படாமை காரணமாக உதவுதொகைப் பணம் அட்டுறு அடிப்படையில் கணக்குப் பதியப்படாமல் காசு அடிப்படையில் ரூ. 13,420,221 ஆக கணக்குப் பதியப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் தேதியில் தபால் திணைக்களத்தின் பிராந்திய கணக்கு அலுவலகங்களிலிருந்து திருப்பி வரவழைப்பித்துக்கொள்ள வேண்டிய உரிமைகோரப்படாத ரூ. 47,102,835 ஓய்வூதியத் தொகையின் திட்பநுட்பத்தன்மையை பரீட்சித்துப் பார்க்கக்கூடிய வகையில் சபையினால் பதிவேடுகள் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் கமக்காரர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்காக பொது திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூ. 3,968,000,000 பணத்தொகையில் ரூ. 3,918,881,1123 செலுத்துதல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் எஞ்சிய பணத்தொகையான ரூ. 49,118,877 ஐ பொதுத்திறைசேரிக்கு மாற்றியனுப்பவில்லை என்பதோடு அதனை மீளச்செலுத்தவேண்டிய தொகையாக கணக்குக்கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதல்களில் உரிமைகோராத ரூ. 167,470,484 பணத்தொகை கமக்காரர்களுக்கு மீளச்செலுத்தவேண்டிய பொறுப்பாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தாமல் செயற்றிட்டத்தின் வருமானமாகக் கருதி கணக்குப் பதியப்பட்டிருந்தது.

(ஊ) 2029 சனவரி மாதத்தில் இருந்து 2022 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் ரூ. 4.435,400 ஆக அமைந்த தேறிய தவணைப்பணம் மற்றும் மாதாந்த ஏலாமைக் செலுத்துதல்களுக்கான 612 காசோலைகள் நி.பி. 396 (ஈ) (iii) இன் பிரகாரம் சென்மதியான கடன் என்றவகையில் குறிப்புப் பதியாமல் அந்தந்த வருடங்களின் வருமானத்தில் எடுக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் கமக்காரர் ஓய்வூதிய நிதியத்தின் நிருவாகச் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூ. 190,000,000 ஐ கமக்காரர் ஓய்வூதிய நிதியத்தின்

வங்கிக் கணக்கிற்கு வரவுவைக்காமல் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையின் வங்கிக்கணக்கில் வரவுவைத்து அதிலிருந்து செலவினை ஏற்று ஒரு நடைமுறைக்கணக்கு மூலமாக அந்த கொடுக்கல் வாங்கல்கள் நிதியத்தின் பேரேட்டில் குறிப்புப் பதிப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டில் இந்த செயற்றிட்டம் தொடர்பான சட்டமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் நிலவாதபோதிலும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையின் சட்டச் செலவில் 60 சதவீதத்திற்கு இணையான ரூ. 1,348,623 இந்த செயற்றிட்டத்தின் சட்டச் செலவினமாக கணக்குப் பதியப்பட்டிருந்தது. இந்த சதவீதம் தீர்மானிக்கப்பட்ட அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கமக்காரர் ஒய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டம், கடற்றொழிலாளர் ஒய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டம், கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதி சபை ஆகிய மூன்று கணக்குக்கூறுகளும் ஒன்றாக இயங்கிவந்தபோதிலும் கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதி சபையின் நிருவாகச் செலவில் நூற்றுக்கு 50 சதவீதம் மற்றும் ஏனைய செலவுகளில் நூற்றுக்கு 20 சதவீதத்தில் இருந்து 50 சதவீதம் வரையான உயர்வான சதவீதம் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு உள்ளீர்க்கப்பட்டிருந்தது. மேற்படி வீதங்களின் நியாயாயத்தன்மையை பரிசீலனை செய்வதற்காக வீதங்களை தீர்மானித்த அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) செயற்றிட்டத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ. 1,516,033,327 ஆகவும் மொத்த பொறுப்புக்கள் ரூ. 87,508,723,633 ஆகவும் அமைந்ததோடு சொத்துக்களை விஞ்சிய பொறுப்புக்கள் ரூ. 85,992,690,306 ஆக விளங்கியது. இந்த பாதகமான நிலைமை செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமை மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் தொடர்ந்தும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்பதும் உசிதமானவை என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமானவகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகள் இன்றி நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுவதற்கு ஏதுவாகும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் செயற்றிட்டத்தை இடையறாமல் பேணிவருவதற்கான இயலுமையை தீர்மானிக்க வேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் செயற்றிட்டத்தை ஒழிக்கக் கருதுமாயின்

அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்திவிட செயலாற்றினாலேயன்றி தொடர்ந்து இயங்குகின்ற அடிப்படையில் கணக்குகளை பதிதலும் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினரால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச் செய்விக்கும் வகையில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி முறைப்படி பதிவேடுகளும் அறிக்கைகளும் பேணிவரப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்ந்த மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதுமே கணியரீதியான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்கின்றதென்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடி அல்லது தவறு தனியாக அல்லது கூட்டாக தாக்கமேற்படுத்துவதால் கணியரீதியான பிறழ்கூற்றுக்கள் தோன்றக்கூடுமென்பதோடு அதன் கணியரீதியான தன்மை இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்பவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானங்கள்மீது ஏற்படுத்துகின்ற தாக்கங்களில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்பளிப்பு மற்றும் தொழில்சார் சந்தேகங்களைக் கொண்டதாக செயலாற்றப்பட்டது. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்கையில் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வு இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உசிதமாக கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டன. தவறுதலாக காட்டப்படுதல் காரணமாக இடம்பெறுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகளினால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியினால் ஏற்படக்கூடிய தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவது அவை மறைசூழ்ச்சியால், போலியாவணம் புனைதலால், கருத்தொன்றிய கைவிடல்களால் அல்லது உள்ளக கடப்பாடுகளை தவிர்த்தல் போன்ற எதுக்களால் இடம்பெறுவதாலாகும்.
- உள்ளக கட்டுப்பாட்டின் விளைவாற்றல் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடும் கருத்து இல்லாவிட்டாலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்துணர்வு பெறப்பட்டது.

- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக செயற்றிட்டத்தின் தொடர்ந்தியங்கும்தன்மை பற்றிய கணியரீதியான நிச்சயமற்றதன்மை நிலவுகின்றதா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும்தன்மை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதிலான ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சயமற்ற தன்மையை நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அது சம்பந்தமாக வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனஞ்செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அதனை வெளிப்படுத்துதல் போதியளவினதாக அமையாவிடின் எனது அபிப்பிராயம் மறுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் தொடர்ந்தியங்கும் தன்மை முற்றுப்பெற இயலும்.
- நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் உசிதமாக மற்றும் நியாயமானவகையில் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளிட்டதாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணம் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கண்டுபிடித்தல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் பிற விடயங்கள் பற்றி ஆளுந்தரப்பினர்களை விழிப்புணர்வூட்டுகிறேன்.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டம் சமர்ப்பித்த நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்ததாக அமைகின்றன.
- 2018 இன் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க இந்த அறிக்கையில் 1.2.(அ). (ஆ), (இ), (உ), (ஊ), (எ) மற்றும் (ஒ) வரை காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முந்திய வருடத்தில் என்னால் செய்யப்பட்டுள்ள விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் அமைந்தொழுகாமை

பின்வரும் அமைந்தொழுகாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

	சட்டதிட்டங்கள் /பணிப்புரைகளுக்கான தொடர்பு	**அவதானிப்புகள்**
3.1.1	1987 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம்	
	(அ) உப பிரிவு 6 (i)	உதவுதொகை செலுத்துனர் தனது வயது 60 வருடங்களாகியவிடத்து ஓய்வூதியத்திற்கான உரிமையினைப் பெறவேண்டியிருப்பினும் இந்த செயற்றிட்டத்தின் (i) ஓய்வூதிய விண்ணப்பப் பத்திரமொன்றை பெற்றுக்கொள்ளவும் விண்ணப்பிக்க குறித்துரைத்த தினங்கள் பற்றியும் அவர்களுக்கு விழிப்புணர்வூட்டவும் விணப்பங்களை வரவழைத்துக் கொள்வதற்குமான முறையியலொன்று இருக்கவில்லை. (ii) குறித்துரைத்த வயதினை நிறைவுசெய்கின்ற கமக்காரர்களை இனங்காண்பதற்கான முறையியலொன்று இல்லாமை காரணமாக, நலன்பெறுனராலேயே ஓய்வூதிய நன்மைக்கான விண்ணப்பப் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டுமென்பதாலும் நன்மைபெறுனர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அல்லது வீட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறுதல், தவணைப்பணக் குறிப்புப் பத்தகம் தொலைந்துபோதல், தவணைப்பணக் குறிப்புப் புத்தகமின்றி சபைக்கு விண்ணப்பிக்க முடியாமை போன்ற காரணங்களால் விண்ணப்பப்பத்திரத்தை உரிய தினத்தில் சமர்ப்பியாமையின் தாமதம் காரணமாக ஏற்பட்ட நட்டங்களை அவரே தாங்கிக்கொள்ளவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. (iii) மீளாய்வாண்டில் 4 மாவட்டங்களின் 12 கமக்காரர்கள் சம்பந்தமாக மேற்கொண்ட மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது தவணைப் பணத்தை மீளச்செலுத்துகையில் 2 வருடங்கள் தொடக்கம் 10 வருடங்கள் வரையான காலதாமதம் நிலவுகின்றமை மற்றும் உரிய வயதினைப் பூர்த்திசெய்த நாளில் இருந்து 10 மாதங்கள் தொடக்கம் 9 வருடங்கள் வரையில் ஓய்வூதியம்

		செலுத்துதல் தாமதம்செய்யப்பட்ட தருணங்கள் அவதானிக்கப்பட்டன. (iv) நிலவுகின்ற தரவு முறைமைக்குள் 871,425 உதவுதொகை செலுத்துனர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் வயது 60 வருடங்களைப் பூரத்திசெய்திருந்த 439,025 உதவுதொகை செலுத்துனர்களில் 246,531 பேருக்கு ஓய்வூதிய நன்மை செலுத்தப்பட்டிருக்கவில்லை. (v) ஓய்வூதிய நன்மை உரித்தாகிய தினத்தில் இருந்து ஓய்வவூதியம் தயாரிக்கப்பட்ட திகதிவரையான காலப்பகுதியுடன் தொடர்புடைய பணத்தொகையை கமக்காரர்களுக்கு செலுத்த நடவடிக்கை எடுக்காமையால் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை நிலுவையான கமக்காரர் ஓய்வூதியம் ரூ. 3,914,947,932 நிதிக்கூற்றுகளில் தீர்க்கப்படாமல் தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.
	(ஆ) உப பிரிவு 12(இ)	செயற்றிட்டம் சம்பந்தமாக அவசியமான நிதிசார் மற்றும் நெறிப்படுத்தல் அறிக்கைகள் பேணிவரப்பட வேண்டியிருப்பினும், இற்றைப்படுத்தி பேணிவரப்பட்டிருக்கவில்லை.
	(இ) உப பிரிவு 12 (ஈ)	செயற்றிட்டம் தொடர்பான மதிப்பாய்வுகள், கணிப்பீடுகள் மற்றும் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தொழிற்பாட்டு விதிகளில் மாற்றங்களை எற்படுத்துதல் இடம்பெறவேண்டியிருப்பினும், (i) அங்கீகரித்துக்கொள்ளப்பட்ட விதிமுறையொன்று இல்லாமல் அரையாண்டுவாரியாக நூற்றுக்கு 3.32 சதவீதத்தின் பேரில் தேறிய உதவுதொகை மீதான வட்டி கணிக்கப்பட்டிருந்தது. (ii) அங்கீகரித்துக்கொள்ளப்பட்ட விதிமுறையொன்று இல்லாமல் அவரால் செலுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு தவணையிலிருந்தும் ரூ. 15 விதப்படியான நிருவாகச் செலவும் கமக்காரன் முறைப்படி செலுத்திய ஒரு தவணைக்கு ரூ. 30 வீதப்படியான காப்புறுதிக்கட்டணமும் கணிக்கப்பட்டு தேறிய தவணைப்பணத்திலிருந்து ரூ. 150 காப்புறுதிக் கட்டணமும் கழிக்கப்பட்டிருந்தது.
	(ஈ) பிரிவு 15	15 (2) தொடக்கம் 15 (5) வரையான உப பிரிவுகளுக்கிணங்க தொடர்ச்சியாக 5 தவணைகளை செலுத்தத் தவறியமை தொடர்பாக உதவுதொகை செலுத்துனர்களை விழிப்பூட்டாமை போன்ற நிபந்தனைகளை சபை மீறியமையால்

		கமக்காரர்கள் நன்மைகளை இழந்த தருணங்கள் அவதானிக்கப்பட்டன.
	(உ) பிரிவு 27 (1)	விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரதும் நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரதும் உடன்பாட்டின்பேரில் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தினால் பெறப்படுகின்ற கடன் அளவு தீர்மானிக்கப்பட வேண்டியிருப்பினும் அவ்வாறான இணக்கம் பெறப்படாமல் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடமிருந்து கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் கடன்பெற்றிருந்ததோடு 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் மேற்படி கடன்தொகைகளின் மீதி ரூ. 484,160,453 ஆக நிலவியமை அவதானிக்கப்பட்டது.
3.1.2	கமக்காரர் ஓய்வூதிய ஒப்பந்தச் சான்றிதழின் பிரிவு 6	ஒப்பந்தச் சான்றிதழின் பிரிவு 6 இன்படி செலுத்தியுள்ள அரையாண்டு தவணைப் பணத்தொகையின் குறைந்தபட்சம் நூற்றுக்கு 75 இருப்பின் உதவுதொகை செலுத்துவதற்கான காலப்பகுதி நிறைவடைந்தபின்னர் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான குறித்துரைத்த ஓய்வூதியத்தைப் பார்க்கிலும் குறைவான ஓய்வூதியத்தைப்பெற உதவுதொகை செலுத்துனருக்கு உரிமை இருக்கின்றபோதிலும் அதனைக் கவனத்திற்கொள்ளாமல் உதவுதொகை செலுத்துனர்களின் ஓய்வூதிய நன்மைகள் இல்லாதொழிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

3.2 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

6 மாதங்கள் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளாத ஓய்வூதிய உரித்தாளிகளின் பெயர்கள் உறுதிப்படுத்திக்கொள்ளாமல் ஓய்வூதியப் பிரிவின் உத்தியோகத்தர்களால் ஓய்வூதியம் செலுத்துனர்களின் பெயர்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந்தன.

3.3 முகாமைத்துவ செயற்பாடுகள்.

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) கமக்காரர் ஓய்வூதியம் பெறுனர்களுக்கான ஓய்வூதியம் செலுத்துவதற்காகவும் நிருவாகச் செலவினங்களுக்காகவும் பொதுதிறைசேரியிலிருந்து நிதி வழங்கப்பட்டு வருவதோடு அவ்வாறிருக்கையில் கமக்காரர்களுக்கு ஏலாமை மற்றும் இறப்புப் பணிக்கொடை செலுத்துவதற்காக கமத்தொழில் மற்றும் கமநல செயற்றிட்டத்தில் வருடாந்தம் தவணைப் பணமொன்றை வைப்புச்செய்து கமக்காரர்களை காப்புறுதிசெய்து காப்புறுதி நிதியமொன்று கட்டியெழுப்பப்பட்டிருந்தது. மீளாய்வாண்டுக்காக ரூ. 17,197,260 தவணைப் பணத்தை வரவுவைத்து ரூ. 1,173,625

இறப்புப் பணிக்கொடையைச் செலுத்தியிருந்ததோடு ஆண்டிறுதியில் அந்த நிதியத்தின் மீதி ரூ. 1,258,775,352 ஆக விளங்கியது. ஒவ்வோராண்டிலும் செலுத்தப்பட்ட நன்மைகள் இந்த நிதியத்திற்கு வரவுவக்கப்படுகின்ற தவணைகளிலிருந்து நூற்றுக்கு 5 தொடக்கம் 10 வீதமாக அமைகின்ற குறைந்த அளவாக அமைவதால் இந்த காப்புறுதியைப் பேணிவருகையில் விளைவாற்றல் நிலவாமை அவதானிக்கப்படுகின்றது.

(ஆ) செயற்றிட்டத்தின்கீழ் உறுப்பாண்மையைப் பெற்றுக்கொண்டுள்ள கமக்கார உதவுதொகை செலுத்துனர்களின் உயிரத்தரவுகளைப் பெற்றுக்கொண்டு, தகவல் முறைமையை இற்றைப்படுத்துவதற்காக கமநல சேவைகள் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் 2017 ஓகத்து 11 ஆந் திகதியளவில் ரூ. 5,640,925 செலவிட்டு பெறப்பட்ட தகவல்கள் எதிர்பார்த்த தகவல்களில் நூற்றுக்கு 20 சதவீதத்தைவிடக் குறைவானதாக அமைந்தமையால் மேற்படி தகவல்களை அடிப்படையாகக்கொண்டு முறைமையை இற்றைப்படுத்தி இருக்கவில்லை என்பதால் எதிர்பார்த்த நோக்கங்கள் ஈடேறவில்லை.

(இ) உதவுதொகை செலுத்துனரால் செலுத்தப்பட்ட தவணைகளை நிலவுகின்ற தகவல் முறைமையில் உள்ளடக்கி இற்றைப்படுத்தி பேணிவரவில்லை என்பதாலும் பற்றுச்சீட்டுகளை பரிசீலனை செய்யக்கூடியவகையில் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைக்காமல் ஒருபுறம் ஒதுக்கிவைத்திருந்தமையாலும் கீழ்க்காணும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i). "முறைப்படி செலுத்திய தவணைகளை" கணிப்பிட இயலாமல் போனமை.

(ii). தவணைப்பணத் தொகைகள் அனைத்தும் செலுத்தப்பட்டுள்ளனவா என்பதை உறுதிசெய்துகொள்ள இயலாமல் போனமை.

(iii). ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்துள்ள உதவுதொகை செலுத்துனர்களிடம் உள்ள தவணைப் பணக் குறிப்புப் புத்தகத்தில் தவணைப்பணம் செலுத்திய தினத்தை அல்லது மூலப் பற்றுச்சீட்டுப் பிரதியை பெற்றுக்கொண்டு உதவுதொகை செலுத்துனர்களின் கிடைப்பனவுகள் பற்றிய தகவல்களை உறுதிசெய்துகொள்ளவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

(iv). தொடர்ச்சியாக 5 தவணைகளை செலுத்தத் தவறியமை பற்றி உதவுதொகை செலுத்துனர்களை விழிப்புணர்வூட்ட இயலாமை.

(v). நிதிக் கூற்றுகளில் காட்டப்படுகின்ற உறுப்பாண்மை வருமானத்தின் பரிபூரணத்தன்மையையும் திட்பநுடபத்தன்மையையும் கணக்குப் பதிகையிலும் கணக்காய்வின்போதும் உறுதிசெய்துகொள்ள முடியாமல் போயுள்ளமை.

(vi). தவணைப்பண வருமானத்தை அட்டுறு அடிப்படையில் கணக்குப்பதிய இயலாதுள்ளமை.

(vii). மாதாந்த மற்றும் அரையாண்டு தவணைகளை செலுத்துகின்ற கமக்காரர்களால் வயது 60 வருடங்களை நிறைவுசெய்த பின்னர் ஓய்வூதியத்திற்காக விண்ணப்பிக்கும்வரை ஓய்வூதியத்தை கணிப்பதற்கான தகவல்கள் சபையிடம் இல்லாமை.

(viii). கிராமிய வங்கிகள் மற்றும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற முகவராண்மைகளிலும் மாவட்ட அலுவலகங்களிலும் அறவிடப்படுகின்ற தவணைக்

கட்டணங்களை அனுப்பிவைக்க தாமதிக்கின்ற சந்தர்ப்பங்களில் அதனை இனங்காண இயலாமை.

(ஈ) புதிய கமக்காரர் ஓய்வூதிய நலன்புதித் திட்டமொன்றை தொடங்கி 1 1/2 கழிந்து 485 உதவுதொகை செலுத்துனர்கள் செயற்றிட்டத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளபோதிலும் முறைப்படி தவணைப் பணத்தைச் செலுத்தியிராத உதவுதொகை செலுத்துனர்களை இனங்கண்டு விழிப்புணர்வூட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டபிள்யு. டீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எனது இலக்கம்: ஏஆர்ஐ/சீ/12/எப்பிஎஸ்/1/ 22/எப்ஏ 2023 யூலை 04 ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

.....

2. நிதிக் கூற்றுகள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான விபரமான வருமானக்கூற்று, உரிமைப் பங்குகளிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக்கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள், பொழிப்பு தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் 1987 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச்சட்டத்தினதும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) உறுப்புரையுடனும் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக செயற்றிட்டத்தின் 2022 திசெம்பர் 31 அந் திகதியிலான நிதிநிலைமை, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிசார் செயற்பாடு மற்றும் காசுப்பாய்வு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

கீழ்க்காணும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்கள் மற்றும் கமக்காரர் ஓய்வூதியம் பெறுனர்களின் ஓய்வூதிய கடப்பாடுகளுக்கான ஆயுட்கணிப்பு காலத்துடன் நேரொத்ததாக மேற்கொள்ளப்பட வேண்டியபோதிலும் 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடர்ச்சியாக அத்தகைய ஆயுட்கணிப்பு மதிப்பீடு செய்யப்படாமல் கணிக்கப்பட்டிருந்ததோடு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் ஓய்வூதியக் கடப்பாடு ரூ. 82,435,153,268 ஆக அமைந்தது. மேலும் இந்த கடப்பாடுகளை தீர்ப்பதற்குப் போதியளவிலான முதலீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முனைப்பான உதவுதொகை செலுத்துநர்களிடமிருந்து கணக்காண்டுக்காக வருமதியான உதவுதொகைகளின் பெறுமதியை இனங்காண இயலுமானவகையில் உதவுதொகை செலுத்துனர்கள் ஓய்வூதியத்திற்காக சேர்ந்த திகதி மற்றும் உரிமை கோருகின்ற திகதியை உள்ளடக்கிய உதவுதொகை செலுத்துனர்களின் பெயர்ப்பட்டியல் தவணைப்பணக் கிடைப்பனவுகளை உள்ளடக்கியதாக முனைப்பாகவும் இற்றைப்படுத்தியும் பேணிவரப்படாமை காரணமாக உதவுதொகைப் பணம் அட்டுறு அடிப்படையில் கணக்குப் பதியப்படாமல் காசு அடிப்படையில் ரூ. 13,420,221 ஆக கணக்குப் பதியப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் தேதியில் தபால் திணைக்களத்தின் பிராந்திய கணக்கு அலுவலகங்களிலிருந்து திருப்பி வரவழைப்பித்துக்கொள்ள வேண்டிய உரிமைகோரப்படாத ரூ. 47,102,835 ஓய்வூதியத் தொகையின் திட்பநுட்பத்தன்மையை பரீட்சித்துப் பார்க்கக்கூடிய வகையில் சபையினால் பதிவேடுகள் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் கமக்காரர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்காக பொது திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூ. 3,968,000,000 பணத்தொகையில் ரூ. 3,918,881,1123 செலுத்துதல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் எஞ்சிய பணத்தொகையான ரூ. 49,118,877 ஐ பொதுத்திறைசேரிக்கு மாற்றியனுப்பவில்லை என்பதோடு அதனை மீளச்செலுத்தவேண்டிய தொகையாக கணக்குக்கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதல்களில் உரிமைகோராத ரூ. 167,470,484 பணத்தொகை கமக்காரர்களுக்கு மீளச்செலுத்தவேண்டிய பொறுப்பாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தாமல் செயற்றிட்டத்தின் வருமானமாகக் கருதி கணக்குப் பதியப்பட்டிருந்தது.

(ஊ) 2029 சனவரி மாதத்தில் இருந்து 2022 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் ரூ. 4.435,400 ஆக அமைந்த தேறிய தவணைப்பணம் மற்றும் மாதாந்த ஏலாமைக் செலுத்துதல்களுக்கான 612 காசோலைகள் நி.பி. 396 (ஈ) (iii) இன் பிரகாரம் சென்மதியான கடன் என்றவகையில் குறிப்புப் பதியாமல் அந்தந்த வருடங்களின் வருமானத்தில் எடுக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் கமக்காரர் ஓய்வூதிய நிதியத்தின் நிருவாகச் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூ. 190,000,000 ஐ கமக்காரர் ஓய்வூதிய நிதியத்தின்

வங்கிக் கணக்கிற்கு வரவுவைக்காமல் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையின் வங்கிக்கணக்கில் வரவுவைத்து அதிலிருந்து செலவினை ஏற்று ஒரு நடைமுறைக்கணக்கு மூலமாக அந்த கொடுக்கல் வாங்கல்கள் நிதியத்தின் பேரேட்டில் குறிப்புப் பதிப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டில் இந்த செயற்றிட்டம் தொடர்பான சட்டமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் நிலவாதபோதிலும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையின் சட்டச் செலவில் 60 சதவீதத்திற்கு இணையான ரூ. 1,348,623 இந்த செயற்றிட்டத்தின் சட்டச் செலவினமாக கணக்குப் பதியப்பட்டிருந்தது. இந்த சதவீதம் தீர்மானிக்கப்பட்ட அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கமக்காரர் ஒய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டம், கடற்றொழிலாளர் ஒய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டம், கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதி சபை ஆகிய மூன்று கணக்குக்கூறுகளும் ஒன்றாக இயங்கிவந்தபோதிலும் கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதி சபையின் நிருவாகச் செலவில் நூற்றுக்கு 50 சதவீதம் மற்றும் ஏனைய செலவுகளில் நூற்றுக்கு 20 சதவீதத்தில் இருந்து 50 சதவீதம் வரையான உயர்வான சதவீதம் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு உள்ளீர்க்கப்பட்டிருந்தது. மேற்படி வீதங்களின் நியாயாயத்தன்மையை பரிசீலனை செய்வதற்காக வீதங்களை தீர்மானித்த அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) செயற்றிட்டத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ. 1,516,033,327 ஆகவும் மொத்த பொறுப்புக்கள் ரூ. 87,508,723,633 ஆகவும் அமைந்ததோடு சொத்துக்களை விஞ்சிய பொறுப்புக்கள் ரூ. 85,992,690,306 ஆக விளங்கியது. இந்த பாதகமான நிலைமை செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமை மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் தொடர்ந்தும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்பதும் உசிதமானவை என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமானவகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகள் இன்றி நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுவதற்கு ஏதுவாகும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் செயற்றிட்டத்தை இடையறாமல் பேணிவருவதற்கான இயலுமையை தீர்மானிக்க வேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் செயற்றிட்டத்தை ஒழிக்கக் கருதுமாயின்

அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்திவிட செயலாற்றினாலேயன்றி தொடர்ந்து இயங்குகின்ற அடிப்படையில் கணக்குகளை பதிதலும் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினரால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச் செய்விக்கும் வகையில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி முறைப்படி பதிவேடுகளும் அறிக்கைகளும் பேணிவரப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்ந்த மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதுமே கணியரீதியான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்கின்றதென்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடி அல்லது தவறு தனியாக அல்லது கூட்டாக தாக்கமேற்படுத்துவதால் கணியரீதியான பிறழ்கூற்றுக்கள் தோன்றக்கூடுமென்பதோடு அதன் கணியரீதியான தன்மை இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்பவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானங்கள்மீது ஏற்படுத்துகின்ற தாக்கங்களில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்பளிப்பு மற்றும் தொழில்சார் சந்தேகங்களைக் கொண்டதாக செயலாற்றப்பட்டது. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்கையில் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வு இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உசிதமாக கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டன. தவறுதலாக காட்டப்படுதல் காரணமாக இடம்பெறுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகளினால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியினால் ஏற்படக்கூடிய தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவது அவை மறைசூழ்ச்சியால், போலியாவணம் புனைதலால், கருத்தொன்றிய கைவிடல்களால் அல்லது உள்ளக கடப்பாடுகளை தவிர்த்தல் போன்ற எதுக்களால் இடம்பெறுவதாலாகும்.
- உள்ளக கட்டுப்பாட்டின் விளைவாற்றல் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடும் கருத்து இல்லாவிட்டாலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்துணர்வு பெறப்பட்டது.

- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக செயற்றிட்டத்தின் தொடர்ந்தியங்கும்தன்மை பற்றிய கணியரீதியான நிச்சயமற்றதன்மை நிலவுகின்றதா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும்தன்மை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதிலான ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சயமற்ற தன்மையை நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அது சம்பந்தமாக வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனஞ்செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அதனை வெளிப்படுத்துதல் போதியளவினதாக அமையாவிடின் எனது அபிப்பிராயம் மறுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் தொடர்ந்தியங்கும் தன்மை முற்றுப்பெற இயலும்.
- நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் உசிதமாக மற்றும் நியாயமானவகையில் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளிட்டதாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணம் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கண்டுபிடித்தல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் பிற விடயங்கள் பற்றி ஆளுந்தரப்பினர்களை விழிப்புணர்வூட்டுகிறேன்.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டம் சமர்ப்பித்த நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்ததாக அமைகின்றன.
- 2018 இன் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க இந்த அறிக்கையில் 1.2.(அ). (ஆ), (இ), (உ), (ஊ), (எ) மற்றும் (ஒ) வரை காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முந்திய வருடத்தில் என்னால் செய்யப்பட்டுள்ள விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் அமைந்தொழுகாமை

பின்வரும் அமைந்தொழுகாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

	சட்டதிட்டங்கள் /பணிப்புரைகளுக்கான தொடர்பு	**அவதானிப்புகள்**
3.1.1	1987 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம்	
	(அ) உப பிரிவு 6 (i)	உதவுதொகை செலுத்துனர் தனது வயது 60 வருடங்களாகியவிடத்து ஓய்வூதியத்திற்கான உரிமையினைப் பெறவேண்டியிருப்பினும் இந்த செயற்றிட்டத்தின் (i) ஓய்வூதிய விண்ணப்பப் பத்திரமொன்றை பெற்றுக்கொள்ளவும் விண்ணப்பிக்க குறித்துரைத்த தினங்கள் பற்றியும் அவர்களுக்கு விழிப்புணர்வூட்டவும் விணப்பங்களை வரவழைத்துக் கொள்வதற்குமான முறையியலொன்று இருக்கவில்லை. (ii) குறித்துரைத்த வயதினை நிறைவுசெய்கின்ற கமக்காரர்களை இனங்காண்பதற்கான முறையியலொன்று இல்லாமை காரணமாக, நலன்பெறுனராலேயே ஓய்வூதிய நன்மைக்கான விண்ணப்பப் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டுமென்பதாலும் நன்மைபெறுனர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அல்லது வீட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறுதல், தவணைப்பணக் குறிப்புப் பத்தகம் தொலைந்துபோதல், தவணைப்பணக் குறிப்புப் புத்தகமின்றி சபைக்கு விண்ணப்பிக்க முடியாமை போன்ற காரணங்களால் விண்ணப்பப்பத்திரத்தை உரிய தினத்தில் சமர்ப்பியாமையின் தாமதம் காரணமாக ஏற்பட்ட நட்டங்களை அவரே தாங்கிக்கொள்ளவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. (iii) மீளாய்வாண்டில் 4 மாவட்டங்களின் 12 கமக்காரர்கள் சம்பந்தமாக மேற்கொண்ட மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது தவணைப் பணத்தை மீளச்செலுத்துகையில் 2 வருடங்கள் தொடக்கம் 10 வருடங்கள் வரையான காலதாமதம் நிலவுகின்றமை மற்றும் உரிய வயதினைப் பூர்த்திசெய்த நாளில் இருந்து 10 மாதங்கள் தொடக்கம் 9 வருடங்கள் வரையில் ஓய்வூதியம்

		செலுத்துதல் தாமதம்செய்யப்பட்ட தருணங்கள் அவதானிக்கப்பட்டன. (iv) நிலவுகின்ற தரவு முறைமைக்குள் 871,425 உதவுதொகை செலுத்துனர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் வயது 60 வருடங்களைப் பூரத்திசெய்திருந்த 439,025 உதவுதொகை செலுத்துனர்களில் 246,531 பேருக்கு ஓய்வூதிய நன்மை செலுத்தப்பட்டிருக்கவில்லை. (v) ஓய்வூதிய நன்மை உரித்தாகிய தினத்தில் இருந்து ஓய்வவூதியம் தயாரிக்கப்பட்ட திகதிவரையான காலப்பகுதியுடன் தொடர்புடைய பணத்தொகையை கமக்காரர்களுக்கு செலுத்த நடவடிக்கை எடுக்காமையால் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை நிலுவையான கமக்காரர் ஓய்வூதியம் ரூ. 3,914,947,932 நிதிக்கூற்றுகளில் தீர்க்கப்படாமல் தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.
	(ஆ) உப பிரிவு 12(இ)	செயற்றிட்டம் சம்பந்தமாக அவசியமான நிதிசார் மற்றும் நெறிப்படுத்தல் அறிக்கைகள் பேணிவரப்பட வேண்டியிருப்பினும், இற்றைப்படுத்தி பேணிவரப்பட்டிருக்கவில்லை.
	(இ) உப பிரிவு 12 (ஈ)	செயற்றிட்டம் தொடர்பான மதிப்பாய்வுகள், கணிப்பீடுகள் மற்றும் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தொழிற்பாட்டு விதிகளில் மாற்றங்களை எற்படுத்துதல் இடம்பெறவேண்டியிருப்பினும், (i) அங்கீகரித்துக்கொள்ளப்பட்ட விதிமுறையொன்று இல்லாமல் அரையாண்டுவாரியாக நூற்றுக்கு 3.32 சதவீதத்தின் பேரில் தேறிய உதவுதொகை மீதான வட்டி கணிக்கப்பட்டிருந்தது. (ii) அங்கீகரித்துக்கொள்ளப்பட்ட விதிமுறையொன்று இல்லாமல் அவரால் செலுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு தவணையிலிருந்தும் ரூ. 15 விதப்படியான நிருவாகச் செலவும் கமக்காரன் முறைப்படி செலுத்திய ஒரு தவணைக்கு ரூ. 30 வீதப்படியான காப்புறுதிக்கட்டணமும் கணிக்கப்பட்டு தேறிய தவணைப்பணத்திலிருந்து ரூ. 150 காப்புறுதிக் கட்டணமும் கழிக்கப்பட்டிருந்தது.
	(ஈ) பிரிவு 15	15 (2) தொடக்கம் 15 (5) வரையான உப பிரிவுகளுக்கிணங்க தொடர்ச்சியாக 5 தவணைகளை செலுத்தத் தவறியமை தொடர்பாக உதவுதொகை செலுத்துனர்களை விழிப்பூட்டாமை போன்ற நிபந்தனைகளை சபை மீறியமையால்

		கமக்காரர்கள் நன்மைகளை இழந்த தருணங்கள் அவதானிக்கப்பட்டன.
	(உ) பிரிவு 27 (1)	விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரதும் நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரதும் உடன்பாட்டின்பேரில் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தினால் பெறப்படுகின்ற கடன் அளவு தீர்மானிக்கப்பட வேண்டியிருப்பினும் அவ்வாறான இணக்கம் பெறப்படாமல் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடமிருந்து கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் கடன்பெற்றிருந்ததோடு 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் மேற்படி கடன்தொகைகளின் மீதி ரூ. 484,160,453 ஆக நிலவியமை அவதானிக்கப்பட்டது.
3.1.2	கமக்காரர் ஓய்வூதிய ஒப்பந்தச் சான்றிதழின் பிரிவு 6	ஒப்பந்தச் சான்றிதழின் பிரிவு 6 இன்படி செலுத்தியுள்ள அரையாண்டு தவணைப் பணத்தொகையின் குறைந்தபட்சம் நூற்றுக்கு 75 இருப்பின் உதவுதொகை செலுத்துவதற்கான காலப்பகுதி நிறைவடைந்தபின்னர் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான குறித்துரைத்த ஓய்வூதியத்தைப் பார்க்கிலும் குறைவான ஓய்வூதியத்தைப்பெற உதவுதொகை செலுத்துனருக்கு உரிமை இருக்கின்றபோதிலும் அதனைக் கவனத்திற்கொள்ளாமல் உதவுதொகை செலுத்துனர்களின் ஓய்வூதிய நன்மைகள் இல்லாதொழிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

3.2 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

6 மாதங்கள் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளாத ஓய்வூதிய உரித்தாளிகளின் பெயர்கள் உறுதிப்படுத்திக்கொள்ளாமல் ஓய்வூதியப் பிரிவின் உத்தியோகத்தர்களால் ஓய்வூதியம் செலுத்துனர்களின் பெயர்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந்தன.

3.3 முகாமைத்துவ செயற்பாடுகள்.

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) கமக்காரர் ஓய்வூதியம் பெறுனர்களுக்கான ஓய்வூதியம் செலுத்துவதற்காகவும் நிருவாகச் செலவினங்களுக்காகவும் பொதுதிறைசேரியிலிருந்து நிதி வழங்கப்பட்டு வருவதோடு அவ்வாறிருக்கையில் கமக்காரர்களுக்கு ஏலாமை மற்றும் இறப்புப் பணிக்கொடை செலுத்துவதற்காக கமத்தொழில் மற்றும் கமநல செயற்றிட்டத்தில் வருடாந்தம் தவணைப் பணமொன்றை வைப்புச்செய்து கமக்காரர்களை காப்புறுதிசெய்து காப்புறுதி நிதியமொன்று கட்டியெழுப்பப்பட்டிருந்தது. மீளாய்வாண்டுக்காக ரூ. 17,197,260 தவணைப் பணத்தை வரவுவைத்து ரூ. 1,173,625

இறப்புப் பணிக்கொடையைச் செலுத்தியிருந்ததோடு ஆண்டிறுதியில் அந்த நிதியத்தின் மீதி ரூ. 1,258,775,352 ஆக விளங்கியது. ஒவ்வோராண்டிலும் செலுத்தப்பட்ட நன்மைகள் இந்த நிதியத்திற்கு வரவுவக்கப்படுகின்ற தவணைகளிலிருந்து நூற்றுக்கு 5 தொடக்கம் 10 வீதமாக அமைகின்ற குறைந்த அளவாக அமைவதால் இந்த காப்புறுதியைப் பேணிவருகையில் விளைவாற்றல் நிலவாமை அவதானிக்கப்படுகின்றது.

(ஆ) செயற்றிட்டத்தின்கீழ் உறுப்பாண்மையைப் பெற்றுக்கொண்டுள்ள கமக்கார உதவுதொகை செலுத்துனர்களின் உயிரத்தரவுகளைப் பெற்றுக்கொண்டு, தகவல் முறைமையை இற்றைப்படுத்துவதற்காக கமநல சேவைகள் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் 2017 ஓகத்து 11 ஆந் திகதியளவில் ரூ. 5,640,925 செலவிட்டு பெறப்பட்ட தகவல்கள் எதிர்பார்த்த தகவல்களில் நூற்றுக்கு 20 சதவீதத்தைவிடக் குறைவானதாக அமைந்தமையால் மேற்படி தகவல்களை அடிப்படையாகக்கொண்டு முறைமையை இற்றைப்படுத்தி இருக்கவில்லை என்பதால் எதிர்பார்த்த நோக்கங்கள் ஈடேறவில்லை.

(இ) உதவுதொகை செலுத்துனரால் செலுத்தப்பட்ட தவணைகளை நிலவுகின்ற தகவல் முறைமையில் உள்ளடக்கி இற்றைப்படுத்தி பேணிவரவில்லை என்பதாலும் பற்றுச்சீட்டுகளை பரிசீலனை செய்யக்கூடியவகையில் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைக்காமல் ஒருபுறம் ஒதுக்கிவைத்திருந்தமையாலும் கீழ்க்காணும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i). "முறைப்படி செலுத்திய தவணைகளை" கணிப்பிட இயலாமல் போனமை.

(ii). தவணைப்பணத் தொகைகள் அனைத்தும் செலுத்தப்பட்டுள்ளனவா என்பதை உறுதிசெய்துகொள்ள இயலாமல் போனமை.

(iii). ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்துள்ள உதவுதொகை செலுத்துனர்களிடம் உள்ள தவணைப் பணக் குறிப்புப் புத்தகத்தில் தவணைப்பணம் செலுத்திய தினத்தை அல்லது மூலப் பற்றுச்சீட்டுப் பிரதியை பெற்றுக்கொண்டு உதவுதொகை செலுத்துனர்களின் கிடைப்பனவுகள் பற்றிய தகவல்களை உறுதிசெய்துகொள்ளவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

(iv). தொடர்ச்சியாக 5 தவணைகளை செலுத்தத் தவறியமை பற்றி உதவுதொகை செலுத்துனர்களை விழிப்புணர்வூட்ட இயலாமை.

(v). நிதிக் கூற்றுகளில் காட்டப்படுகின்ற உறுப்பாண்மை வருமானத்தின் பரிபூரணத்தன்மையையும் திட்பநுடபத்தன்மையையும் கணக்குப் பதிகையிலும் கணக்காய்வின்போதும் உறுதிசெய்துகொள்ள முடியாமல் போயுள்ளமை.

(vi). தவணைப்பண வருமானத்தை அட்டுறு அடிப்படையில் கணக்குப்பதிய இயலாதுள்ளமை.

(vii). மாதாந்த மற்றும் அரையாண்டு தவணைகளை செலுத்துகின்ற கமக்காரர்களால் வயது 60 வருடங்களை நிறைவுசெய்த பின்னர் ஓய்வூதியத்திற்காக விண்ணப்பிக்கும்வரை ஓய்வூதியத்தை கணிப்பதற்கான தகவல்கள் சபையிடம் இல்லாமை.

(viii). கிராமிய வங்கிகள் மற்றும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற முகவராண்மைகளிலும் மாவட்ட அலுவலகங்களிலும் அறவிடப்படுகின்ற தவணைக்

கட்டணங்களை அனுப்பிவைக்க தாமதிக்கின்ற சந்தர்ப்பங்களில் அதனை இனங்காண இயலாமை.

(ஈ) புதிய கமக்காரர் ஓய்வூதிய நலன்புதித் திட்டமொன்றை தொடங்கி 1 1/2 கழிந்து 485 உதவுதொகை செலுத்துனர்கள் செயற்றிட்டத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளபோதிலும் முறைப்படி தவணைப் பணத்தைச் செலுத்தியிராத உதவுதொகை செலுத்துனர்களை இனங்கண்டு விழிப்புணர்வூட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டபிள்யு. டீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகளின் பொருட்டு பதில்கள்

கமத்தொழில் காப்புறுதி முன்மொழிவுத் திட்டத்தின்2022 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவுறும் வருடத்தின் பொருட்டான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக2018 ஆம் ஆண்டின் 19 இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

1 நிதி கூற்றுக்கள்

1.1 கருத்து

1.2 கருத்தின்பொருட்டு அடிப்படை

(அ) சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்களினுள் உள்ளடங்கியுள்ள மோட்டார் வாகனங்கள் மீள்கணக்கிடப்பட்டு கணக்குவைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய சொத்துக்கள் வரலாற்றுச் செலவில் கணக்கின் மீது கணக்கு வைக்கப்பட்டுள்ளது.முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டுள்ள சொத்துக்களில், பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ள சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டாலும் முழுமையாகப் பயன்படுத்த முடியாத சொத்துகளும்உள்ளன. அவற்றில் பெரும்பாலும் சொத்துக்கள் மீண்டும் பயன்படுத்தப்பட்டாலும், நடைமுறையில் அச்சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு முடியாது என்பதுடன், நீண்ட காலம் பழமை வாய்ந்த தளபாடங்கள், கணினிகள் மற்றும் வன்பொருள் மற்றும் அலுவலக உபகரணங்கள் போன்றவையும்அடங்கும். இச்சொத்துகளைப் இற்றைப்படுத்தல், புதிய உதிரிப்பாகங்களைப் பொருத்துதல் போன்றவை மேற்கொள்வதற்கு இயலாது. பயன்படுத்தக்கூடிய நிலையில் அற்ற சொத்துக்கள் எதிர்காலத்தில் பாவனையிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) மஹியங்கனை, எம்பிலிப்பிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களின் காணிகளின் பெறுமதி மற்றும் அம்பிலிபிட்டிய உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தின்பெறுமதியை மதிப்பீடு செய்வதுதொடர்பாக இது வரையில் மாவட்ட பிரதி/உதவிப் பணிப்பாளர்களுடன்கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், துரிதமாக அந்நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்கில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) பொது திறைசேரியிலிருந்து நேரடியாக வழங்கப்படும் ஒதுக்கீடு மட்டுமே பொது திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்றதாக காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், கடற்றொழிலாளர் ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டத்தின் பொருட்டு கடற்றொழில் திணைக்களத்தின் மூலம் கிடைக்கப் பெறும் ரூபா 1,500,000/- தொகைநேரடியாச் சபைக்குத்திறைசேரியிலிருந்து கிடைக்காத காரணத்தால்வேறு வருமானத்தினுள் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) கமத்தொழில் முகாமைத்துவத் தகவல் அமைப்புத் தொகுதி விவசாய அமைச்சின் தலைமையில்மேற்கொள்ளப்படுவதுடன்,குறித்த செலவினம் தொடர்பான விவசாய அமைச்சின் ஊடாக மீளளிப்பு செய்யப்டுகின்றது. அதற்குரிய சகல கொடுக்கல் வாங்கல்களும் சரியாகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன்,கணக்குக் குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

(இ) இழப்பீட்டு ஆவணங்களை கணினிமயமாக்குவதில் ஏற்பட்ட தவறு காரணமாக, பயிர்ச் செய்கையின் சேதத்திற்கான காரணம் தவறாக கணினியிடப்பட்டுள்ளது. அத்துடன், அதனை மீண்டும் பரிசீலனை செய்யும் போதும் கூடப் சரிபார்க்கப்படாததால், சேதத்திற்கான காரணம் சரியாகப் பதிவு செய்யப்படாது, இறுதி அறிக்கைகள் பிரதான காரியாலயத்திற்கு முன் வைக்கப்பட்டுள்ளது.

காப்புறுதிப் பிரிவிற்கு இழப்பீட்டு ஆவணங்கள்பெற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பதாலும் மற்றும் இறுதி அறிக்கைகள் மட்டுமேபெற்றுக் கொள்ளப்படுவதாலும், இவ்வாறான விடயங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுவதில்லை. அதற்கமையப்பிரிவுக்குக் கிடைக்கப்பெறும் இறுதி அறிக்கைகளைச் சரிபார்க்கப்பட்டதன் பின்னர், உறுதிச்சீட்டுக்களுடன் இறுதி அறிக்கைகள் நிதிப் பிரிவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. காப்புறுதிப் பிரிவினால் முன்வைக்கப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலின் படி, நிதிப் பிரிவினால் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு, தேசிய காப்புறுதிப்பொறுப்புநிதியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள பணம் அடுத்துக் கிடைப்பதற்குள்ள பணத்திலிருந்து கழித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்ட அலுவலகங்களினால் ஏற்படும் இந்த குறைபாடுகளைக் குறைக்கும் வகையில், மீண்டும் அறிவுறுத்தல்கள் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.மாவட்ட அலுவலகத்தில் போதியளவு ஆளணியினர் அற்ற காரணத்தால், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தொடர்புபடுத்திக் கொள்ளும் உத்தியோகத்தர்கள் மூலம் அலுவலர்கள் ஆவணங்களைப் பரிசீலிக்குப் பார்க்கும் விடயங்கள் மேற்கொள்ளப்படுவதால், இதுபோன்ற தவறுகள் ஏற்படுகின்றன. தற்போது நிதி அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு அத்தியாவசிய ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேலதிகக் காப்பீட்டுகள்தவணைப் பணம் செலுத்தப்பட்டு பெற்றுக் கொண்டுள்ள கமக்காரர்களின் பொருட்டு மேற்படி இழப்பீட்டுக் கொடுப்பனவுமேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்இத்தால் அறியத் தருகின்றேன்.

(ஊ) இப்பணம் திசம்பர் மாதம்மாவட்ட நிர்வாகக் கணக்கினுள் சேர்க்கப்பட்டாலும், பிரதான காரியாலயத்தில் உரிய முன்மொழிவுத் திட்டங்களின் கணக்குகளுக்குப் பணம் சேர்க்கப்படுவது, அடுத்து வரும் நிதி ஆண்டின் முதல்

மாதத்தினுள்ளேயாகும். எனவே, இக்காப்புறுதித் தவணைப் பணம் நிதிக் கூற்றுத் தயாரிக்கப்படும் வருடத்திற்குரியது என்பதால், அவ்வருடத்தின்வருமானத்திற்குச் சரியாகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், கிடைக்கப்பெற வேண்டிய தவணைப் பணம் என நிதிக் கூற்றுக்களில்காட்டப்பட்டுள்ளது.

(எ) இந்த முதலீடுகள் சரியாகப் பேரேட்டுக் கணக்குகளுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே, இது முதலீடுகள் தொடர்பான பேரேட்டுக் கணக்குகளின் பொருட்டு இதனால் எந்த விளைவையும் ஏற்படுத்தாது.

(ஏ) குறித்தடெப் இயந்திரம் இருப்புப் பதிவேட்டில் உட்படுத்துதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

(ஐ) 2018 வரவு செலவின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டாயப் பயிர்க் காப்புறுதியின் பொருட்டு06 வகையான பயிர்களின் பொருட்டு அதிகப்பட்சமாக ரூபா 40,000/- இழப்பீடு வழங்குவதற்கு இக்காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருட்டு ஏக்கருக்கு ரூபா675/- வீதம், 2018 ஆம் ஆண்டில் 2,200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், இத்திட்டத்தின் பொருட்டான தவணைப் பணம் கணக்குவைக்கப்படுவது,மேற்படித் திட்டத்திற்குரிய மேற்படி வரவு செலவுத் திட்ட முன்மொழிவிற்கும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின்படியாகும் என்பதுடன், 2022ஆம் வருடமாகும் போது,சபைக்குக் கிடைக்கப் பெற வேண்டிய தவணைப் பணமாக 4.249 மில்லியன் ரூபா உள்ளது.

(ஒ) (i) சபையின் காசுப் பாச்சல் கூற்றினுள், செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாகிய காசுப் பாச்சலைக் கணக்கிடும் போது, முந்தைய வருடங்களைப் போன்றேசமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் மீள்ளாய்வுசெய்யப்பட்டு, சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இம்மாற்றங்களினால் காசுப் பாச்சல் கூற்றில் உள்ளடக்கத்தின் பொருட்டு பாதிப்புக்கள் ஏற்படாது என்பதுடன், சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் மீளத் தயாரிக்கப்படும்.

(ii) முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாகிய காசிப் பாச்சலைக் கணக்கிடும் போது, நிதி அல்லாத பாய்ச்சல்கள் நீக்கப்பட்டு சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(iii)கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்குரியதாகக் கிடைக்கப் பெறும் பணம் நடைமுறைக் கணக்கின் ஊடாக அம்முன்மொழிவுத் திட்டத்திற்கு மாற்றப்படும் என்பதால், இம்முன்மொழிவுத் திட்டத்தில் காசுப் பாச்சலாக அடையாளம் காணப்படமாட்டாது.

1.3 சபையின் 2021 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனையதகவல்கள்

1.4 நிதிக் கூற்று தொடர்பாக முகாமைத்துவத்தினதும் மற்றும்நிர்வகிக்கும் தரப்பினரதும் பொறுப்புக்கள்

1.5 நிதிக் கூற்றின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

2. வேறுசட்டரீதியான ஒழுங்குமுறைகளின் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை சட்டவிதிகள்/கட்டளை பற்றிய குறிப்பு

2.2.2

(அ) ஆட்சேர்ப்பு நடைமுறை விதி

- 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள உதவிப் பணிப்பாயர் நியமனங்கள் ஆட்சேர்ப்பு நடைமுறை விதிக்குப் புறம்பாக மேற்கொள்ளப்படவில்லை.ஆடசேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் நிறுவனத்தின் தேவைப்பாட்டிற்கு ஏற்றவாறு இணைக்கபட்டுள்ளனர்.

4.3.1 (அ)

- உதவிப் பணிப்பாளர் பதவியின் பொருட்டு விண்ணப்பித்துள்ள வெளிவாரிவிண்ணப்பதாரர்களின் விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களின் உண்மைத் தன்மை குறித்து திருப்தி அடைந்ததையடுத்து, குறித்தபதவிக்கு வழங்கப்பட்டது.

  உரிய உத்தியோகத்தர்களின் சேவை அனுபவம் தொடர்பாக நிச்சயமற்ற நிலை ஏற்படும் சந்தர்ப்பங்களில் மட்டும், உரிய சேவை நிலையங்களுக்கு அறிவித்து சேவை அனுபவம் தொடர்பாக உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

  எவ்வாறாயினும், ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள புதிய உத்தியோகத்தர்களின் தகுதிகூர் காலம் முடிவில் சேவையை நிரந்தரமாக்குவதற்கு முன்னர் குறித்த உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

(ஆ) கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையானது செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது, 1990ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தின் கீழேயாகும். இப்பாராளுமன்றச் சட்டத்தின் பிரகாரம் சபையின்தொடர்ச்சியானசெயற்பாட்டின் பொருட்டு தீர்மானங்களை எடுக்கும் முறையான அதிகாரம் பணிப்பாளர் குழுவிற்குக் கையளிக்கப்பட்டுள்ளது. அதற்கமையச் சட்டத்தின் அதிகாரத்தின் பிரகாரம் பணிப்பாளர சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தீர்மானத்திற்கு

சுற்றுநிருபமொன்றால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயமொன்றை கடைப்பிடித்தல் வேண்டும் எனக் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதால், குறித்த சுற்றுநிருபத்தை வெளியிட்டுள்ள நிறுவனத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு 05/10/2019 திகதிய3/1/8/1என்னும் இலக்கமுடைய கடிதத்தின் மூலம் நிரல் அமைச்சின் செயலாளருக்கு வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது . இது தொடர்பான தீர்மானம் கிடைக்கும் வரையில் பணிப்பாளர் சபையின் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன்,இது தொடர்பில்3/1/8/1 என்னும் இலக்கமுடைய 27/03/2023 ஆந் திகதி கடிதத்தின் மூலம் மீண்டும் நிரல் அமைச்சின் செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அறியத்தருகின்றேன்.

(ஆ)

(i), (ii) 2022 ஆம் ஆண்டின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள செயற்படு திட்டத்தின் வரைவு விவசாய அமைச்சகத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.மேலும், செயற்படு திட்டம் மற்றும்**ஐந்தாண்டு மூலோபாயத் திட்டம்,2022 ஆம் ஆண்டிற்கான**23/02/2022 ஆந் திகதி நடைபெற்ற**516வது** பணிப்பாளர் சபையின் கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் போது கலந்துரையாடப்பட்ட விடயங்களுக்கமைய **30/04/2022 ஆந் திகதிவிசேட பணிப்பாளர் சபைக் கூட்டமொன்றிக்கு அழைப்பு விடுக்கப்பட்டு**அது தொடர்பாக மேலும் கலந்துரையாடப்பட்டது.

எவ்வாறாயினும், மேற்படிக் காலப்பகுதியினுள் சபையின் முகாமைத்துவத்தில்ஏற்பட்ட உறுதியற்ற நிலைப்பாடு காரணமாக அவ்இறுதி அறிக்கை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

புதிய தலைவரின் வருகையின் பின்னர், ஏற்கனவே தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்த, 2022 செயற்படுத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டம் பணிப்பாளர் சபைக்கு முன்வைப்பதற்கான எதிர்பார்ப்புடன் மேலும் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய புதிய எண்ணக்கருவின் கீழ் திருத்தங்கள் மேற்கொள்ளல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இதன் போது2022 ஆம் ஆண்டின் கடைசி சில மாதங்களே இக்காலப்பகுதியின் போது எஞ்சியிருந்ததால்ஏற்கனவே தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்த2022 செயற்படுத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டத்திற்கமைய, 2023ஆம் வருடத்தையும்அடிப்படையாகக் கொண்டு புதிய செயற்திட்டத்தைத் தயாரிக்கும் பொருட்டு அறிவுரைகள் கிடைக்கப்பெற்றது.அதன்போது, சபையின் நோக்கம், பணி மற்றும் குறிக்கோள் நிகழ்காலத்திற்கும் மற்றும' எதிர்காலத் திட்டங்களுக்கு பொருத்தமானறு தயாரிக்கப்பட்டது. அதற்கமைய 2023ஆம் வருடத்தின் பொருட்டான செயற்படுத் திட்ட ம் தற்போது தயாரிக்கப்பட்டு, 2022ஆம் ஆண்டு திசம்பர் 23ஆம் தேதி நடைபெற்ற **523ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதியும் பெறப்பட்டுள்ளது.**

2.2.4 அதிகாரங்கள், கடமைப் பொறுப்புக்கள்,பணிகள்

கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்ட விவசாயிகளின் பொருட்டு திருத்தம் செய்யப்பட்ட பட்டியல்களைத் தயாரித்து அனுப்பிவைக்கும் படி கமநல சேவைகள் நிலையங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் அறிவுறுத்தப்பட்டு, அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட பட்டியலின் பொருட்டுகொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இழப்பீட்டுத் தொகைக்கு மீள உரிமைகோராத விவசாயிகளின் ரூபா 70,800,200/- பணம், தொடர்ந்தும் விவசாயிகளினால் உரிமை கோரப்படாத காரணத்தால் கமத்தொழில் காப்புறுதி நிதியத்திற்க்கு மாற்றும் பொருட்டு பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அத்தொகையைகமத்தொழில் தரவு முகாமைத்துவ அமைப்பை உருவாக்கும் பொருட்டு வழங்குவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. எனினும், அப்பணம் அந்நோக்கத்தின் பொருட்டு பயன்படுத்தப்படாததால், மீண்டும் பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏற்படாகியுள்ளது.

2.2.4

(அ) காலி மாவட்ட செயலகத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின்படி, காலி மாவட்ட அலுவலகத்தின் திருத்தவேலைகளின்பொருட்டுமொத்த செலவு ரூபா 3,282,278.52 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை 2021 ஆம் ஆண்டு செலுத்தப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டு வேலைகள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர், அவ்வாறு வழங்கப்பட்ட பணத்தில் மிகுதிப் பணமான ரூபா521,063/43 பணம்136267 என்னும் இலக்கமுடைய காசோலை மூலம் மீண்டும் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட முழுத் தொகையும் கட்டடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட மிகுதித் தொகை அக்கணக்கிலிருந்து அகற்றப்பட்டு சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2020/21பெரும்போகத்தின் பொருட்டு அம்பாறை, அனுராதபுரம், கம்பஹ, அம்பாந்தோட்டை, கிளிநொச்சி, குருநாகல் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கான உற்பத்திக் குறியீடு(Index Product)தயாரிக்கப்பட்டது. அவ் உற்பத்திகளின் பொருட்டு இழப்பீடுகளின் கணக்கீடுகளும்மேற்கொள்ளப்பட்டுள்ளது.இருப்பினும், மழைவீழ்ச்சி தரவுகளின் மூலம் கணக்கீடு செய்தல், வெளிக்கள அவதானிப்புகளுடன்பொருத்தமற்ற காரணத்தால் இழப்பீட்டுக் கொடுப்பனவின் பொருட்டு பயன்படுத்தப்படவில்லை. 2020 மற்றும் 2021இல் ஏற்பட்டகொவிட் தொற்றுநோய் நிலை காரணமாக, பயிர்ச்சேதங்கள் பற்றி அறிக்கையிடல் மற்றும் சேத கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆகியவை தாமதங்களுடன் நடைபெற்றதால் உற்பத்திக் குறியீட்டுபெறுபேறுகள் களக் கண்காணிப்பு பெறுபேறுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு முடியாது இருந்ததாலும் காலநிலைத்

தரவுகளைப்பெற்றுக்கொள்வதில் எற்பட்டதாமதங்கள் காரணமாகவும் அக்கணக்கீடுகளின் படி இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) கமத்தொழில் தகவல்கள் முகாமைத்துவ அமைப்புத் தொகுதிவிவசாய அமைச்சின் மேற்பார்வையின் கீழ், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின்செயற்பாடுகளுக்கும் அப்பால் பாரிய பணிகளை நிறைவேற்றும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு தரவு அமைப்பாகும் என்பதால், இத்தரவு அமைப்பைச்செயற்படுத்துவதற்கு அவ்வவ் நிறுவனங்களை விரிவாக விழிப்புணர்வூட்டும் பொருட்டு தேவையான பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.3 வேறு விடயங்கள்

(அ) 2020/2021 பெரும்போகம் தொடக்கம் இழப்பீடுகள் செலுத்தும் போது, 2017 சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திடீர் விபத்து காப்புறுதிப் பத்திரத்தை வழங்குவதற்கு பணிப்பாளர் சபையினால் அறிவுறுத்தல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதால், தற்போது காப்புறுதிப் பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) எம்பிலிப்பிட்டிய உத்தியோகபூர்வ வாசஸ்தலம்பிரதான காரியாலயத்தின் உத்தியோகத்தர்களினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், பல வருடங்கள் பழைமை வாய்ந்ததால் திருத்தவேலைகளின் பொருட்டு அதிக பணம் செலவாகும். தற்போது கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு வரையறுக்கப்பட்டுள்ளதால், இந்நிலை ஏற்பட்டுள்ளது. இக்காணியின் பொருட்டு மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு அம்பிலிபிட்டிய பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பினும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின்பற்றாக்குறை காரணமாக மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப்பெறவில்லை.

(இ) அம்பிலிபிட்டிய உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துடன் கூடிய காணியைச் சுற்றி மீண்டும் வேலி அமைக்கும் பொருட்டுமற்றும் அனுமதியற்றப் பயிர்ச்செய்கைகளை அகற்றும் படியும், குறித்த பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டுள்ள நபர்களைக் கண்டறிந்து, அவ்அனுமதியற்றப் பயிர்ச்செய்கைகளை நிறுத்தும் படி அறிவுறுத்தல்களை வழங்கும் படியும் மாவட்ட உதவிப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக உரிய நேர்முகப் பரீட்சை நடவடிக்கைகளை முறையாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு இயலாததால், ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தடைபட்டது. தற்போது, 2023ஆம்

ஆண்டு நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் மூலம் உதவிப் பணிப்பாளர் (தகவல்தொழில்நுட்பம்)பதவியின்பொருட்டு ஆட்சேர்ப்பு முடிவுற்றுள்ளது.

(ஊ) நேர்முகப்பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் கடமைக்கு அழைக்கும் பொருட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், அவ்விண்ணப்பதாரர்கள் கடமைக்கு அறிக்கையிடாமை தொடர்பாகக் காரணங்களை சபையினால் எடுத்துக் கூற முடியாது.

(ஊஊ) எவரேனுமொரு விண்ணப்பதாரரிடம் அதிகளவிலான சான்றிதழ்கள் உள்ள நிலையிலும் கூட, விண்ணப்பங்கள் கோரும் போது சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்த போது, தேவையான அடிப்படை தகைமைகளுக்குரியசான்றிதழ்களை இணைப்பதுபொதுவான விடயமாகும். அதற்கமைய, ஏதேனுமொரு பதவியின் பொருட்டு அதிகபட்ச வயது எல்லை குறிப்பிடப்பட்டிருக்கும் போது, உரிய வயதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு உரிய பிறப்புச் சான்றிதழின் பிரதி, தேசிய அடையாள அட்டையின் பிரதி, சாரதி அனுமதிப் பத்திரத்தின் பிரதி அல்லது கடவுச் சீட்டின் பிரதியொன்றை இணைத்திருக்கப்படாத சந்தர்ப்பத்தில் உரிய விண்ணப்பப் படிவங்களை நிராகரிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(எ) 2022 செயற்படுத் திட்டம் மற்றும் மூலோபாய திட்டம் ஒரு புதிய எண்ணக்கரு மற்றும் மாதிரிகளின் கீழ் தயாரிக்கப்பட்டதுடன் மற்றும் அதன்போது கிடைக்கப்பெற்ற கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு 2023 செயற்படு திட்டம் தயாரிக்கப்பட்டது என்பதால், எனவே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறுஅச்செலவுகள் பயனற்ற செலவுகள் அல்ல என்பதுடன், அதற்கமைய, 2023ஆம் வருடத்தின் பொருட்டானசெயற்படு திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு, 2022ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 23ஆம் திகதி நடைபெற்ற **523ஆவது பணிப்பாளர் சபையின் கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.**

(ஏ) நிதிநிலைக் கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுள்ள இம்மீதிகள், நிதிக் கூற்றுக்களிலிருந்துநீக்குவதற்குரிய பணிப்பாளர் சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, அம்மீதிகள் இந்நிதியாண்டினுள் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஐ) இம்மீதிகள் நீண்ட காலமாக நிலவும் மீதி என்பதாலும், குறித்த தரப்பினர்களினால் இப்பணம் மீளக் கோரப்படாத்தாலும் அப்பணத்தை வருமானமாக எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஒ) நிதிநிலைக் கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுள்ள இம்மீதிகள், நிதிக் கூற்றுக்களிலிருந்து நீக்குவதற்குரிய பணிப்பாளர் சபைப் பத்திரம்

சமர்ப்பிக்கப்பட்டு, அம்மீதிகள் இந்நிதியாண்டினுள் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

கமக்காரர்களின்ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் நலன்கள் திட்டத்தின்2022 திசம்பர் 31 இல் முடிவுறும்வருடத்தின்பொருட்டான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின்12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

2 நிதி கூற்றுக்கள்

1.1 கருத்து

1.2 கருத்தின்பொருட்டு அடிப்படை

(அ) 2007 ஆம் ஆண்டில் கமக்காரர்களின்ஓய்வூதியத் திட்டத்தின் பொறுப்புக்கள் தொடர்பாகமேற்கொள்ளப்பட்ட அளவு மதிப்பீட்டின் அடிப்படையில் ஓய்வூதியப் பொறுப்புக்கள் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. இவ்ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டம்சுயநிதி அடிப்படையில் அற்றது என்பதால், இம்மொழிவுத் திட்டத்தின் பொருட்டு புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், சுயநிதி அடிப்படையில் நடைமுறைப்படுத்தக் கூடிய புதிய முன்மொழிவுத் திட்டமொன்று தாபிக்கப்பட்டுள்ளது.பழைய முன்மொழிவுத் திட்டத்தில்கொடுப்பனவுகள் வருடாந்த வரவுசெலவுஒதுக்கீடுகள் மூலம் வருடாந்தம்கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதுடன், புதிய கமக்காரர்களின் ஓய்வூதியத் திட்டத்தின் மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் பழைய முன்மொழிவுத் திட்டத்தினதும் அளவு மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) பண வரவுகளுக்குரிய தகவல்களின் பொருட்டு முறையாக பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டு வரப்படுகின்றது. மாதாந்தம் இற்றைப்படுத்தப்படும் ஓய்வூதியப் பட்டியல் கணினி அமைப்பின் மூலம் பெற்றுக் கொள்ளலாம். முன்மொழிவுத்திட்டத்தில் பங்களிப்பினைப் பெற்றுக் கொண்டுள்ள பங்களிப்பாளர்களின் தகவல்களை கணினி அமைப்பு மூலம் பெற்றுக் கொள்ளலாம். பின் தவணைப் பணங்கள் கணினி அமைப்பிற்கு உட்படுத்துவதற்கு தாமதங்கள் ஏற்பட்டுள்ளதால், இரத்து செய்யப்பட்டுள்ள மற்றும் செயலழிந்துள்ள சந்தாதாரர்களை அமைப்பின் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு கடினமாகவுள்ளது. இந்நிலைமையின் கீழ், பின் தவணைகளை தானியங்கியாகக்கணினியிடும் பொருட்டு அரச வர்த்தக வங்கியின் மூலம் பின் தவணை அறவீட்டு அத்தவணைப் பணத்தை எமது தரவு அமைப்பிற்குதொடர்பு படுத்திக் கொள்ளும் விசேட வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்கும்பொருட்டு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

(இ) 2022 ஆம் ஆண்டில், கமக்காரர்களின் ஓய்வூதிய செலவினமாக 4,053 மில்லியன் ரூபாய் வருடத்தினுள் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், அவ்வருடத்தின் பொருட்டு 3,998 மில்லியன் ரூபா திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய, பொது திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ள சகலபணமும் செலுத்தப்பட்டுள்ளதுடன், வருமானக் கூற்றில் காட்டப்பட்டிருப்பது, அம்மொத்தச் செலவினத்திலிருந்து பங்களிப்பாளர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு மீளக் கிடைக்கப் பெற்ற பணத்தை கழித்ததன் பின்னரான பெறுமதியாகும். இதற்கமைய, பொது திறைசேரிக்குச்செலுத்துவதற்கு நிலுவைகள் எதுவும் இல்லை.

(ஈ) 2022 ஆம் ஆண்டில் உரிமை கோரப்படாத ஓய்வூதியமாக 167 மில்லியன் ரூபா ஓய்வூதிய கொடுப்பனவுச் செலவிலிருந்து கழிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளது. நீண்டகாலமாக ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளப்படாதுள்ள பங்களிப்பாளர்களின் ஓய்வூதியத்தை நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, இவ்உரிமை கோரப்படாத தொகை கிடைக்கப்பெறவேண்டிய ஓய்வூதியமாகக்கணக்கு வைக்கப்படவில்லை.

(இ) தேறிய தவணைப் பணக் கொடுப்பனவுகள், மரணப் பணிக்கொடை மற்றும் உடல் பெலவீனமுற்றவர்களுக்கான நன்மைக் கொடுப்பனவுகளின் பொருட்டு வழங்கப்பட்டுள்ள, கொடுப்பனவுகளின் பொருட்டு சமர்ப்பிக்கப்படாதுள்ள காசோலைகள் காலவதியாகியதும், அக்காசோலைகள் வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதுடன், அக்காசோலைகளின் பொருட்டு மாவட்ட அலுவலகங்களின் ஊடாக எபணம் செலுத்துவதற்கு வழங்கப்படவில்லை, அவை காலாவதியாகும் போது பணமாக்கப்படும், மேலும் அந்த காசோலைகளுக்கு மாவட்ட அலுவலகங்களின் மூலம் எமக்கு கிடைக்கப் பெறும் கோரிக்கைகளுக்கமைய மீண்டும் காசோலைகள் வழங்கப்படும். காலாவதியான காசோலைகள் முறையாகப் பதிவுசெய்யப்படுவதுடன், எந்தவொரு சந்தர்ப்பத்திலும், பங்களிப்பாளரினால் உரிமைகோரும் சந்தர்ப்பங்களின் போது, சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலகத்தின் சிபாரிசிற்கமைய மீண்டும் பங்களிப்பாளருக்குக் காசோலைகள் வழங்கப்படும். சபையினால் அதிக எண்ணிக்கையிலான காசோலைகளை வழங்கப்படுவதுடன், அக்காசோலைகள் பணமாக்கப்படாத காசோலைகள் தொடர்ந்து இணக்கங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றது.

(ஈ) கமக்காரர்களின் ஓய்வூதியத் திட்டத்திற்குரியதாக திறைசேரியினால் கிடைக்கப்பெறும்பணத்தின் வழங்கும் பொருட்டு பட்டியலிடப்பட்ட கணக்கானது, இலங்கை வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையின்164667 என்னும் இலக்கமுடைய கணக்காகும். அக் கணக்கிற்குக் கிடைக்கப் பெறும் குறித்த பணம், நடைமுறைக் கணக்கின் ஊடாககமத்தொழில் காப்புறுதி முன்மொழிவுத் திட்டத்திலிருந்து கமக்காரர்களின்ஓய்வூதியத் திட்டத்திற்கு மாற்றப்படுகிறது.

(ஊ) 2010 ஆம் வருடத்தில் பொதுதிறைசேரியின் செயலாளரின் தலைமையில்நடைபெற்ற குழுக் கூட்ட அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய,கமக்காரர் ஓய்வூதியக் கொடுப்பனவின் தேவைப்பாட்டினை உறுதி செய்யும் பொருட்டு திறைசேரியினால் கிடைக்கப் பெற்ற பணம்மற்றும் நிலுவைத் தொகையை, அச்சமயம் சபைக்கு உரித்தாகவிருந்த கடற்றொழிலாளர் ஓய்வூதியம் / கமத்தொழில் காப்புறுதிநிதியைப் பயன்படுத்தும் படியும், பின்னர் அந்நிதியைத் தீர்த்துக் கொள்ளும் படியும் அறிவிக்கப்பட்டிருந்த்து. அதற்கமைய, பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் சபையின் ஏனைய மேலதிக நிதி கமக்காரர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவின் பொருட்டு பயன்படுத்தப்பட்டது. அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தை மீண்டும் கமத்தொழில் காப்புறுதித் திட்டம் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டங்களுக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியைப் படிப்படியாகச் செலுத்தும் பொருட்டு பணிப்பாளர் சபை அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ளது.

(ஊஊ) சபையின் சட்டச் செலவுகள்60% கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில்கணக்கு வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள 1,348,623 ரூபாய் சட்டச் செலவுமீண்டும் ஆய்வு செய்யப்பட்டு, கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் சட்டச் செலவுகள் மட்டும் பதிவு செய்யப்பட்டு சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், செலவினங்களின் பகிர்விற்குரியதாக மேற்கொள்ளப்படும் சகல செலவுக் கணக்குகளும் திருத்தம் செய்யப்பட்டு பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்வரும் நாட்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ) கமக்காரர் ஓய்வூதியப் பொறுப்பு வருடாந்தம் அதிகரிப்பதுடன், முன்மொழிவுத் திட்டத்தில் முதலீடுகள் இல்லாமையாலும், இத்திட்டத்தின் பயனுறுதி நன்மையின் தவணைப் பணத்தினை அதிகரிக்காது, பல சந்தர்ப்பங்களில் அரசின் கொள்கை காரணமாக அதிகரிக்கப்பட்டதாலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு வருடமும் அரசின் வரவுசெலவின் மூலம் பணம் ஒதுக்கப்பட்டு கமக்காரர் ஓய்வூதியக் கொடுப்பனவுமேற்கொள்ளப்படுகின்றது.

1.3 நிதிக் கூற்று தொடர்பானமுகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்பு

1.4 நிதிக் கூற்றில் கணக்காய்வு தொடர்பாகக் கணக்காய்வாளரின் பொறுப்பு.

2. பிற சட்ட ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள்தொடர்பான அறிக்கை.

3. செயற்பாட்டு ஆய்வு

3.1 சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்காமை

(a) i 6(1) வதுபிரிவு

- 60 வயது பூர்த்தியடைந்த விவசாயிகளின் பொருட்டு தரவு அமைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விவரங்கள் மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன், இனிவரும் காலங்களில் மின்னஞ்சல் மற்றும்SMSசெய்தி மூலம் கமக்காரர்களைஅறிவூட்டும் பொருட்டு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக கமநல சேவைள் நிலைய மட்டத்தில் பயிர்ச்செய்கைப் போகக் கூட்டங்களிலும், மாவட்ட விவசாயக் குழுக் கூட்டங்களின் போதும் இந்த விழிப்புணர்வை விவசாயிகளுக்கு எடுத்துச் செல்லும் வகையில் உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- மாவட்டம்அலுவலகங்களின்பொருட்டுசமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் பொருட்டு தாமதமின்றி ஓய்வூதியத்தை வழங்குவதற்குத் தேவையான அறிவுரைகள் மாவட்டப் பணிப்பாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமையப் பங்களிப்பாளர்மாவட்டம்அலுவலகத்திற்கு கடிதஆவணங்கள்கையளிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே அப்பங்களிப்பாரின் பொருட்டு இலக்கமொன்றை வழங்குவதற்கும், அத்தகவல்களைப் பிரதான காரியாலயத்திற்கு அனுப்பி வைப்பதற்கு விட்டுஅந்த நேரத்தில்என்றுபங்களிப்பாளர்க்கானஒரு எண் கிடைக்கும் கொடுக்க, அதே தகவல் முக்கிய அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு முன்னர் Google Drive இல் இற்றைப்படுத்துவதற்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது மாவட்ட அலுவலகத்தின் மூலம் இச்செயற்பாடானது வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றது.

- 60 வயதைப் பூரணப்படுத்திய விவசாயிகளை அறிவூட்டும் பொருட்டு அவர்களினால் வழங்கப்பட்டுள்ள முகவரிகளுக்கு அஞ்சல் அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டு, அவர்களை அறிவூட்டுவதற்கும், செய்திப் பத்திரிகை அறிவித்தல் மூலம் கமக்காரர்களைஅறிவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- 60 வயது நிறைவடையும் விவசாயிகளின் பெயர்ப்பட்டியல் அவ்அவ் மாவட்ட அலுவலகங்களில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அப்பெயர்ப்பட்டியல்கள் கமநல சேவைகள் நிலையங்களுக்கு வழங்கி, அதன் ஊடாகவும் கமக்காரர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், தொடர்ந்து வரும் நாட்களில் செய்திப் பத்திரிகை அறிவித்தல் மற்றும்நேரடி அறிவூட்டல்கள் மூலமும் இந்நிலைமையினை தவிர்த்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான விவசாயிகள் ஓய்வூதியத்திற்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ளதால்,அவ் விவசாயிகளிக்கு உடனடியாக ஓய்வூதியம் வழங்கும் பொருட்டு ஓய்வூதியப் பட்டியலில் உட்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதனால் காத்திருப்போர் பட்டியலில் இருந்த ஏராளமான எண்ணிக்கையிலான விவசாயிகளுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு செய்வதற்கு இயலுமாகவுள்ளது. எதிர்காலத்தில் எவ்விதமான நிலுவைகளும் ஏற்படாதவாறு, ஓய்வூதிய உரித்துரிமையைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்திலேயே,ஓய்வூதியப் பட்டிலுக்கு உட்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், வழங்கப்பட வேண்டியுள்ள ஓய்வூதிய நிலுவைகள் எதிர்காலத்தில் திறைசேரி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொண்டு படிப்படியாக வழங்குவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

ii. <u>12(ஆ) வதுபிரிவு</u>

- கமக்காரர்கள்ஓய்வூதியத் திட்டத்தின் பொருட்டு பங்களிப்புச் செய்துள்ள கமக்காரர்கள் தொடர்ச்சியாக 05 தவணைக்கட்டணங்களைச்செலுத்துவதை உதாசீனம் செய்திருப்பின்,அவர்களின்பங்களிப்பு இரத்துச் செய்யப்படுவதுடன், அது தொடர்பாகஅவர்கள் பங்களிப்புச் செய்து கொள்ளும் சந்தர்ப்பத்திலேயே தேவையானஅறிவுறுத்தல்கள் செய்யப்படுவதுடன், அவர்களுக்கு வழங்கப்படும் தணைப் பணக் குறிப்பு புத்தகத்திலும் சான்றிதழிலும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு பங்களிப்பு இரத்து செய்யப்பட்ட விவசாயிகளுக்கு அவர்களினால் செலுத்தப்பட்ட தவணைப் பணம் அவர்கள்60 வயதை அடையும் போது வட்டியுடன் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுகெகப்படும்.

- கமக்காரர்கள் ஓய்வூதியக் கொடுப்பனவு செயற்பாடுதபால் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றது.பங்களிப்பாளர் மரணமடைந்தால், குறித்த தபால் அலுவலகத்தின் மரணித்த பங்களிப்பாளர்களின் தகவல்கள்வழங்கப்படும். தொடர்ச்சியாக ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளாதுள்ள

ஓய்வூதியதாரர்கள் குறித்துஆய்வொன்றுமேற்கொள்ளப்பட்டு, அவ்ஓய்வூதியதாரர்களைக்கொடுப்பனவு பட்டியலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

- கமக்காரர்கள் ஓய்வூதியத் திட்டம் 1987 ஆம் ஆண்டு ஆரமப்பிக்கப்பட்ட திட்டமாகும் என்பதுடன், எனவே ஆரம்ப காலத்தில் கணினி அமைப்பொன்று பேணப்படவில்லை. தவணைப் பணக் குறிப்புப் புத்தகங்களைப் பராமரிப்பட்டதன் மூலம் தவணைக் கொடுப்பனவுகளைக் கண்டறியும் முறையில் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.FSB 5 என்னும் தவணைப் பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டு அறிக்கைகள் மாவட்ட அலுவலகத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்குறைபாடுகளைத தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு புதிய கணினி அமைப்பைத் தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளன. GIZ நிறுவனத்தின் ஆதரவுடன் ERP மென்பொருள் கொள்வனவு செய்தவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது அத்தரவு அமைப்பு சபைக்கு ஏற்றவாறு நவீனமயமாக்கப்படுகின்றது. அவ்வமைப்புத் தாபிக்கப்பட்டதும் வங்கிகளின் அமைப்புடன் நேரடித் தொடர்புகளைப் பேணுவதன் மூலம் தரவுகளை உள்ளிடுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படும்.

நிலவிய பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாகப் பின் தவணைப் பண அறவீடுகள் கணினிமயமாக்குவதற்கு முடியாது போயுள்ளதுடன்,2022ஆம் ஆண்டு தொடக்கம் மீண்டும் பின் தவணைப் பண அறவீடுகள் கணினியமயாக்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

iii **<u>12 (ஏ) வதுபிரிவு</u>**

முறையாகப்பங்களிப்புப் பணத்தைச் செலுத்தாதபங்களிப்பாளர்களுக்குத் தேறிய தவணைப்பணம் மற்றும் வட்டி செலுத்தப்படுவதாக,1987 ஆம் ஆண்டின்452/12 இலக்கவர்த்தமானியின் 13வது கட்டளையின் மூலம் காட்டப்பட்டுள்ளது. கணக்கீடுகள் ஒரு உயிரியலாளரால் மேற்கொள்ளப்பட்டதாகும்.

iv <u>15வது பிரிவு</u>

15 பிரிவின் கீழ் தவணைப் பணக் கொடுப்பனவை உதாசீனம் பங்களிப்பாளர்களுக்கு சலுகைக் காலத்தை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் சபைக்கு உள்ளது. அதற்கமையக் கணக்காய்வின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள அவதானிப்புகளின் அடிப்படையாகக் கொண்டு, முழுமையாகத் தவணைப் பணம் செலுத்தியுள்ள பங்களிப்பாளர்களுக்குச் சலுகைக் காலத்தை வழங்கிப் பங்களிப்பைச் செயற்படுத்தி ஓய்வூதிய உரித்துரிமையை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குஎதிர்பார்க்கப்படுகிறது.

v <u>27 (1) வது பிரிவு</u>

2010 ஆம் ஆண்டாகும் போது,கமக்காரர் ஓய்வூதிய நிதியம் பூஜ்யமாகியதால், 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கமக்காரர் ஓய்வூதியத்தைக் கொடுப்பனவு செய்யும் பொருட்டு அம்முன்மொழிவுத் திட்டத்தில் பணம் அற்ற காரணத்தால்,நிதியமைச்சினால் வழங்கப்பட்ட சிபாரிசி மற்றும் அறிவுறுத்தல்களுக்கமைய, கமத்தொழில் காப்புறுதி மற்றும் கடற்றொழில் ஓய்வூதியத் திட்டங்கள் மூலம் பணம் பெற்றுக் கொண்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்டபணம் கடன் தொகையாகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், இக்கடன் தொகை படிப்படியாக மீளளிப்புச் செய்வதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) <u>சான்றுப் பத்திரத்தின் 6 வது பிரிவு</u>

1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கமக்காரர்ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் நலன் திட்டச் சட்டத்தின் 15(1) வது பிரிவின் பிரகாரம், முறையே ஐந்து தவணைகளை செலுத்தத் தவறிய எவரேனுமொரு பங்களிப்பாளருக்கு அவருக்கு வழங்கப்பட்ட சான்றிதழின் கீழான நன்மைகள் உரித்தற்றதாகும். அதற்கமைய, இப்பங்களிப்பாளர்கள் அடுத்தடுத்த 05 தவணைகளைச் செலுத்த தவறியதால், பங்களிப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இப்பங்களிப்பாளர்கள் செலுத்திய தவணைகளைக் கருத்திற் கொள்ளும் போது, முறையாகக் கொடுப்பனவுகளை மேற்கொண்டிருப்பது, முறையே65% மற்றும் 35% தவணைகளை மட்டுமேயாகும். எனவே, தேறிய தவணைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3.2 <u>முறையற்றக் கொடுக்கல் வாங்கல்கள்</u>

(அ) காப்புறுதி முன்மொழிவுத் திட்டங்களில் தவணைப் பணத்தைத் தீர்மானிக்கும் போது, அத்தவணைப் பணத்தின் பொருட்டு நிர்வாகம் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளின் குறிப்பிட்ட சதவீதத்தை உள்ளீர்ப்புச் செய்தல் வேண்டும். இது காப்புறுதி நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்படும் பொதுவான நடைமுறையாகும். கமத்தொழில் காப்புறுதிச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் கமக்காரர் ஓய்வூதிய திட்டம், அரச மானியங்களை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டதால், அதன் பொருட்டு இலாபம் தவணையின் பொருட்டு உள்ளீர்க்கப்படவில்லை. பங்களிப்பாளர்கள் விட்டு விலகும் போது அல்லது தேறிய தவணைப் பணத்தைக் கணக்கிடும் போது குறித்த செலவின் பொருட்டு குறிப்பிட்ட சதவீதத்தை கழித்துக் கொள்ளவது காப்புறுதி நடை முறையில் உள்ளடக்கப்பட்டுள்ள பொதுவான நடை முறையாகும். அதற்கமைய, இக்கணக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாது சுய நிதி முன்மொழிவுத் திட்டங்களைச் செயற்படுத்த முடியாது.

(ஆ) முறையாகப் பங்களிப்புப் பணத்தைச் செலுத்தாது, பங்களிப்பாளர்களுக்குத் தேறியதவணைப் பணம் மற்றும் வட்டி செலுத்தப்படுவதாக,1987 ஆம் ஆண்டின் 452/12 இலக்கமுடைய வர்த்தமானியின்13வது கட்டளையின் மூலம் காட்டப்பட்டுள்ளது. இக்கணக்கீடு ஒரு உயிரியலாளரால் மேற்கொள்ளப்பட்டதாகும்.

(இ) பிரதான காரியாலயம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் உள்ள அலுவலக ஆளணியினர் பொதுவாகச் சேவையில் ஈடுபடுவதால், இவ்வாறு விகிதாசாரம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், தொடர்ந்து வரும் நாட்களில் எதிர்காலத்தில், இந்த விகிதங்கள் பணிப்பாளர் சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டு ஆய்வு செய்யதவற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

3. 3 <u>செயல்திறன்</u>

(அ) கடந்த ஆண்டுகளில் முன்மொழிவுத் திட்டத்தில் ஏற்பட்ட நெருக்கடியான நிலையில் ஓய்வூதியம் வழங்கும் பொருட்டு காத்திருப்போர் பட்டியலில் சுமார் 20,000 விவசாயிகள் இருந்ததுடன், இதுவரையில் இந்நிலையின் பொருட்டு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளது. கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 1700 விண்ணப்பங்களின் பொருட்டும் இதுவரை ஓய்வூதியம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) வருட ஆரம்பத்தில் கமக்காரர்களின் ஓய்வூதியம் உடல் பெலவீன மாதாந்தக் கொடுப்பனவு செய்யப்படும் கமக்காரர்களின் வாழ்க்கைக் குறிப்பத்

தகவல்களைப் பெற்றுக் கொண்டு கமக்காரர்கள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்படும்.

(இ)

i,ii,iii கமக்காரர்களின் ஓய்வூதியத் திட்டத்தில் பங்களிப்பினைப் பெற்றுக் கொண்டுள்ள விவசாயிகள் 60 வயதை அடைவதற்கு முன்னர், விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. சகல மாவட்டங்களிலும் 60 வயது நிறைவடைவதற்கு அண்மித்துள்ள உள்ள விவசாயிகளின் பெயர்ப் பட்டியலை மாவட்ட பிரதி/உதவி பணிப்பாளர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய அவர்கள் கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் அறிவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சபையின் கணினி அமைப்பை மாவட்ட அலுவலகங்களுடன் இணைத்ததன் பின்னர், எந்தவொரு விவசாயிக்கும் எந்தவொரு மாவட்ட அலுவலகத்திலிருந்தும் தமக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

iv,v ஓய்வூதியத் திட்டம் இப்போது தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருவதால், இந்தத் திட்டத்தின் நம்பகத்தன்மை இப்போது அதிகரித்துள்ளது. தவணை செலுத்துவதை நிறுத்திய பங்களிப்பாளர்களுக்குத் தேறியதவணைப் பணம் மற்றும் வட்டி வழங்கப்படுகின்றது.

vi,vii,viii கமக்காரர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் பங்களித்த பங்களிப்பாளர்களின் விண்ணப்பங்கள் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின், மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்களை அறிவூட்டி, வினைத்திறனான மற்றும் நட்புடனான வாடிக்கையாளர் சேவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ix,x **சபையின்** மூலம் செயற்படுத்தப்படும் ERP தரவு அமைப்பின் மூலம், தங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு போட்டி நிறுவனங்கள் மூலம் செயற்படுத்தப்படும் நடைமுறைகளை நடைமுறைப்படுத்தி இப்பிணக்குகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு இயலுமாகவிருக்கும்.

3. 4 <u>முகாமைத்துவச் செயற்பாடுகள்</u>

(அ) ஓய்வூதியத் திட்டத்தில் ஏற்படும் மாற்றங்களின் அறிக்கைகள் இறுதிக் கணக்குகளை சமர்ப்பிக்கும் போது சமர்ப்பிக்கப்படும்.

(ஆ) கமக்காரர்கள் ஓய்வூதியத் திட்டம் ஆரம்பத்தில் மரணம் மற்றும் உடல் பெலவீனப் பணிக்கொடையைக் கொடுப்பனவை நடைமுறைப்படுத்தும் பொருட்டு பங்களிப்பாளர்களுக்குரிய தவணைப் பணத்தை இலங்கைக் காப்புறுதிக்

கூட்டுத்தாபனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டதுடன், அவ்வாறு செலுத்தப்பட்ட தவணைப் பணத்தை சபையில் தக்கவைத்து நிதியமொன்று உருவாக்கப்பட்டது. கணக்காய்வில் சுட்டிக்காட்டியுள்ளவாறு செலுத்தப்பட்ட தவணைப் பணம் தொடர்பாக மீள்மதிப்பாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) கமக்காரர்கள் ஓய்வூதியம் வழங்கும் செயல்முறை தபால் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய, ஓய்வூதியம் வழங்கப்பட்ட மாதத்தின் செலுத்தப்படாத ஓய்வூதியம் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் சபைக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். கொரோனா தொற்று நிலைமை மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக சில தாமதங்கள் ஏற்பட்ட போதிலும், தற்போது அந்த தாமதங்களைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், செலுத்தப்படாத ஓய்வூதிய பட்டியலைக் குறிப்பிட்ட திகதிகளுக்குள் சபைக்கு அனுப்பி வைக்கும் படி மாவட்ட கணக்காளர்களை அறிவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) 1987 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் தவணைப் பண அறவீடுகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும் தவணை பதிவுப் புத்தகத்தில் குறிப்பிடுவதன் மூலம் அடையாளம் கண்டு கொள்ளக் கூடியவாறு தயாரிக்கப்பட்டுள்ள இத்தவணைப் பணக் குறிப்புப் புத்தகத்தின் தகவல்களை ஆய்வின் மூலம் ஒன்றுசேர்த்து பிரதிகள் எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் மிகச் சிரமம் காரணமாக எதிர்பார்த்தவாறு தகவல் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

(உ) கமக்காரர்கள் ஓய்வூதியத் திட்டம் 1987 ஆம் ஆண்டு ஆரமப்பிக்கப்பட்ட திட்டமாகும் என்பதுடன், எனவே ஆரம்ப காலத்தில் கணினி அமைப்பொன்று பேணப்படவில்லை. தவணைப் பணக் குறிப்புப் புத்தகங்களைப் பராமரிப்பட்டதன் மூலம் தவணைக் கொடுப்பனவுகளைக் கண்டறியும் முறையில் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. FSB 5 என்னும் தவணைப் பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டு அறிக்கைகள் மாவட்ட அலுவலகத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்குறைபாடுகளைத தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு புதிய கணினி அமைப்பைத் தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளன. GIZ நிறுவனத்தின் ஆதரவுடன் ERP மென்பொருள் கொள்வனவு செய்தவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது அத்தரவு அமைப்பு சபைக்கு ஏற்றவாறு நவீனமயமாக்கப்படுகின்றது. அவ்வமைப்புத் தாபிக்கப்பட்டதும் வங்கிகளின் அமைப்புடன் நேரடித் தொடர்புகளைப் பேணுவதன் மூலம் தரவுகளை உள்ளிடுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படும்.

நிலவிய பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாகப் பின் தவணைப் பண அறவீடுகள் கணினிமயமாக்குவதற்கு முடியாது போயுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டு தொடக்கம் மீண்டும் பின் தவணைப் பண அறவீடுகள் கணினியமயாக்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

(ஊ) கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தை நன்கு நிர்வகிக்கப்பட்ட முறையில் பேணும் பொருட்டு Enterprise Resources Planமுகாமைத்துவத் தகவல் அமைப்பின் தேவைப்பாட்டை சபை அடையாளம் கண்டு, இம் மென்பொருளை சபைக்குப் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட நாட்களாக முயற்சித்தும் பல்வேறு காரணங்களால் அந்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. GIZ நிறுவனத்தின் மூலம் இத் தகவல் அமைப்பைச் சபைக்கு பெற்றுக் கொள்ளும் பொருட்டு உதவி வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. அதற்கமைய, தகவல் அமைப்பைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பெறுகைகள் செயல்முறை முடிவுற்று, மென்பொருளை சபைக்குப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

(எ) GIZ நிறுவனம் உதவி கீழ் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் ERP தகவல் அமைப்பைப் பெற்றுக்கொள்ளும் வரையில் புதிய ஓய்வூதியத் திட்டத்தின் தகவல்களைப் பேணும் பொருட்டு சபையின் வன்பொருள் மற்றும் வலையமைப்பு நுட்பவியலாளரின் மூலம் இலகு தகவல் அமைப்பொன்று வடிவமைக்கப்பட்டது. இதுவரை, புதிய ஆட்கள் பற்றிய தரவுத் தகவல்கள் அமைப்பில் உள்ளிடப்பட்டுள்ளது. தொடர்ந்து வரும் நாட்களில் தவணைப் பணம் செலுத்தாத விவசாயிகளுக்கு SMS மூலம் அறிவூட்டுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர்ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் நலன்கள் திட்டத்தின்2022 திசம்பர் 31 இல் முடிவுறும்வருடத்தின்பொருட்டான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின்12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

3 நிதி கூற்றுக்கள்

1.1 கருத்து

1.2 கருத்தின்பொருட்டு அடிப்படை

(அ) நீண்டகால மரத்தளபாடங்கள் மற்றும் சாதனங்கள் கணினி உதிரிப் பாகங்கள் அலுவலக உபகரணங்கள் போன்றவை பயன்படுத்தப்படினும், அவ்உபகரணங்களை மதிப்பிட்டு பயனுள்ள ஆயுட் காலத்தைமதிப்பிட முடியாதுடன், பல சொத்துக்கள் பாவனையிலிருந்து அகற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளதுடன், மற்றும் கணினிகள் போன்ற உபகரணங்கள் இற்றைப்படுத்தக் கூடிய நிலையில் இல்லாதுள்ளது.இச்சொத்துக்களை முழுமையான வினைத்திறனுடன் பயன்படுத்தக் கூட நிலையில் அற்ற காரணத்தால் எதிர்காலத்தில் அவற்கை பாவனையிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) சபையினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஏனைய சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், அதனை 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுமதிப்பீட்டிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

(இ) இந்த உத்தியோகத்தர்கள் இம்முன்மொழிவுத் திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக சேர்க்கப்பட்டுள்ளதுடன், தற்போது வேறு கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர். இம்முன்மொழிவுத் திட்டத்திற்குரிய கடமைகளை வேறு விதமாக ஏனைய உத்தியோகத்தர்களினால்மேற்கொள்ளப்படுவதாலாகும்.இந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் முன்மொழிவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.போதுமான எண்ணிக்கையிலான பணியாளர்கள் நியமிக்கப்பட்டதன் பின்னர், முன்மொழிவுத் திட்டத்துடன் தொடர்புடைய ஊழியர்களின் சம்பளம் முன்மொழிவுத் திட்டத்திற்கு உள்வாங்கப்படுவதற்கு ஏற்படாகியுள்ளது.

(ஈ) இந்தத் தொகையானது மரணப் பணிக்கொடை நிதியத்தில் மற்றும் கடற்றொழிலாளர்ஓய்வூதிய நிதியத்தினால் இணக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்போது சரியாகக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) இம்முன்மொழிவுத் திட்டம் சுயநிதி அடிப்படையில்செயற்படாததுடன், தவணைப் பணத்தைத் தீர்மானிக்கும் போது அரசு மானியத்திற்கு உள்ளீர்க்கப்படுவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கமையவருடாந்தம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ஓய்வூதியப் பொறுப்பு அதிகரிப்பதுடன், தேறிய சொத்துக்களின்பெறுமதி குறையவடையும். இக் காரணங்களால், இம்முன்மொழிவுத் திட்டத்தின் பொருட்டு புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்குஊக்குவிக்கப்படவில்லை.

1.3 நிதிக் கூற்று தொடர்பான முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்பு

1.4 நிதிக் கூற்றில் கணக்காய்வு தொடர்பாகக் கணக்காய்வாளரின் பொறுப்பு.

2. பிற சட்ட ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை.

3. செயற்பாட்டு ஆய்வு

3.1 சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்காமை

(அ) i 5 மற்றும் 6ஆம் பிரிவுகள்

கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டம் தற்போது நிதி நிலைத்தன்மையுடன் செயற்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கணினிமயமான சூழலில் அந்தச் செயல்பாடுகளை மேற்கொள்ள முழு கணினி தரவு அமைப்பு தற்போது தயாராகி வருகிறது. இதற்கமைய2023ஆம் ஆண்டு கடற்றொழில் அமைச்சுடன் இணைந்து இத்திட்டத்திற்கு கடற்றொழிலாளர்களை ஈர்க்கும் வகையில் புதிய கடற்றொழிலாளர்ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ii. 7 வது பிரிவு

60 வயது பூர்த்தியான பங்களிப்பாளர்களின் பட்டியல் மாவட்ட அலுவலக மட்டத்திலிருந்து பெறப்பட்டு, அவ்வவ் மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அப்பட்டியல்கள்களின் அடிப்படையில், ஓய்வூதியம் உரித்துடைய கடற்றொழிலாளர்களை அறிவூட்டும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் தொடர்பான நடவடிக்கைகள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதால், இந்நிலைமை அத்திணைக்களத்தின் தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட கடற்றொழில் அலுவலகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், செய்திப் பத்திரிகை அறிவித்தல் மூலம் கடற் றொழிலாளர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தாமதமாக பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு, தாமதத்திற்கான காரணங்கள் தெரிவிக்கப்படும் வரையில் நிலுவை ஓய்வூதியக் கொடுப்பனவுகள்

மேறகொள்ளப்படாது. தற்போது நிலுவைத் தொகையுடன் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

iii <u>13 (ஊ) வது பிரிவு</u>

சபையினால் தற்போது பங்களிப்பாளர் செலுத்தும் காப்புறுதித் தவணைப் பண அடிப்படையில் அத்தவணைப் பணத்தின் பொருட்டு வட்டி விகிதத்தை செலுத்துவதுடன், மேலும் இத்தேறிய தவணைக் கொடுப்பனவுஉயிரியலாளர் ஒருவரின் ஆலோசனையின் பேரில் மேற்கொள்ளப்படுகின்றது.

iv <u>16 வது பிரிவு</u>

இது தொடர்பாக பங்களிப்பாளர்கள் ஓய்வூதியத்தில் பங்களிக்கும் போது அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியப் பத்திரத்தில் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், பங்களிப்பாளர்களிடமிருந்து தவணைப் பணம் மாவட்ட கடற்றொழிலாளர்ள விரிவாக்க அலுவலர்களால் அறவிடப்படுவதுடன், அப்பங்களிப்பாளரின் பங்களிப்பு இரத்துச்செய்யப்பட்ட பங்களிப்பாளரா என்பது பற்றி ஆராய்ந்து தவணைப் பணத்தை அறவிடுதல் தொடர்பாகத்தேவையான அறிவுறுத்தல்கள் தொடர்ச்சியாக அவர்களுக்கு வழங்குவதற்குச் சபையினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

v <u>20 வதுபிரிவு</u>

கடற்றொழிலாளர்ஓய்வூதியத் திட்டத்தின் புதிய ஆட்சேர்ப்பு 2023ஆம் வருடத்தில் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடாகியள்ளதால், கடற்றொழிலாளர் ஓய்வூதிய ஆலோசனைக் குழு இவ்வருடத்தினுள் கூட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

vi <u>26 வது பிரிவு</u>

சபையின் மேலதிக நிதிகள் நிதியை, விடயத்திற்குரிய அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளசுற்றுநிருபம் மற்றும் அறிவுரைகளுக்கமைய அரச வங்கிகளில்மட்டும் திறைசேரி உண்டியல்களின், திறைசேரி முறிக்களின் மற்றும் நிலையான வைப்புக்களின்முதலீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) <u>396 (ஊ) (iii)</u>

வழங்கப்பட்டு ஆனால் கொடுப்பனவுகளின் பொருட்டு சமர்ப்பிக்கப்படாது ஒரு மாதத்திற்கும் மேலாக உள்ள காசோலைகளின் பொருட்டு ஒரு தனிப் பதிவேடு பேணப்படுவதுடன், அக்காசோலைகள் தொடர்பாக காசோலையின் உரிமையாளர்களினால் நேரடியாகச் செய்யப்படும் கோரிக்கைகளின் பொருட்டு மாவட்ட அலுவலகத்தின் சிபாரிசுடன் மீண்டும் அப்பங்களிப்பாளருக்குக் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

<u>177(1)</u>

சேகரிக்கப்பட்ட பணத்தை சேகரித்த உடனேயே வங்கிக்கு வைப்புச் செய்யும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட கடற்றொழில் மாவட்ட அலுவலகங்களுக்கு மீண்டு அறிவுரைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3.2 முகாமைத்துவச்செயற்பாடுகள்

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் ஆரம்பத்தில் அரசின் மானியத்துடனானமுன்மொழிவுத் திட்டமாகச் செயற்படுத்தப்பட்டது. பின்னர், அரசின் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களுக்கமைய, காப்புறுதி தவணைப் பணத்தை அதிகரிக்காது, ஓய்வூதியத்தை பல மடங்கு ஓய்வூதியத்தை அதிகரித்ததால், காப்புறுதி தவணைப் பணம் வருமானத்தை விட ஓய்வூதியச் செலவு அதிகரித்தது. இம்முன்மொழிவுத்திட்டமானது நிதி ரீதியான சாத்தியங்கள் இல்லாததால், இதுவரையில் ஆட்சேர்ப்புக்களுக்கான ஊக்குவிப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை.